3298

சிவரா
விழ்ந்து.

சங்கநாதம்—2

# மீவார வீழ்ச்சி.

(ஓர் உண்மைத் தேசீய சரித்திரம்)

வங்க மஹா கவி
பாபு துவிஜேந்திரலால் ராயின்
'மேவாட் பதன்' பாஷாந்தரம்.

ஆசிரியர் தினகரன்
எழுதியது.

பதிப்பாசிரியர்
பகப்பொன், கு. ஆறுமுகம் பிள்ளை



1937.

உரிமைப்புடையது.] [விலை அணா 12.

# இடம்.

"மீவார வீழ்ச்சி" கீழ்க்கண்ட இடங்களில் கிடைக்கும் :—

என். பி. அண் கோ,
(N. B. & Co.)
(ஆறறை)
112, மோகல் வீதி,

கு. நடராஜன்,
89, மோகல் வீதி,
(டெய்லர் ஷாப்)

இரங்கோன்.

# இணைப்பு.

திரு. தினகரன் அவர்களின் "காகிதப்படகு" பிரசுரங்களில் "மஹாத்மா காந்தி"யும், "ஜோடிக் கதை"யும் எனது "சங்கநாத" பிரசுரங்களுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன.

பதிப்பாசிரியன்.

# முகவுரை.



இந்தியாவுக்குச் "சுயராஜ்யம் ஏன்" வேண்டுமென்று முதற் சங்கநாதம் முழங்கியது.

"மீவார வீழ்ச்சி"யை இரண்டாவது சங்கநாதம் ஊதுகிறது.

மீவாரமிருக்கட்டும். வீழ்ச்சியிற் சங்கூதும் வழக்க முண்டோ என்று உடனே ஒரு கேள்வி எழுகிறது.

பாரதப் போரில் அபிமன்யு வீழ்ந்தபோது, பரமாத்மா கிருஷ்ணன், பாஞ்சசன்யம் என்னும் சங்கை முழக்கினரென்று அடுத்தாற்போல் அதற்குச் சமாதானம் பிறக்கிறது.

மீவாரம் வீழ்ந்தது வீணிலல்ல. வீரத்தில் வீழ்ந்தது; வீரத்தில் வாழ்ந்தது; கல்லுங் காவிரி, புல்லும் பூமியுள்ள வரை, அதன் அமர நாமம், வீரத்தால் வளர்கிறது. வீர உலகில் ஒரு நாடு இப்படியும் இருந்ததுண்டா அல்லது இனியிருக்கத்தான் போகிறதா என்ற ஈடுஜோடு அற்ற பெயரை எய்திவிட்டது. இதிகாச பிரகாசத்தில் இன்றும் அது சிரஞ்சீவியாயிருக்கிறது. "ஜீவனை (ஜீவனிட முள்ள ஆசையை) விட்டவன் வாழ்வான். விடாதவன் வீழ்வான்" என்று பகவான் இயேசுநாதர் கூறியிருக்கிறார்.

"மாலினி மாதவ"த்தையும், "உத்தர ராமாயண"த்தையும், "சாகுந்தள"த்தையும் மானிலத்துக் குதவிய பவபூதி, காளிதாஸ் என்னும் இரு காவியத் தச்சர்களோடு, பாரத தேசத்தில் நாடக பரம்பரை அருகிவிட்டதென்று சொல்லப்பட்ட காலம் ஒன்றிருந்தது. அந்தக் குறை, எவராலும் பூர்த்தி செய்யப்படவில்லை.

வங்காளத்தில் நவயுகம் பிறந்தது. விஸ்வ பாரதி ரவீந்திரநாத் தாகூர், ரமணீயமான காவிய உத்தியானம் உண்டாக்கினார். வித்யாசாகர், அதற்கு வசனகாவிய மாகிறவேலிகட்டி விஸ்தரித்தார். பாபு துவிஜேந்திரலால்ராய், நாடகப் பூஞ்சோலை நறுமணந் திகழ நாட்டினார்.

பற்பல பாஷைகளில், பல பல ஆசிரியர்களால் எழுதப்பட்ட பல நாடகங்கள் படித்து வருகிறோம். அவைகளிலெல்லாம், துவிஜேந்திர பாபுவின் நாடகங்களிலிருக்கிற அவ்வளவு ரஸபாவம் இருக்கிறதா? இருக்கத்தான் முடியுமா? மனஸை ஆட்டியசைக்கக்கூடியவைகளாகவும், ஹிருதய தந்திகளில் அனுராகமான—சுக—சொர்ண கீதம் வாசிக்கக்கூடியவைகளாகவும் அந்த அபூர்வ நாடகங்கள் இருக்கின்றன.

அவைகளிலே "மீவார வீழ்ச்சி" தனியாசனத்தில் வீற்றிருக்கிறது. வீரத்தின் புல்லரிக்கும் விருத்தாந்தம், காடாக்கினி போன்ற தேசாவேசக் கனகனப்பு, வையமளாவிய விஸ்வ பிரேமை, இவைகளெல்லாம் மீவார வீழ்ச்சியிற் பிரவஹித்துக்கொண் டிருக்கின்றன. காதல் ரஸனை கசிகின்றது. சோக பாவம் துயரத்திலாழ்த்துகிறது. பதி பக்தியின் பவித்திரத் தன்மை படிக்கப் படிக்கப் பரவசப்படுத்துகிறது. சர்வத்திர ரசனைகளுக்கும் இந்நூலில் நிச்சயமான உச்சஸ்தானம் அளிக்கப்பெற்றிருக்கிறது. பாருங்கள், தயவு செய்து பாருங்கள்; இதன் உண்மை விளங்கும்.

கூட்டற் குறைத்தல் என்பன அறவேயின்றி, நேர் மொழிபெயர்ப்பாய், "மீவார வீழ்ச்சி" வெளிவருகிறது. மொழி பெயர்ப்பே யானாலும், ஆசிரியர் தினகரனுடைய

எழுத்துத்திறன், இந்நூலில் வெளிப்படையாய்ப் புலப்படு கிறதென்பது என் அபிப்பிராயம். அவர் எழுத்து நடை, படிப்பாளிகளை மட்டுமல்ல எழுத்தாளிகளையுங் கவரக்கூடிய தாயிருக்கிறது. அவர்தம் ஹிந்திமொழிபெயர்ப்புத் திற மையை, இந்நூலில் மட்டுமன்றி "ராட்டூர் வீரன் துர்க்காதா" விலும், தேசாபிமானத் துடிப்பை "ராணு பிரதாப சிம் மன்" "சுபாஷ்சந்திரா" (இவை யிரண்டும் பர்மா சர்க் காரால் பரிசுமுதல்) என்னும் நூல்களிலும், நாடகாலங்கார வன்மையை "மகாத்மா காந்தி"யிலும் கற்பனை சக்தியை "மகா மாயா" "ஜுலேக்கா" "புதுமைப்பெண்" முதலிய கதைகளிலும் கண்டிருக்கிறோம். இப்பெரியாருக்கு—பன் னூலாசிரியருக்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட் டிருக் கிறது.

தாய்நாட்டு யௌவன வாலிப மணிகளே! வனிதா ரத்தினங்களே! நுங்கள்பால் அறிவுப்பசி அதிகரித்துக் கொண்டிருக்கிற காலமிது. அனைத்தையும் அலசி அறியும் ஆராய்ச்சி, அநுதினமும் வளரும் நேரமிது. இத்தருவா யில் தங்கள் முன்னிலையில் இந்நூலை விநியோகிக்க முன் வந்த நான், எந்நிலையிலிருந்து வெளியிடுகிறேனென்று விப ரிப்பதற்கில்லை. சுருங்கச் சொல்லுகிறேன். பெரும் பிரயா சையின் பிரதி ரூபந்தான் இப்பிரதி. சாந்தியற்ற ஹிருத யச் சலனத்தின் பரிணாமிப்பு. எத்தனை யிடைஞ்சல்; இன் னல்கள்? என் செய்யலாம்? இந்நகரிற் பணச் செலவும் பலபடியிற் பன்மடங்கு. பாடும் பெரிது. பலனோ காலதேவ தையின் கைவசம்.

சகோதரர்களே! புத்தம் புதிய முறையில் வெளிவரும் சங்கநாத பிரசுரங்களைத் தாங்கள் பெரிதும் ஆர்வத்தால் ஆதரிப்பீர்களேயானால், அதன் வாயிலாகத் தமிழ்த்தாயின் சரணாரவிந்தங்களில், புத்தம் புதிய வாடாமலர்போன்ற நூல்களைச் சமர்ப்பணஞ் செய்ய அநுக்கிரகித்தருளுமென்று, அதன் ஆசிரியனும், பதிப்பாளனும், உரிமையாளனுமாகிய நான் உறுதி கூறுகிறேன்.

இந்நூலில் ஆங்காங்குக் காணும் பாடல்கள், பாரதியாரின் தேசிய காவிய பொக்கிஷத்திலிருந்து பொறுக்கிய பொறுக்குமணிகளாகும்.

இதனை வெளியிடும் முயற்சியில் நானா வகையிலும் நலம் புரிந்த நண்பர்களுக்கும், விற்பனை வழியிற் கைமாறு கருதாது நற்றுணையருளும், தோழர்களுக்கும், எனது மனமார்ந்த நன்றியைப் பக்தி பூர்வமாகப் பாதகாணிக்கையாக்குகிறேன்.

கு. ஆ.

# ஒரு சிறு சேதி !

மனிதனை மறதியில் தள்ளும் சம்ஸாரம் சஞ்சலமுடையது. புயற்காற்று வேகத்தில் அது அவனை எங்கோ கொண்டுபோய்விடுகிறது. இந்த ஒரு சிறு சேதி, முகவுரையில் வந்திருக்கவேண்டும்.

"மீவாரம்" என்னவோ என்றெண்ணவேண்டாம். அது வட இந்தியாவில்—ராஜபுதானத்தில் உள்ள ஒரு தேசம்-சிற்றரசுக்குட்பட்டது. இன்றைக்கும் அது சுதேச சமஸ்தானங்களில் ஒன்று யிருந்து வருகிறது. அதை யாள்பவருக்கு "உதயபுரி ராணு" என்று பெயர்.

அந்த மீவாரம், தனது சுதந்திரத்தைக் காப்பதற்காக மொகலாயர்களோடு எழுநூறு வருஷங்கள் இடைவிடாது போராடி விழ்கிறது. அந்த விர்த்தாந்தத்தைத்தான் சவிஸ்தாரமாய் இந்நூல் விஸ்தரிக்கிறது.

தயவுசெய்து நாடக பாத்திரங்களை ஞாபகஞ்செய்து கொண்டு நூலிற் பிரவேசியுங்கள் ! நூலின் முழு இன்பத்தையும் அநுபவிக்கலாம்.

பதிப்பாசிரியன்.

# நாடக பாத்திரர்கள்.

## புருஷ நடிகர்.

*ராணா அமரசிம்மன் ...மீவார தேசத்து ராஜா.
சகர சிம்மன் ...அமரசிம்மனின் பெரிய தந்தை.
மஹாபத்கான் ...பிரதம மொகல் சேனாபதி—சகர சிம்மன் குமாரன்—மதம் மாறியவன்.
அருண சிம்மன் ...மஹாபத்கான் மருமகன்—சத்தியவதியின் குமாரன்.
கோவிந்த சிம்மன் ...மீவாரப் பிரதம சேனாபதி.
அஜய சிம்மன் ...கோவிந்த சிம்மன் குமாரன்.
கஜ சிம்மன் ...ஜோதிபுரி அரசன்.
ஜிஹாங்கிர் ...மொகல் சக்கிரவர்த்தி.
ஹிதாயத் அலி ...
அப்துல்லா ... } மொகல் சேனாபதிகள்.
ஹுஸேன் ...ஹிதாயத் அலியின் வேலைக்காரன்.

## ஸ்திரீ நடிகர்.

ராணி ருக்மணி ...ராணா அமரசிம்மன் பட்டஸ்திரி.
மானஸி ...ராணா அமரசிம்மன் கன்னிகை.
சத்தியவதி ...சகரசிம்மன் குமாரி—மஹாபத்கான் அக்காள்.
கல்யாணி ...கோவிந்த சிம்மன் மகள்—மஹாபத்கான் மனைவி.

---

*ராணா—மீவார தேசத்து அரசர்களின் மரபுப் பெயர்.

# மீவார வீழ்ச்சி!

முதலாவது அங்கம்.] [முதற் காட்சி.

இடம் :—*ஸாலும்பர் அரசன் கோவிந்த சிம்மன் வீடு.

காலம் :—பகல் பத்து மணி.

[கோவிந்த சிம்மனும் அவன் குமாரன் அஜய சிம்மனும் சம்பாஷித்துக்கொண்டு நிற்கின்றனர்.]

**கோவிந்த சிம்மன் :**—மீவாரத்தின் மீது, மொகல் சைன்யம் படையெடுத்து வருகிறதென்று ராணாஜிக்கு யார் சொன்னார் அஜயா?

**அஜய சிம்மன் :**—யாரோ தெரியாதப்பா எனக்கு!

**கோவிந்த :**—ராணாஜி உன்னிடம் வேறு என்னதான் சொன்னார்?

**அஜய :**—பாதுஷாவோடு சமாதானஞ் செய்துகொள்ளப் போகிறாராம். மந்திரி பிரதானிகள் எல்லோரும் நாளைக் காலை தர்பாருக்கு வரவேண்டுமாம். தங்களையும் அழைத்து வரும்படி ஆக்ஞாபித்தார்.

---

* சாலும்பர் என்பது மீவாரத்தில் ஒரு மாகாணம்—பாளையப்பட்டு.

கோவிந்த :—நான் ஏன் ?

அஜய :—சமாதானத்திற்காக !

கோவிந்த :—சத்ருருக்களோடு சமாதானஞ் செய்வதற்காகவா !

அஜய :—ஆம் !

கோவிந்த :—எனக்கென்ன தெரியும் சமாதானஞ் செய்ய சமாதானம் என்கிற வார்த்தையைக்கூட நான் உச்சரித்ததில்லையே. இருபத்தைந்து வருஷங்கள் கேவலம் யுத்தஞ் செய்யத்தான் பழகினேன். சந்தி—சமாதானம் என்கிற சமாசாரங்களே தெரியாது. இரணகளத்தில் வாளோடு வாள் மோதுகிற ஜின்கார சப்தம், பேரிகளின் பைரவ நாதம், குதிரைகளின் கர்ஜனை, காயம்பட்டவர்களின் அழுகுரல், வீரர்களின் வீர முழக்கம் இவைகளைத்தான் கேட்டிருக்கிறேன். சத்ருருக்களோடு சந்தி செய்வதைக் கனவிற்கூடக் கண்டதில்லை; காதாற் கேட்டதுமில்லை. அது எந்த ஜாதியைச் சேர்ந்தது, என்ன பதார்த்தம் என்பதே எனக்குத் தெரியாது. (அஜய சிம்மன் எதும் பதில் கூறாமல் நிற்கிறான். கோவிந்த சிம்மனும் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தவன் மறுபடியும் அஜய சிம்மனைக் கேட்கிறான்) ஏன் சந்தி செய்து கொள்ளவேண்டுமாம் ? அதற்கென்ன அவஸ்யமும் அவசரமும் வந்தது ?

**அஜய**:—ஏதோ கொஞ்சக் காலமாகத்தான் மீவாரம் மேன்மைக்கு வந்துகொண்டிருக்கிறதாம். தன தான்ய சம்பத்தால் தலை தூக்கி நிற்கிற மீவாரத்தின் சுதந்திரத்தையும் சுந்தரத்தையும், நரவதத்தால் (மனித பலி) நாசஞ் செய்ய ராணாஜிக்கு விருப்பமில்லையாம்.

**கோவிந்த**:—வாஸ்தவம். நரவதத்தையும் நாசகாரியத்தையும் நானிலத்தில் யாரும் விரும்பமாட்டார்கள்தான். அதற்காகச் சத்ருக்களின் செருப்பைத் தலையிலே தூக்கி வைத்துக்கொள்ள வேண்டுமா என்ன? என்றைக்கு போக விலாசமானது, சுவர்கிய ராணா பிரதாப சிம்மனுடைய சுயேச்சா பூர்வமான சரித்திரத்தின் ஸ்தானத்தில், பலவந்தமாய்ப் புகுந்து அதிகாரஞ் செய்ய ஆரம்பித்ததோ, அன்றைக்கே மீவாரத்தின் வீழ்ச்சி வெகு தூரத்தில் இல்லை என்பது எனக்கு நன்றாய்த் தெரிந்துவிட்டது. அந்த மஹா புருஷன் சாகும்போது **"எனது புத்திரன் அமர சிம்மன் காலத்தில், மீவாரம் மோகலாயர்களின் வசமாகி விடும்"** என்று சொன்னது சரியாய் முடிந்தது. மொகலாயர்களும் பலோன்மத்தத்தால் பைத்தியக்காரர்களாகவும், குருடர்களாகவும் ஆகிக்கொண்டிருக்கிறார்கள். சலோ! இந்த முறை என்ன மிஞ்சப்போகிறது பார்க்கலாம்?

அஜய :— மேலும் மொகலாயர்களை எதிர்த்துப் போராடுவது மீவாரத்தால் முடியாத காரியம் என்றும் ராணாஜி கூறினர்.

கோவிந்த :— அஜயா! ஏன் முடியாது? நீயுங்கூட ராணாவின் தரப்பில் சேர்ந்துகொண்டாயா என்ன? நாமெல்லாம் அடிமைகளாகி, அதிகாரம் என்கிற நாகத்தடியில் மாட்டிக்கொண்டு, கேவலம் மிருகங்கள் போல் வாழ்வதை நீயும் விரும்புகிருயா? மொகலாயர்கள் தில்லிக்குப் பாதுஷா (சக்கிரவர்த்தி) என்பது எனக்குத் தெரியும்! பாதுஷாவுக்கு விரோதமாய்ப் புரட்சி செய்வது பாபம் என்பதையும் நான் அறிவேன். ஆனால் மீவாரம் இதுவரை யாருக்காவது அடிபணிந்திருக்கிறதா? கோவிந்தசிம்மனுடைய மூக்கில் மூச்சுள்ள வரை, மீவாரத்தின் சுதந்திரத்தில் யார் தலையிடுகிறார் பார்க்கிறேன்? ஏறக் குறைய எழுநூறு வருஷங்களாய் இந்த தேசத்தின் ரத்த துவஜமானது, ஆயிரக்கணக்கான பூகம்பங்களையும், பேரிடிகளையும், சுழல் மாருதங்களையும் பொருட்படுத்தாமல் அபிமான பூர்வமாகத் தலை நிமிர்ந்து நிற்கவில்லையா? அந்தத் தலையெடுப்பு, கேவலம் மொகலாயர்களின் செக்கச் செவந்த கண்களைக் கண்டுதானா குனிந்துகொள்ளப் போகிறது? நல்லது அஜயா! ராணாவிடம் போய்ச் சொல். நான் இதோ வருகிறேன்.



கோவிந்த சிம்மன்:—ஏ! பிரியா! அடியேனுக்குப் பிரியமானவனே! என்னைவிட்டுப் பிரியாதவனே! நீ எதுவரை என் கையிலிருக்கிறாயோ அதுவரை மஹாராணா பிரதாப சிம்மருக்கு அவமானம் வராது.

பக்கம் 5.

[அஜய சிம்மன் செல்லுகிறான். கோவிந்த சிம்மன் அங்கே சுவற்றில் தொங்கிக்கொண்டிருந்த வாளை எடுத்து உறையில் நின்றும் உருவிக்கொண்டே கூறுகிறான் !]

"ஏ! பிரியா! அடியேனுக்குப் பிரியமானவளே! என்னை விட்டுப் பிரியாதவளே! நீ எதுவரை என் கையிலிருக்கிறாயோ அதுவரை மஹா ராணா பிரதாபசிம்மனுக்கு அபமானம் வராது. அடி என் ஆசைக் கிளியே! உன்னை நான் இத்தனை நாளாய் மறந்துவிட்டிருந்தேன். அதனாலேதான் நீ இவ்வளவு மெலிந்து விட்டிருக்கின்றனை? பரவாயில்லை. வியாகூலப்படாதே! இந்தத் தடவை உன்னை என்னோடு மீவாரத்தின் இரணகளத்துக்கு எடுத்து ஏகிறேன். அங்கே சத்துருக்களின் இரத்தத்தைச் சுடச் சுட உனக்கு ஊட்டுகிறேன். இந்த ஒரு தரம் என்னை மன்னித்துவிடு! கட்டியணைத்துக்கொள்!" (வாளை நெஞ்சோடு அணைத்துக்கொள்கிறான். அப்புறம் அதை மெதுவாய்ச் சுழற்றத் தொடங்குகிறான்.) "இல்லை! கை நடுங்குகிறது! இனி உன் மரியாதையை என்னால் இந்தத் தடவை காப்பாற்ற முடியுமென்று எனக்கே தோன்றவில்லை. ரொம்பக் கிழவனாகிவிட்டேன்." (வாளைக் கீழே வைத்துவிட்டு இரு கரங்களாலும் தலையைத் தாங்கிப் பிடித்துக்கொள்ளுகிறான். கண்களி

விருந்து ஜலம் வருகிறது.) ஹே ஈஸ்வரா! என்ன செய்துவிட்டேனே! (எழுந்து வாளை எடுக்கிறான். அவ்வளவில் அவன் மகள் கல்யாணி அவ்விடம் வருகிறாள்.)

கல்யாணி :—பிதாஜி! என்ன இது?

கோவிந்த :—இதுவா? உனக்குத் தெரியாதா? வாள்!

கல்யாணி :—இல்லையப்பா! அதைக் கீழே வைத்து விடுங்கள்! உங்கள் கையில் வாளைக் காணப் பயமாயிருக்கிறது!

கோவிந்த :—(வாளின் முனையைக் கீழே ஊன்றிக்கொண்டும், அதை அன்புடன் பார்த்துக் கொண்டும், கல்யாணியை நோக்கிக் கூறுகிறான்.) இதோ பார் கல்யாணி! இந்த வாள் எவ்வளவுக் கெவ்வளவு பயங்கரமானதாய் இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அழகுள்ளதாகவும், இருக்கிறதல்லவா? இது என்ன கேட்கிறது தெரியுமா?

கல்யாணி :—தெரியாதே! என்னவேண்டுமாம் அதற்கு?

கோவிந்த :—ரத்தம்.

கல்யாணி :—ரத்தமா? யாருடையது?

கோவிந்த :—சத்துருக்களுடையது!

கல்யாணி :—ஏன்?

கோவிந்த :—ஏனா? ஏன் இதற்குச் சத்துருக்களின் ரத்தம் வேண்டுமென்று கேட்கிறாயா? இந்தக்

கேள்வியை உன் ஜென்ம பூமி மீவாரத்தினிடம் கேள்! எழுநூறு ஆண்டுகளாய் மொகலாயர்கள், இந்தச் சுயாதீன ராஜ்யத்தைத் தங்கள் ஆதீனத்திற்குக் கொண்டுவந்துவிட வேண்டுமென்று ராட்சதர்களைப் போல் இதன் மீது பாயவில்லையா? ஆனால் எப்படிச் சமுத்திர அலைகள், பர்வதத்தின் மீது மோதி மோதி, மறுபடியும் மறுபடியும் சமுத்திரத்தினிடமாகவே திரும்பித் திரும்பிச் செல்லுகின்றனவோ அப்படியே அவர்களும் புறங்காட்டி ஓடினார்கள். அவர்களுக்கு இந்த மீவாரம் என்ன அபராதத்தைச் செய்தது? மனித சக்தியானது, மதத்தால் கண் கருத்து அறியாமல் போய்விட்டபோது நியாயத்தை யார் பார்க்கிறார்கள்? இதோ இந்த வாள்தான் அநியாயத்தைத் தடுக்கிறது; தகர்க்கிறது. ஆனால் ஹா! கல்யாணி! என்ன செய்வேன்? வயோதிகம் என்னை ஆட்கொண்டு விட்டது!

(கல்யாணி அழுகிறாள்)

**கோவிந்த:**— ஏன் கல்யாணி? ஏன் அழுகிறாய்? பயமாயிருக்கிறதா உனக்கு? பயப்படாதே! இதோ இதை, உறையில் செருகிவிடுகிறேன். (வாளை உறைக்குள்ளே போட்டுவிட்டு) போ கல்யாணி! போ உள்ளே! இதோ நானும் வருகிறேன்!

(கோவிந்த சிம்மன் செல்லுகிறான்)

**கல்யாணி** :—அப்பாவுக்கு இன்று வாளைப்பற்றிய சிந்தனை ஏன் வந்தது?

(திரை விழுகிறது.)

(காட்சி முடிவு.)

---

## இரண்டாம் காட்சி.

**இடம்** :—உதய புரியின் ஓர் புறம்.

**காலம்** :—பகல் ஒரு மணி.

[சில சாரணிகளோடு சத்தியவதி பாடிக் கொண்டு வருகிறாள்.]

" தண்ணீர் விட்டோ வளர்த்தோம்
சர்வேசா இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம்—இது
கருகத் திருவுளமோ?

இன்பச் சுதந்திரம் நின்
இன்னருளாற் பெற்றதன்றோ
அன்பற்ற மாக்கள்
அதைப்பறிக்காற் காவாயோ!

வானமழை யில்லையென்றால்
வாழ்வுண்டோ? எந்தைசுயா
தீனமொக் கில்லையென்றால்
தீனரெது செய்வோமே!"

[அஜய சிம்மன் பிரவேசம்]

**சத்தியவதி** :—நீயார்? சைனிகனா?

**அஜய** :—ஆம். மீவார சேனாதிபதிகளில் ஒருவன்.

சத்திய :—உன்னிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன். நான் கேள்விப்படுகிறது வாஸ்தவமா?

அஜய :—என்ன கேள்விப்படுகிறீர்கள்?

சத்திய :—மறுபடியும் மொகல் ஸைன்யம், மீவாரத்தின் மீது படையெடுத்து வந்திருக்கிறதாமே?

அஜய :—இதுவரை வந்துவிடவில்லை. ராணாஜி சமாதானஞ்செய்துகொள்ளாவிட்டால், சண்டைக்குத் தயாராய் இருக்கவேண்டுமாம். இந்தச்சமாச்சாரத்தை மொகல் சேனாதிபதியின் தூதன் வந்து சொன்னான். சமாதானமில்லையானால் சண்டைதான்.

சத்திய :—நீங்கள் சண்டைக்குத் தயாராய் இருக்கிறீர்களா இல்லையா?

அஜய :—ராணாஜி எவ்விதம் கட்டளையிடுகிறாரோ அவ்விதம் செய்யத் தயாராயிருக்கிறோம். சண்டையோ சமாதானமோ அது ராணாவின் இஷ்டத்தைப் பொறுத்தது.

சத்திய :—ராணாஜி என்ன செய்யப்போகிறார்?

அஜய :—என்ன செய்யப்போகிறாரோ தெரியாது. என்றாலும் நானறிந்தவரை, ராணாஜி சமாதானத்தைத்தான் விரும்புவதாய்த் தோன்றுகிறது. இது சம்பந்தமாய் ஆலோசனை செய்வதற்காகப் பிதாவை அழைத்து வரும்படி ஆக்ஞாபித்திருக்கிறார்.

சத்திய :—பிதாவா? அது யார்?

அஜய :—மேவாரத்தின் பிரதம சேனாதிபதி கோவிந்த சிம்மர்!

சத்திய :—சேனா நாயகர் கோவிந்த சிம்மரின் பிள்ளையா நீ? ரொம்பச் சரி; சேனாதிபதி எதை விரும்புகிறார்? சமாதானத்தையா சண்டையையா?

அஜய :—அவரென்னமோ சண்டைதான் வேண்டுமென்கிறார்.

சத்திய :—அதுதான் சரி. ரொம்பச் சிரமங் கொடுத்துவிட்டேன். இனி நீ போகலாம்!

[அஜய சிம்மன் செல்கிறான்.]

சத்திய :—சமாதானமா? ராணா பிரதாப சிம்மருடைய குமாரரா மொகலாயர்களோடு சமாதானஞ் செய்துகொள்வது? அமரசிம்மருக்கு அவசியம் இதில் ஏதோ ஒரு பிரமை இருக்கிறது. (சாரலிகளை நோக்கி) நீங்கள் எல்லோரும் இந்த மரத்தடியில் வீற்றிருங்கள். நான் இதோ வந்துவிட்டேன்.

(சத்தியவதி செல்கிறாள்.)

காட்சி முடிவு.

---

## மூன்றாங் காட்சி.

இடம் :—உதய புரியில் மீவார ராஜ சபை.

காலம் :—காலை.

[ராணா அமர சிம்மன் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறான். பக்கத்தில் மந்திரி பிர

தானிகள் அமர்ந்திருக்கின்றனர். சேனா நாயகன் கோவிந்த சிம்மன் ஒருபுறமாய் நின்றுகொண்டிருக்கிறான்.]

ஜெய சிம்மன் :—மொகலாயர்கள் மீவாரம்வரை படையெடுத்து வந்துவிட்ட பின்னும், ரஜபுத்திரர்களுக்கு என்ன சிந்தனை வேண்டியதிருக்கிறது? சண்டை செய்யலாமா வேண்டாமா என்று விவாதஞ் செய்வதற்கு இதுதானா வேளை? சமாதானம் யாருக்கு வேண்டும் மகாராஜ்?

ராணா :—ஜெயசிம்மா! நீ சொல்லுவது சரிதான். ஆனால் இவ்வளவு சின்னஞ் சிறிய தேசமாகிய மீவாரம், அவ்வளவு பெரிய மொகல் சாம்ராஜ்யத்தை எதிர்த்துப் போராட இதனிடம் என்ன வல்லபம் இருக்கிறது?

ஜெய :—ஏன் ராணாஜி! க்ஷத்திரியர்களின் அசகாய சூரத்துவம் ராஜபுதானத்தில் அஸ்தமித்து விட்டதா என்ன?

கிருஷ்ணதாஸ் :—மகா ராணாவின் சுவர்க்கிய பிதா—மகா ராணா பிரதாப சிம்மர், எந்த வல்லமையையும் எந்த பலத்தையுங் கொண்டு மொகலாயர்களின் கண்ணில் விரலைவிட்டு ஆட்டினார்?

ராணா :—அவர் பேச்சை ஏன் எடுக்கிறாய் கிருஷ்ணதாஸ்? அவர் என்ன சாமான்ய மனுஷரா?

**சங்கர் :**—மனுஷரோ? மகாதேவரோ? ராஜபுத்திரர்தானே அவரும்?

**ராணா :**—இல்லை சங்கர்! அவரிடம் ஒரு தெய்வ சக்தியிருந்தது! ஆகாசத்தின் அகோரமான இடியைப் போல், பிருதிவியின் பீதிகரமான பூகம்பத்தைப் போல், சமுத்திரத்தின் சாந்தமற்ற அலைகளைப் போல் அவர் இங்கே அவதரித்திருந்தார்! ஆனால், எங்கிருந்து வந்தார் எங்குப் போனார் என்பது யாருக்கும் தெரியாது. சுவர்க்க மத்திய பாதலம் என்று சொல்லப்படுகிற மூன்று லோகத்திலும் அவருக்கு இணையில்லை.

**கிருஷ்ணதாஸ் :**—அது வாஸ்தவம் மகாராஜ். ஆனால் அவர் குமாரர் அவரைப்போல் வீர தெய்வமாய் விளங்காவிட்டாலும், அசகாய சூரராய் அவசியம் இருக்கலாமல்லவா? சுவர்கீய ராணாவானவர், மீவார சுதந்தரத்திற்காக உயிரையும் தியாகம் செய்தார். என்றால் அவர்தம் புத்திரராதியோர் போர் புரியாமலே பராதினத்தை ஒப்புக்கொள்வப் போகிறார்களா?

**ராணா :**—தர்க்க ரீதியாகப் பார்த்தால் நீ சொல்வது சரி கிருஷ்ணதாஸ்! மீவாரப் பிரஜைகள், சில காலமாய் அடைந்து வந்திருக்கிற தன தான்ய சம்பத்துக்களையும், சொத்துச் சுகங்களையும் சுலபத்தில் இழந்துவிடலாமா? ஏதோ பேரளவில் சமாதானஞ் செய்துகொண்டு, ரத்தத்தைச் சிந்தி

நாம் ஸ்தாபித்துக்கொள்ள விரும்பும் அந்தச் சுதந்தரத்தை, ரத்தத்தைச் சிந்தாமலே ஸ்தாபித்துக்கொள்ள முடியாதா?

சங்கர்:—என்ன? சமாதானமா? யாரோடு மகாராஜ்? மொகலாயர்களோடா? மொகலாயர்களோடு அவர் சமாதானஞ் செய்துகொள்வது? எந்த அதிகாரத்தின் மீது அவர், பகவான் ராமச்சந்திரமூர்த்தியினுடைய சந்ததியாரைச் சமாதானத்தில் இறக்கிவிட விரும்புகிறார்?

ராணு:—ஏதோ கொஞ்சங் கப்பங் கொடுத்துவிடுவதால், மீவார கஜனு வறண்டுவிடாது சங்கர்! சாந்தியையும் சமாதானத்தையும்விடக் கப்பந்தானு பெரிதாகிவிட்டது? கோவிந்தசிம்மரே! ஏன் பேசாதிருக்கிறீர்? உமது சம்மதம் யாது?

கோவிந்த:—(ராணுவின் பக்கம் திரும்பி) இதில் என் சம்மதம் யாது வேண்டியதிருக்கிறது மகாராஜ்? என்னுல் ஒன்றுமே சொல்ல முடியாது! ஏனெனில் சமாதானம் என்பது என்ன வென்றே எனக்குத் தெரியாது! சமாதானம் சாந்தி சுகம் என்று சொல்லப்படுகிற வஸ்துக்கள், இன்னதென்றே தெரியாத போது, அவற்றைக் காப்பாற்றிக்கொள்ள நான் என்ன உபாயத்தைச் சொல்லப்போகிறேன்? துக்கத்தைச் சொல்லுங்கள் அதைப்பற்றி நான் அபாரமாய்ப் பேசுவேன். ஏனெனில் துக்கமும் யானும் இளமை தொடங்கியே பால்ய தோழர்களாய் இருந்து

வந்திருக்கிறோம். விபத்தினடியிலே பிறந்து, விபத்தின் மடியிலே வளர்ந்து, விபத்தின் தொட்டிலிலே கிடந்து, விபத்தின் தோழமையிலே வாழ்ந்தேன்! இருபத்தைந்து வருடங்கள் சுவர்கிய மகாராஜாவோடு காடு மலை, வனம் வனாந்தரங்களிலே பசியோடும் தாகத்தோடும், இன்றைக்கோரிடம் நாளைக்கோரிடமாய் அலைந்து திரிந்தபோது, தரித்திரமும் யானும் நன்றாய்ச் சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்தோம்! அந்த மஹாத்மாவோடு வறுமை விரதத்தை அப்பியசித்த அந்த அருமைக் காலங்களில், துக்கத்தைத்தான் பரம சுகமாய் அனுபவித்தேன். பிறருக்காகத் துக்கத்தையும் துயரத்தையும் அனுபவிப்பதில் ஆ! எவ்வளவு சுகமிருக்கிறது! அதில் ஏற்படுகிற ஆனந்த வர்ஷத்தை யாரால் அளவிட்டுச் சொல்ல முடியும்? கடமைக்காகக் கடமையைச் செய்கிறபோது, தரித்திரத்தை எவனொருவன் தானாகவே வரித்துக்கொள்ளுகிறானோ அவனே பரம யோகியாகவும் பரம தியாகியாகவும் விளங்குகிறான்! காலையில் சூரியன் உதித்தமாத்திரத்தில் அவனுடைய கிரேக பூர்வமான சுவர்ண கிரணங்கள், தரித்திரக் குடிசையில் படிகிறதே அப்போது அக்குடிசையோடு எதை ஒப்பிட்டுக் கூறலாம்? அரண்மனையும் அதற்கு ஈடாகுமா? ஹா! மகா ராஜ்! அந்த அபூர்வ தினங்கள் இனி யொருதரம் வரப்போகின்றனவா? (துக்காதிக்கத்தால் தொண்டை அடைத்துக்கொள்ளுகிறது.)

ஜெய சிம்மன் :—ஏன் நிறுத்திவிட்டீர்கள்? கோவிந்த சிம்மஜீ! சொல்லும்! இன்னமும் சொல்லும்!

கோவிந்த :—என்ன சொல்வேன்? தொண்டையில் என்னவோ அடைக்கிறதே? பேச முடியவில்லையே! அதே மீவாரத்தின் அதே சரித்திரக் குடிசையை இடித்துத் தரைமட்டமாக்கி, அந்த இடத்தில் போக விலாச பவனமாகிற நாட்டிய சாலை கட்டப்படுவதைப் பார்க்கிறபோது கண் பஞ்சடைகிறது. அந்த மஹாத்மாவின் அதிபவித்திரமான சரித்திரக் கோயிலை உடைத்து அந்தக் கற்களைக் கொண்டுதானே ஐஸ்வரியத்திற்கு மாட மாளிகை கூட கோபுரங்கள் கட்டப்படுவதைக் காண, என் கண்கள் இன்னும் ஏன் குருடாகிவிடவில்லை? எந்த மலைகள், மீவாரத்தின் ஜெயகோஷத்தை எதிரொலித்துக்கொண்டு இருந்தனவோ, எந்தப் பர்வதங்கள், கீர்த்தியால் மதர்த்து வானத்தை முட்டிக் கிழித்துக்கொண்டிருந்தனவோ, அவற்றின் அருமை நிழலில் நிர்த்தன சாலையும், லதாக்ருஹமும் அமைக்கப்படுவதை அறிய என் தலையில் ஏனோ இடி விழுந்துவிடவில்லை? மஞ்சடர்ந்த மஹா வெளியில், மீவாரப் பிரதாபங்களெல்லாம் பஞ்சு போலாகி, ஆகாசத்தோடு ஆகாசமாய்க் கலந்துவிட்டதாய்த் தெரிகிறது! இனி என்ன மிஞ்சப்போகிறது ஜெயசிம்மா? மீவார மகத்துவங்களெல்லாம் மெலிந்து, எலும்புந் தோலுமாய் மரணப் படுக்கையில் கிடந்து, புரி

தாபகரமான பார்வையால் நம்மைப் பார்ப்பது போலவும், மரணப் பிரதிக்ஞை எடுப்பது போலவும், மரண சாஸனமாய் அடிமைப் பத்திரம் எழுதி நமக்கு அளிப்பது போலவும் தோன்றுகிறது.

சேவகன் :— இல்லை கோவிந்த சிம்மரே! நீங்களிருக்கும் வரை மிவார கௌரவம் ஒருக்காலும் சாகாது; சாகவும் விடமாட்டோம்!

கோவிந்த சிம்மன்:—நானு? நான் உயிரோடிருக்கும் வரையா? இல்லை, என் ஓட்டம் ஓய்ந்துவிட்டது! எனது உயிர் நாடியின் வேகம் ஒடுங்கிவிட்டது! ரொம்பத் தளர்ந்து கிழவனாகிவிட்டேன்! கைகள் நடுங்குகின்றன. வாள் பற்றுவதற்குக்கூட யோக்கியமில்லாமல் இருக்கிற இந்த எலும்புக் கூட்டுக்குள், வீரத்தை எப்படிப் பிடித்து நிறுத்த முடியும்? ஆனால் இது மாத்திரம் என்னால் செய்ய முடியும் மகாராஜ்! மறுபடியும் காடு மலை, வனம் வனாந்தரங்களுக்குப் போய் விடலாம். மீண்டும் மாத்ரு பூமிக்காக மதுரமான துக்கத்தை அநுபவிக்கலாம்! ஹாய்! பகவானே! துக்கத்தைச் சகிக்கக் கூடிய சக்தியையும் என்னிடமிருந்து எடுத்துக்கொண்டுவிட்டாயே! (கோர துக்கத்தால் மேலே பேச முடியவில்லை.)

ராணு:—அகில ஆரியாவர்த்தமும், மொகல் ஆதீனத்துக்குள்ளாகித் தலை குனிந்து விட்டதைத் தாங்கள்

பார்க்கவில்லையா? அப்புறம், ராஜபுதானத்தின் சின்னஞ் சிறு ராஜ்யமான மீவார மெங்கே? பாரத தேசத்தின் விஜயகாரியான தில்லி சாம் ராஜ்ய மெங்கே?

கோவிந்த :- அந்தக் கணக்குகளெல்லாம் எனக்குத் தெரியாது மகா ராஜ்! சொல்லவேண்டியவைகளை யெல்லாம் சொல்லிவிட்டேன். அப்பால் உங்களிஷ்டம்!

ராணு :—என்னிஷ்டமா? என்னிஷ்டம் சமாதானந்தான். யார் சேவகா! மொகல் தூதனை அழைத்துவா இங்கே!

[சேவகன் செல்கிறான்.]

கோவிந்த :—மஹா ராணு பிரதாப்! பிரதாப்! சுவர்க்க லோகத்திலிருக்கிறீர் நீர்! என்றாலும் இங்கு நடப்பவைகளெல்லாம் உமக்குத் தெரியாமலிருக்க முடியாது! ஹே வானகத்து இடிகளே! நீங்கள் எல்லோரும் ஒரே உக்கிரமாக முழங்கி இங்கே நடக்கிற காராசம் போன்ற பேச்சுக்கள், அந்த மஹா வீரன் செவிகளில் விழாமல் தடுத்துவிடுங்கள்! ஏ மீவாரமே! மொகலாயர்களின் பிரபுத்துவத்தை ஒப்புக்கொள்ளும் முன், ஒரு பூகம்பம் ஏற்பட்டு உன்னை அழித்துவிடக் கடவது!

[சேவகனோடு மொகல் தூதன் வருகிறான்.]

ராணு :—சமாதானத்துக்கு நான் தயாராயிருக்கிறேன் என்று உன் சேனுபதியிடம் போய்ச் சொல்!

[தலை விரிகோலமாய் சத்தியவதி ஓடிவந்து உள்ளே பிரவேசிக்கிறாள்.]

சத்தியவதி :— ஒருக்காலுமில்லை! ஒருக்காலுமில்லை! மந்திரிகளே! பிரதானிகளே! சேனைத் தலைவர்களே! சிப்பாயிகளே! எல்லோரும் தயாராகுங்கள்! சண்டைக்குத் தயாராகுங்கள்! ராஜாஜி உங்களை ரண க்ஷேத்திரத்திற்கு அழைத்துச் செல்லா விட்டால் இதோ நானிருக்கிறேன்!

கோவிந்த :— தேவி! நீயார்? அகோரமான அந்த காரத்தில் மின்னலைப்போன்று வந்து நிற்கிற நீயார்? கோமளமான இந்த வஜ்ர தொனி, எவர் நாவி லிருந்து வருகிறது?

ராஜா :— நிஜமாகவே நீயார் தேவி?

சத்திய :— சாதாரணச் சாரணி மஹா ராஜ்! மீவாரத் தின் மகிமையை—மீவாரத்தின் வீரப் பிரதா பத்தை, அதன் கிராமங்கள் தோறும் பாடிக் கொண்டு திரிகிறவள். இன்னும் அதிகமான அறிமுகம் அவசியமில்லை அரசே!

மந்திரிகள் :— ஆச்சர்யம்!

சத்திய :— மந்திரி பிரதானிகளே! மகா ராஜாவைப் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அவர் வேண்டுமானால் சௌக்கியமாய், உதய சாகரத் தின் வசந்தக் காற்றைப் பருகிச் சுவைத்துக் கொண்டும், போகக் கனவு கண்டு கொண்டும் இருக்கட்டும்! நான் உங்களை ரண க்ஷேத்திரத் துக்கு அழைத்துப் போகிறேன்!

**கோவிந்த** :—என்ன இது? இந்த யௌவன தேஜஸ் என் சரீரத்தில் எங்கிருந்து வந்தது? உரோமக்கால்களில் உற்சாகம்! ஒவ்வொரு துளி இரத்தத்திலும் உணர்ச்சி! உள்ளத்தில் ஆனந்தத் துடிப்பு! ஹிருதயத்தில் உன்மத்தம்! இவைகளெல்லாம் இக்கிழச் சரீரத்தில் எப்படி வந்து புகுந்தன? சாமந்தர்காள்! நீங்கள் அனைவரும் ராணாஜியின் ஆலஸியத்தை—மகாராணா பிரதாபசிம்மருடைய குமாரர் அமரசிம்மருடைய அலட்சியத்தை அகற்றுங்கள்! அவரின் போக விலாசத்தைப் புறங்காலால் உதையுங்கள்! (அங்கிருந்த லோட்டாவை எடுத்து நிலைக்கண்ணாடியை நோக்கி ஆக்குரோஷத்தோடு எறிகிறான்! கண்ணாடி சுக்குநூறாய் உடைந்து சிதறுகிறது!) சாமந்தர்காள்! தானைத் தலைவர்காள்! வாளை எடுங்கள்! அஸ்திர சஸ்திரங்களை ஏந்துங்கள்! (ராணாவின் கையைப் பிடித்துக்கொண்டு) வாருங்கள் மகாராஜ்! வாருங்கள் போருக்குப் போவோம்!

**ராணா** :—போவோம் கோவிந்த சிம்மரே! போவோம் போருக்கு. மொகல் தூத! நாங்கள் போருக்கு வருகிறோமென்று உன் எஜமானனிடம் கூறு! சேவகா! குதிரைக்குச் சேணம் வை!

**சத்திய** :—ஜே! ராணாஜிக்கி ஜே!

**எல்லோரும்** :—ஜே! ராணாஜிக்கி ஜே!

(காட்சி முடிவு.)

---

## நாலாங் காட்சி.

இடம்:—ஆக்ராவில் மஹபத்கான் வீடு.
காலம்:—அதிகாலை.

[சேனபதி மஹபத்கானும், சர்தார் அப்துல்லாவும் சம்பாஷித்துக் கொண்டிருக்கின்றனர்.]

மஹபத்:—ஷிதாயத்கான் சேனபதி யாகிவிட்டானுமே?

அப்துல்:—ஆம் ஜனுப்!

மஹபத்:— நிச்சயமாய்த் தெரியுமா உனக்கு?

அப்துல்:—ஆம் ஜனுப்! அவர் நிச்சமாய்த்தான் சேனபதியாக்கப்பட்டிருக்கிறார். அவர் வசம், ஐம்பதினுயிரம் வீரர் அடங்கிய சைன்யம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

மஹபத்:—ஷிதாயத்கானவது சேனபதியாவதாவது? தகுதிக்கும் லாயக்குக்கும் இதுவென்ன காலமில்லையா?

அப்துல்:—சந்தேகமில்லாமல் தாங்கள் சொல்வது சரிதான். பாதுஷாவுக்கு மருமானு யிருப்பதால் மாத்திரம், ஷிதாயத்கான் எப்படித் தகுதியுள்ள சேனதிபதி யாகிவிட முடியும்?

மஹபத்:—மருமகனு யிருக்கட்டும்; யாரா யிருக்கட்டும். இவ்வளவு பெரிய சைன்யத்துக்குச் சேனைத் தலைவனு யிருப்பதென்ன சாமான்யமான காரியமா? அவன் மைத்துனன் இநாயத்கானும் அவனே டிருக்கிறு னல்லவா?

அப்துல் :— இருக்கலாம் ஜனாப்! இருக்கலாம்!

மஹபத் :—இநாயத்கான், சந்தேகமில்லாமல் ஒரு சிப்பாயிதான்! அவனுக்குச் சண்டைபோடத் தெரியும். ஹிதாயத்கானைப் பேருக்குச் சேனாதிபதியாகப் பாதுஷா பண்ணியிருக்கலாம். உண்மையில் இநாயத்கான்தான் அசல் சேனைத் தலைவனாக இருக்கவேண்டும்!

அப்துல் :—அதென்னவோ ஜனாப்! பேருக்கானாலும் சரி, உண்மையில் போருக்கானாலுஞ் சரி, சேனா நாயகனாய்வரக்கூடியவர், துப்பாக்கி பீரங்கிகளின் பேரொலிகளைக் கேட்டுப் பயப்படாமலாவது இருக்கவேண்டாமா?

மஹபத் :—அது சரிதான். எல்லாம் இந்த மீவார யுத்தத்தில் தெரிந்துவிடாமல் போகிறதா?

அப்துல் :—தங்களை ஏன் மீவாரத்துக்கு அனுப்பப் பாதுஷா மறந்துவிட்டார்?

மஹபத் :—அவர் மறந்துவிடவில்லை. நான் மறுத்துவிட்டேன். வேறெங்காவது வங்காளம், கூர்ஜரம், தக்காணம் இப்படி யிடங்களுக்கானால் நான் போகத் தயார். ஆனால் மீவாரத்தின் மீது மாத்திரம் என்னால் படையெடுத்துச் செல்ல முடியாது.

அப்துல் :—ஏன்?

மஹபத் :—மீவாரம் என் ஜென்மபூமி! ஜென்மபூமியின் மீது படையெடுப்பது, பெற்றதாயைக் கொலை செய்வது போலல்லவா?

அப்துல் :—அது வாஸ்தவம் ஜனுப் ! நேரமாகிறது,உத்தரவு கொடுங்கள், போய் வருகிறேன். அதாப் (இரு கரங்களாலும் சலாம் செய்கிருன்.)

மஹபத் :—தஸ்லீம். (பிரதி வணக்கம்)

(அப்துல்லா செல்லுகிருன்.)

மஹபத் :—ஹிதாயத்கான் சேனுதிபதியானது நல்லது தான். ஏனெனில் பார்ப்பதற்கு அனேக வேடிக் கைகள் அகப்படலாமல்லவா ? பிச்சைக்காரனைப் பிடித்துப் பலவந்தமாய், நல்ல தாஜாவான (நேர்த்தியான) குதிரையில் சவாரி செய்ய வைத்தது போலிருக்கிறது ஹிதாயத்கானைச் சேனுபதியாக் கியிருப்பது !

(காட்சி முடிவு.)

---

## ஐந்தாங் காட்சி

இடம் :—மொகல் பாசறை.

காலம் :—பகல் பத்துமணி.

[மொகல் சேனுபதி கான் கானு ஹிதாயத் அலிகான் பஹதூர், தனது சர்தார் ஹுஸேனேடு சம்பாஷித்துக் கொண்டி ருக்கிருன்.]

ஹிதாயத் :—ஹே ! ஹுஸேன் ! அந்தக் காப்பிரிகளை ஜெயிப்பதென்பது பாயஸம் சாப்பிடுவது போ லல்லவா ?

ஹமீஸேன் :—ஜனாப் அலி! தாங்கள் நினைக்கிறவாறு அது அவ்வளவு எளிதல்ல. ஏறக்குறைய எழுநூறு வருஷங்களாக, முஸல்மான் சாம்ராஜ்யத்திற்கு முன்னே, அந்தச் சின்னஞ் சிறு ராஜ்யம் தலை தூக்கி நின்றுகொண்டிருக்கிறது! அக்பர் மஹா சக்கிரவர்த்திகூட, அதைத் தலை குனியச் செய்ய முடியவில்லை!

ஹிதாயத் :—ஹை! அக்பர் வசம், அப்போது நல்ல சேனு நாயகன் இருந்திருக்கமாட்டான்! கான்கானு ஹிதாயத் அலிகான் அப்போது இருந்திருந்தால் தெரியும்!

ஹமீஸேன் :—என் ஜனாப்! மான சிம்மன் என்ன குறைந்தவரா?

ஹிதாயத் :—ஹை! மான சிம்மன்? அவன் கிடக்கிறான். அவனுக்கென்ன யுத்தம் செய்யத் தெரியுமா?

[சமையல்கார ஜாபர் வருகிறான்.]

ஜாபர் :—எஜமானே! சமையல் ஆகிவிட்டது.

ஹிதாயத் :—மான சிம்மன் சேனாதிபதியாக முடியுமானால், இந்தச் சமையற்கார ஜாபர்மியானுங்கூட சேனாபதியாகிவிடலாமே? இல்லையா ஜாபர்மியான்?

ஜாபர் :—சாப்பாடு தயாராகிவிட்டது ஹஜூர்!

ஹிதாயத் :—சைன்யத்தோடு சண்டைபோட முடியுமா உன்னால் ஜாபர்?

ஜாபர் :—கோழிக்கறி வறுவல் செய்திருக்கிறேன் ஹஜூர்!

ஹிதாயத் :—ஆம் ஆம்! வறுவல் செய்வதில் நீ மகா கில்லாடி தான் ஜாபர்! ஆனால் நான் கேட்பது அது வல்ல. உனக்குச் சண்டைபோடத் தெரியுமா என்று கேட்கிறேன்.

ஜாபர் :—குருமாவா? அது ஆட்டுக்கறியிலே போட்டிருக்கிறேன், ஹுஜூர்!

ஹிதாயத் :—ரொம்பச்சரி! நான்கூட ஆட்டுக்குருமா தான் செய்யப்போகிறேன். நல்லது நீ போகலாம்; நான் இதோ வருகிறேன்.

(ஜாபர் செல்லுகிறான்.)

ஹிதாயத் :—இங்கே ஆட்டுக்குருமா, கோழி வறுவல் ஆகப் போகிறது ஹுஸேன்!

ஹுஸேன் :—என்ன? ஆட்டுக் குருமாவா? கோழி வறுவலா?

ஹிதாயத் :—ஆம்! ரஜபுத்திரர்களைக் குருமாவும் வறுவலு மாகச் செய்யப்போகிறேன். ரஜபுத்திரர்கள் என்ன ஆட்டு மந்தையும் கோழிக்கும்பலுந்தானே?

ஹுஸேன் :—மன்னிக்கவேணும் ஜனாப்! இதை என்னால் ஒத்துக்கொள்ள முடியாது.

ஹிதாயத் :—உனக்கு ஒன்றுந் தெரியாது ஹுஸேன். இப்போது நீ என்னோடு வந்துவிட்டாயோ இல்லையோ, இனிப் போர் புரிவது எப்படி என்பதை நன்றாய்க் கற்றுக்கொடுத்து விடுகிறேன்.

ஹுஸேன் :—நல்லது ஜனாப்! நான் தங்களுக்கு நன்றியுடையவனா யிருக்கிறேன். ஆனால் பெரிய பெரிய

யானைகளாலெல்லாம் ஆகாத காரியத்தைச் சின்னக் கொசு செய்து முடித்துவிடப் போகிறதா?

ஹிதாயத் :—என்ன கொழுத்துப்போனப்போ யிருக்கிறதே! நானும் சில நாட்களாகப் பார்க்கிறேன். உனக்கு நாக்கு ரொம்ப நீளுகிறது. நான் சேனாதிபதி என்பது உனக்குத் தெரியாதா? நான் நினைத்தால் உன்னை இந்த நிமிஷம் இந்த இடத்திலேயே சிரச்சேதம் செய்ய முடியும். தெரியுமா?

ஹுஸேன் :—இல்லை ஜனப்! தாங்கள் சேனாதிபதியாகவே இருக்கிறீர்களென்பது எனக்கு ரொம்ப நன்றாய்த் தெரியும்.

ஹிதாயத் :—ஆம் ஞாபகமிருக்கட்டும் நான் சேனாதிபதி என்பது!

ஹுஸேன் :—நல்லது ஜனப்! நன்றாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்கிறேன். சொப்பனத்திற்கூட மறக்க மாட்டேன் தாங்கள் சேனாபதி என்பதை! ஆனால் மிவாரத்தை ஜெயிப்பதென்பது.........

ஹிதாயத் :—மறுபடியும் மிவாரத்தை ஜெயிக்கிற பேச்சை எடுத்துவிட்டாயா? ஹுஸேன்! நீ என் நண்பன். அதனாலேதான் உன்னிடம் இதைச் சொல்லுகிறேன். அதாவது மிவாரத்தை ஜெயிப்பதென்பது சொடக்கிடுவது போல் சுலபமான காரியமென்று எனக்குத் தோன்றுகிறது.

ஹுஸேன் :—அப்படியானாலும் அது லேஸான சொடக்காய் இருக்க முடியாது ஜனப்!

ஹிதாயத் :—இல்லை ஹாஸனேன்! ரொம்ப அதிகப் பெரிய தொடக்கல்ல. நல்லது நீ போகலாம். நான் சாப்பிடப் போகிறேன். (ஹாஸனேன் புறப்படத் தயாராகிறான். ஹிதாயத் அலி, அவனை மறுபடியும் கூப்பிட்டு) ஆம். இன்னொரு சங்கதி கேட்டு விட்டுப் போ! இங்கே பார் ஹாஸனேன்! நான் சேனாபதி என்பதை நன்றாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்!

ஹாஸேன் :—ரொம்பச் சரி ஐனாப்!

ஹிதாயத் :—சரி! போ!

ஹிதாயத் :—பலே! இந்தக் காப்பிரிகளை ஜெயிப்பதில் என்ன கஷ்டமிருக்கிறது? இவர்களோடு போர் புரிவதற்கு அவ்வளவோ நேராது. பிரங்கியோ துப்பாக்கியோ, நாலைந்து வேட்டுக் கிளப்பிவிட்டோமானால் அந்த அதிர்ச்சி மாத்திரத்தில் ஓடுவதற்கு வழி பார்ப்பார்கள். அப்புறம் அவர்களைக் கண்டுபிடிக்கவே முடியாது.

(திரை விழுகிறது)

காட்சி முடிவு.

---

## ஆறாங் காட்சி.

இடம் :—உதயபுரி ஏரிக்கரை.

காலம் :—அதிகாலை.

[மீவார ராஜகன்னிகை (மானவி) ஏகாந்தமாய் உலாவிக்கொண்டும், சில இயற்கைக் காட்சிகளைக் கண்டு லயித்துப் பாடிக்கொண்டு மிருக்கிறாள்.]

"காலைப் பொழுதினிலே கண்விழித்து மேனிலைமேல்
மேலைச் சுடர்வானை நோக்கி நின்றேன் விண்ணகத்தே!
கீழ்த்திசையில் ஞாயிறுதான் கேடில்சுடர் விடுத்தான்!
பார்த்த வெளியெல்லாம் பகலொளியாய் மின்னிற்றே!

தென்னை மரத்தின் கிளையிடையே தென்றல்போய்
மன்னப் பருந்தினுக்கு மாலையிட்டுச் சென்றதுவே!
தென்னை மரக் கிளைமேற் சிந்தனையோ டோர்காகம்
வன்னமுற வீற்றிருந்து வாலைமுத்த மிட்டதுவே!

தென்னம் பசுங்கீற்றைக் கொத்திச் சிறுகாக்கை
மின்னுகின்ற தென்கடலை நோக்கி விழித்ததுவே!
வன்னச் சுடர்மிகுந்த வானகத்தே தென்றிசையில்
பொன்னே ரடியன்னம் பொற்புடனே தோன்றிற்றால்!

காலை யிளவெயிலில் காண்பதெலாம் இன்பமன்றோ!
சாலநுமைக் கண்டு களித்தேன்! சருவி நீர்
ஏதுரைகள் பேசி யிருக்கின்றீர்? என்றிடவே
போதமுள்ள காக்கை புகன்றதந்தச் செய்தியெல்லாம்.

அன்னமது கேட்டு மகிழ்ந்துரைக்கும் ஆம்காணும்!
மன்னர் அறம்புரிந்தால் வையமெலாம் மாண்புபெறும்
ஒற்றுமையால் மேன்மையுண்டாம் ஒன்றையொன்று தான்
[பிழைத்தல்
குற்றமென்று கண்டால் குறைவுண்டோ வாழ்வினுக்கே?

என்று சொல்லி அன்னம் பறந்தாங்கே ஏகிற்றால்.
மன்று கலந்து மறைந்தன அப்புட்களெலாம்.
காலைப் பொழுதினிலே கண்டிருந்தோம் நாமுமிதை
ஞால மறந்திடவே கோலமிகு பாட்டிசைத்தோம்."

[ஒரு கண்ணற்ற குழந்தையைக் கையுடன் கூட்டிக்கொண்டு பிச்சையேற்பாள் ஒருத்தி வருகிறாள்.]

பிச்சைக்காரி :—பிச்சை போடுங்கள் தாயே!

மானஸி :—போடுகிறேன்! இது உன் குழந்தைதானே யம்மா?

பிச்சைக் :—இல்லையம்மா! என் தங்கச்சி பிள்ளை. குழந்தைக் கொடுத்த தெய்வம் கண்ணைக் கொடுக்காமல் பிறவியிலேயே குருடாக்கிவிட்டது. அத்தோடு இவன் தாயையும் கொண்டுபோய்விட்டது!

மானஸி :—அப்பா இருக்கிறாரல்லவா?

பிச்சைக் :—இருக்கிறார் பரதேசத்தில்!

மானஸி :—ஆஹா! பச்சைப் பாலகன்! பட்டுப்பட்டாயிருக்கும் (மனங் கவரும் தோற்றம்) இக்குழந்தையை எனக்குக் கொடுக்கிறாயா அம்மா?

பிச்சைக் :—கொடுக்கலாம்! ஆனால் இவனைவிட்டு எப்படிப் பிரிந்திருப்பே னம்மா?

மானஸி :—பிரியவேண்டாம்! நீயே வைத்துக்கொள்! ஆனால், தினம் ஒருமுறை என்னிடம் குழந்தையைக் கொண்டுவருகிறாயா? இந்தா இதை இப்போதைக்கு வைத்துக்கொள்! [ஒரு தங்க நாணயத்தைக் கொடுக்கிறாள்.]

பிச்சைக் :—நீங்கள் நல்லாயிருக்கவேண்டும் மஹாராஜியாய்!

[குழந்தையைக் கூட்டிக்கொண்டு பிச்சைக்காரி போகிறாள்.]

மானஸி :—மகாராஜியாய் இருக்கவேண்டுமென்று இப்பிச்சைக்காரி சொன்னது எவ்வளவு மதுரமாயிருக்கிறது? ஜெயபேரிகையைவிடப் பிரபலமாகவும், அன்னையின் ஆசியிலும் அன்பு ததும்பியதாயும், குழந்தைகளின் முதல் முதலாவதாக உதிரும் மழலைபாகிற மதுரவாணியையினும் ருசிகரமானதாகவும் இருக்கிறது!

[அஜய ஸிம்மன் பிரவேசம்.]

அஜய :—மானஸி!

மானஸி :—வா அஜயா! வா! அதிக ஆநந்த பிரசன்னமாய் இருக்கிற சமயம் பார்த்து வந்தாய்! ரொம்ப சரி! என்றன் மகிழ்ச்சியில் நீயும் கொஞ்சம் எடுத்துக்கொள்!

அஜய :—உனது ஆநந்தத்திற்கு அப்படி என்ன புதிய சம்பவம் நேர்ந்தது?

மானஸி :—பரிபூரணமான ஆநந்தத்தால் பரவசமுற்றிருக்கிறேன். மாரிகாலத்து நதியைவிடப் பூர்த்தியான சந்தோஷப் பிரவாகம் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருக்கிறது!

அஜய :—அப்படியானால் அந்த ஆநந்தப் பிரவாகம், ஏன் உனது அழகு வார்ந்த அதரங்களாகிற உதடுகளை உடைத்துக்கொண்டு பாயவில்லை?

மானஸி :—இன்றைக்கு, அதிலும் இப்பொழுதுதான்; ஒரு பிச்சைக்காரி என்னை ஆசிர்வதித்துவிட்டுச் சென்றாள் அஜயா!

அஜய :—பேஷ்! ஒரு பிச்சைக்காரிதானா உன்னை ஆசி கூறுகிறாள்? அகில உலகத்திலும் ஒரிருதயத்தைத் திறந்து உனக்குச் சோபனம் பாடாத ஜீவன் எது இருக்கிறது? வீதிகள் தோறும், கிராமங்கள் தோறும், நகரங்கள் தோறும் மீவாரத்து ராஜகுமாரிக்குப், பிரஜைகள் பல்லாண்டு பாடுவதை நான் அனவரதமும் கேட்கிறேன்!

மானஸி :—அனுதினமும் கேட்கிறாயா நீ? அப்படியானால் நான் மாத்திரம் ஒரு நாட்கூட ஏன் கேட்க முடிகிறதில்லை?

அஜய :—ஒரு நாளைக்கு நீ அரண்மனையை அகன்று வெளியே போ! அப்போது ஆயிரந்தரம், ஆயிரம் விதமாய், ஆயிரம் இடங்களில், அனந்தம் ஜனங்கள் உன்னைப் புகழுவதை—வாழ்த்துவதைக் கேட்பாய்!

மானஸி :—ஒரு நாளைக்கென்ன? பிரதிதினமும் நான் வெளியே போய்க்கொண்டுதானிருக்கிறேன். அது உனக்குத் தெரியாதா அஜயா? நான் ஒரு அதிதிசாலை ஏற்படுத்தியிருக்கிறேன். அங்கு நான் நாள் தவறாமல் போய் என் கைகளினாலேயே அதிதிகளுக்கு அன்னமிட்டு வருகிறேன். அப்படிச் செய்யாமல் என் கண் அடைகிறதில்லை.

அஜய :—அப்படியானால் மானஸி! உனது ஜீவியத்தில் ஒரு பெரிய காரியத்தைச் செய்கிறாய்! அதிருக்கட்டும். நான் இப்போது உன்னிடம் விடைபெற்றுச் செல்ல வந்திருக்கிறேன்!

மானஸி :—ஏன் ? எங்கே போகிறாய் நீ ?

அஜய :—ரண க்ஷேத்திரம் செல்கிறேன் !

மானஸி :—என்று புறப்படுகிறாய் ?

அஜய :—நாளைச் சூரியோதயத்தில்.

மானஸி :—எப்போது திரும்பி வருவாய் ?

அஜய :—ஒன்றும் நிச்சயமில்லை. திரும்பி வருவேன் அல்லது வரமாட்டேன் என்பதை நிச்சயமாய்க்கூற முடியாது.

மானஸி :—ஏன் ?

அஜய :—அது ரணகளமல்லவா ?

மானஸி :—ஆனாலென்ன ?

அஜய :—மீண்டாலும் மீளலாம், அல்லது மிருத்து தேவதையைத் தழுவிக்கொண்டு அமரபதம் சென்றாலும் செல்லலாம்.

[இத்தருவாயில் மானஸி தலை குனிந்து கொள்கிறாள்.]

அஜய :—அப்படி யொருக்கால் நான் திரும்பிவராவிட்டால் மானஸி !.......?

மானஸி :—சற்றுத் தயங்கி மௌனமுற்று......என்னாகும் ?

அஜய :—நீ துக்கப்படுவாயா ? மாட்டாயா ?

மானஸி :—படுவேன்.

அஜய :—எவ்வளவு அலட்சியம் ? மானஸீ ! உனக்குத் தெரிந்தால்......

மானஸி :—என்ன தெரிந்திருந்தால் ?

அஜய :—உன் மீது நான் எவ்வளவு பிரியம் வைத்திருக்கினென்பது.

மானஸி :—ஆம். என்மீது நீ அதிபிரியம் வைத்திருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும்.

அஜய :—அப்படியானால் என்மீது உனக்குப் பிரியமில்லையோ?

மானஸி :— இருக்கிறது.

அஜய :—இல்லை; நீ வேறு யார் பேரிலோ பிரியம் வைத்திருக்கிறாய் ?

மானஸி :— ஆம். மனுஷர்கள் எல்லார் பேரிலும் பிரியம் வைத்திருக்கிறேன்.

அஜய :—ஹா ! என்ன நிஷ்டூரம்? எத்தனை நிர்த்தாட்சண்யம்? எத்தனைய ஆலஸ்யம் ?

மானஸி :— ஏன் அஜயா ! நான் உன்னை மாத்திரம் நேசிக்க வேண்டும்? பிறரை நேசிக்கக்கூடாது என்று நீ விரும்புகிறாயா? நீ யொருவன் மாத்திரம் எனது ஹிருதய முழுதிலும் அதிகாரஞ் செய்யவேண்டுமென்று ஆசைப்படுகிறாயா? அப்படியானால் நீ சுயநலமி !

அஜய :—மானஸி ! நீ இன்னுஞ் சின்னஞ் சிறுமியல்ல. இவ்வளவு வயதான நீ, பின்னும் அறியாப் பருவத்திலிருக்க முடியாது !

மானஸி :— ஏன் இப்படி என்மீது எறிந்து விழுகிறாய் அஜயா? நீ கோபப்படும்படியான அப்படி என்ன குற்றத்தை நான் செய்தேன்? மனுஷ ஜாதியின் மீது பிரியம் வைப்பது குற்றமா? அப்படி அது குற்றமானால் அதற்குரிய தண்டனையை நீயே எனக்குக் கொடு! அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன்.



மானஸி:—என் அஜயா? நீ ஒருவன் மாத்திரம் எனது ஹிருதய முழுதிலும் அதிகாரஞ் செய்யவேண்டுமென்று ஆசைப்படுகிறாயா? அப்படியானால் நீ சுயநலமி! பக்கம் 32.

அஜய :—உனக்கா தண்டனை? நானு கொடுக்க?

மானஸி :—ஆம் நீயே கொடு! இன்று நீ போர்க்களம் ஏகு கின்றாயல்லவா? அங்கே நீ எவ்வளவுக் கெவ்வளவு அதிகமான கொலைகளைச் செய்கிறாயோ அவ்வளவுக் கவ்வளவு அதிகமாய் உன்னைப் புகழுவார்கள். அதே மாதிரி, மனித வர்க்கத்தின் மீது, எத்தனைக் கெத்தனை அதிகமான பிரேமை செலுத்துகிறேனே, அத்தனைக் கத்தனை அதிகமான பிழையை நான் செய்தவளாவே னல்லவா?

அஜய :— மானஸி! அகில உலகத்தினிடமாகவும் நீ பிரேமை செலுத்து! அனந்த ஜீவன்களிடத்திலும் நீ உனது உதார ஹிருதயத்தை வை! விஸ்வ பிரமாண்டத்தையும் நீ விஸ்வாஸி! இப்பொழுது நான் உன்னை ஒன்றும் சொல்லமாட்டேன். அகன்ற ஆகாசத்திற்குச் சமானமான உனது ஹிருதயத்தை, இந்த—எனது கேவலமான—துச்ச ஹிருதயத்தில் அடைத்து வைத்துக் கொள்ளவேண்டுமென்று ஆசைப்பட்ட என்னைப் போல் மூர்க்கன் யாரிருக்க முடியும்? மன்னிக்க வேண்டும் மானஸி! மன்னிக்க வேண்டும்! நான் இதோ விடைபெற்றுக்கொள்கிறேன்.

மானஸி :—நல்லது போய்வா அஜய! போய்வா! அகில லோகத்திலும், அந்யாயமும், அத்தியாச்சாரமும் அதிகரித்துவிட்டிருக்கின்றன! அவற்றை அழித்து நியாயத்தை நிலைநாட்டுதற்காக அவ்வப்போது

போர் செய்யவேண்டியது க்ஷத்திரிய தர்மந்தான். என்றாலும் யுத்தம் எவ்வளவு கொடுமை பார்! எவ்வளவு நிஷ்டுரமானது! அதிற் கூடுமான வரை உனக்கு நியாகவே பாவ புண்ணியங்களைப் பகிர்ந்து செய்யப் பார்!

[அஜய ஸிம்மன் செல்லுகிறான்.]

மானஸி:—போய்வா அஜயா! போய்வா ரணகளத்திற்கு! எனது சுபகாரியங்கள் கவசத்தைப்போல் உன்னை காக்கக் கடவது! ஆனால் போரில் மடிகிறார்களே அவர்கள் கெதி யாதாகும்? அவர் தம் மனைவிமார், மக்கள், மாதாக்கள் எல்லோரும் இப்படித்தானே என்னைப்போல் பரமாத்மாவைப் பிரார்த்திப்பர்? அந்தப் பிரார்த்தனைகளில் எத்தனை பலனற்றவைகளாகி விடுகின்றன? அப்படியானால் ஆண்டவன் ஓர் வஞ்சகமுடையவன். (கண்ணீர் ததும்புகிற கண்களால் மேலே ஆகாசத்தை நோக்குகிறாள். சிறிது நேரத்தில் ஆனந்தப் புன்னகையால் அவள் முகம் அலர்கிறது. கைகளைக் கட்டிக்கொண்டு கூறுகிறாள்.) நல்லது: நானும் ஒரு ஊழியம் செய்கிறேன். யுத்தத்தில் மாய்கிறவர்களுக்கு, என்னால் எவ்விதமான சகாயமும் செய்யமுடியாதென்பது வாஸ்தவம். ஆனால் காயப்படுகிறவர்களுக்குச் சேவை செய்யலாமல்லவா? ஆம். அதை நான் செய்கிறேன்.

[ராணி ருக்மணி பிரவேசம்.]

ராணி :—ஏதாவது கேள்விப்பட்டாயா மானஸி!

மானஸி :—என்ன சமாச்சாரம்?

ராணி :—உன் அப்பா யுத்தத்திற்குப் போயிருக்கிறார்!

மானஸி :—ஆம் அம்மா! கேள்விப்பட்டேன்.

ராணி :—மொகலாயர்களோடு போருக்குப் போயிருக்கிறார்.

மானஸி :—ஆம். அதற்கென்ன?

ராணி :—பேஷ்! எவ்வளவு அலட்சியம்! "ஆம், கேள்விப் பட்டேன், அதற்கென்ன" என்று உதாசீனமாய்க் கூறுகிறாய்? யுத்தமென்பதென்ன வெண்ணெய் தின்பதுபோல் சரளமான சமாச்சாரமென்று எண்ணிக்கொண்டாயா மானஸி? யுத்தத்தில் எத்தனை ஆயிரக்கணக்கான சாவு, சம்பவிக்கிற தென்று உனக்குத் தெரியுமா?

மானஸி :—சம்பவிக்கலாம்.

ராணி :—சம்பவிக்கலாமாவது? சந்தேகமில்லாமல் சம்ப விக்கிறது. இந்தத் தடவை பாதுஷாவின் சைன் யத்தோடு கோர யுத்தம். சகலமும் சர்வ நாசந் தானென்று நினைத்துக்கொள்! என்ன மிஞ்சப் போகிறது? போருக்குப் போயிருக்கிறவர்கள். எல்லோருமே யிறந்து போவர். போகாதவர்கள் பாடு என்னாகுமோ?

மானஸி :—அப்படியானால் அதற்கு நான் என்ன செய் வேன்?

ராணி :—உன் கல்யாணத்துக்கு, நான் எல்லாம் நிச்சயம் வைத்திருந்தேன். ஆனால் சமயம் வாய்க்கவில்லை!

இவ்வளவு கெடுபிடியில் விவாகம் எப்படிச் செய்யமுடியும்?

மானஸி :—முடியாமலே இருக்கட்டுமே?

ராணி :—முடியாமலே இருக்கட்டுமா? விவாகமாகாவிட்டால் வேறென்னாகும்?

மானஸி :—நல்லதாச்சு!

ராணி :—பேஷ்! இதுவும் ஆகக்கூடியதா? பெண்களுக்கு விவாகமில்லாமல் காரியமாகுமா? ஜோதிபுரி ராஜகுமாரனுக்கு உன்னை மணமுடிப்பதென்று பேசி முடித்திருந்தது. ஆனால் இனிக் கல்யாணம் எங்கே நடக்கப்போகிறது! எல்லோரும் போவார்கள்; சாவார்கள். முதலில் விவாஹத்தை முடித்துவிட்டு, அப்பால் போருக்குப் போகலா மென்று ராஜாஜிக்கு எவ்வளவோ சொன்னேன். என் பேச்சைத்தான் கேட்கிறார்?

மானஸி :—அன்னையே அந்தக் கவலை உனக்கு வேண்டாம். விவாகத்தைவிடப் பெரியதான ஒரு காரியத்தைச் செய்வதென்று நான் நிச்சயித்திருக்கிறேன்.

ராணி :—அதென்ன காரியம் மானஸி!

மானஸி :—நான் ரணகளத்துக்குப் போகிறேன்.

ராணி :—ஏன்? என்ன செய்யப்போகிறாய் நீ அங்குபோய்?

மானஸி :—இப்போது நீ சொன்னாயல்லவா, யுத்தத்தில் ரொம்பப்பேர் சாகிறார்களென்று? சாகிறவர்களுக்கு என்னால் யாதொரு சகாயமும் செய்ய இயலாவிட்டாலும், காயப்படுகிறவர்களுக்குச் சேவை செய்ய முடியுமல்லவா?

ராணி :—வந்ததா வினை! அஜய சிம்மன் உனக்கு இதைத் தான் கற்பித்துக் கொடுத்திருக்கிறானுக்கும்?

மானஸி :—இல்லையம்மா! அஜய சிம்மனுக்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமேயில்லை. அவன் மீது பழியைச் சுமத்தாதே அம்மா! அவன் மனிதரைக் கொல்லப்போகிறான். நான் மனிதரை ரட்சிக்கப் போகிறேன்.

ராணி :—இல்லை. இது எங்கேயாவது நடக்கக்கூடிய காரியமா?

மானஸி :—ஏன்? நன்றாய் நடக்கலாம்!

ராணி :—இல்லை. நீ அங்கே போகக்கூடாது. இது என்ன விபரீதம்?

மானஸி :—தாயே! அந்தக் கவலை உனக்கு வேண்டாம். நான் அவஸ்யம் போர்க்குத்தான் போகிறேன். உனக்குத்தான் தெரியுமே, நான் ஏதாவதொன்றைச் செய்வதென்று நிர்மானித்துவிட்டால், அப்புறம் யார் தடுத்தாலும் நிற்கமாட்டேனென்று. பின்னரேன் வீணில் வார்த்தையை வளர்க்கிறாய்? உன் ஜோலியை பார்த்துக்கொண்டு நீ போம்மா! நான் போர்க்களம் புகத் தயாராகவேண்டும். காலம் விரைகிறது.

ராணி :—யாரோடு செல்லப்போகிறாய்?

மானஸி :—அஜய சிம்மனுடைய சைன்யத்துடன்!

ராணி :—எதை நினைத்தேனோ அதுவே நடந்திருக்கிறது! ராஜாஜியும் இப்போது இங்கு இல்லையே! இவளுக்கு யார் புத்தி கூறுவர்?

மானஸி:—பிதா போர்க்களத்தில் இருந்தால் அங்கே அவர் நிச்சமாய் என்னைத் தடுக்கமாட்டார். அவரை நான் நன்கறிவேன். அவர் தயாளு.

ராணி:—நீ என்ன செய்தாலும் அவர் உன்னைக் கண்டிக்கிறதில்லை. அதனாலேதான், நீ இவ்வளவு தூரத்துக்கு வந்துவிட்டாய்! போச்சு! எல்லாம் போச்சு! எனக்குத் தெரியும், ஏதோ ஒரு பெரிய உபத்திரவம் வரப்போகிறதென்று!

மானஸி:—அன்னையே! நீ கிஞ்சிற்றும் கவலையுறவேண்டாம். ஒரு மனுஷன் இன்னொரு மனிதனை வதஞ் செய்கிறான். இந்த நரவதத்தை எவ்வளவு தூரத்துக் குறைக்க இயலுமோ அவ்வளவு தூரத்துக் குறைக்க முயலுகிறேன். நீ போம்மா! கவலைப்படக்கூடிய காரியமல்ல இது!

ராணி:—சரி! பூரணமான கலியுகம் வந்துவிட்டது!

[ராணி செல்கின்றாள்.]

மானஸி:—இந்த இச்சை, என் இளம் ஹிருதயத்தில் எவ்வாறு புகுந்தது? அந்தக் கரணத்தின் ஒரு மூலையில், சிறு பொறிமாத்திரமாயிருந்த இந்த எண்ணமானது, எவ்விதம் இவ்வளவு பெரிய ஜோதியாய் மாறிற்று? புதுவிதமான உற்சாகத்தையும், பரமானந்தமான சுகத்தையும் அளிக்கிற பரோபகாரத்தைவிடக், காதலும் கல்யாணமுந்தானா பெரிது?

(திரை விழுகிறது.)

(காட்சி முடிவு.)

## ஏழாங் காட்சி

இடம் :—மீவார ரண க்ஷேத்திரம்.

காலம் :—மாலை.

[கூடாரத்துக்குள் இருந்துகொண்டு, ஹிதாயத் அலியும், ஹுஸேனும் சம்பாஷித்துக் கொண்டிருக்கின்றனர். வெளியே யுத்தப் பிரளயம், பயங்கர நிலையில் நடக்கிறது. வாசற்படியில் இரண்டு சிப்பாயிகள் உருவிய வாளோடு நின்றுகொண்டிருக்கின்றனர்.]

ஹிதாயத் :—மீவார சைன்யம், ஒரு அந்தாஜாய் எவ்வளவிருக்கலாம் ஹுஸேன் ?

ஹுஸேன் :—இருக்கலாம் ஜனாப் ! ஒரு ஐம்பதினாயிரம் !

ஹிதாயத் :—ரஜபுத்திரர் இதுவரை புறங்காட்டி ஓடவில்லையா ?

ஹுஸேன் :—இல்லை ஜனாப்.

ஹிதாயத் :—காலையிலிருந்து யுத்தம் புரிகிறார்கள். இன்னும் ஓடுகிற வழியைப் பார்க்கவில்லையா அவர்கள் ?

ஹுஸேன் :—"போர் செய்வோம் ! நன்றாய்ப் போர் செய்வோம் ! மூக்கில் மூச்சுள்ளவரை போர் செய்வோம்" என்று அவர்கள் வீர சபதம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ஜனாப் !

ஹிதாயத் :—அப்படியானால் அவர்களுக்குக் கொஞ்சங் கொஞ்சம் சண்டை போடத் தெரியும் ?

ஹுஸே :—அவர்கள் சண்டைபோடுகிற சாலக்கைப் பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது !

ஹிதாயத் :—அதென்ன ஹுஸேன்? ரஜபுத்திரர்களின் கர்ஜனை யல்லவா? நமது சிப்பாய்கள் ஏன் சத்தங் கித்தம் போடுகிறார்களில்லை? அவர்கள் சண்டை போடத்தானே செய்கிறார்கள்?

ஹுஸேன் :—ஏன் போடமாட்டார்கள்? ஒருமுறை தாங்கள் வெளியே போய்ப் பாருங்களேன்? சேனாதிபதியல்லவா தாங்கள்?

ஹிதாயத் :—ஆம். நிச்சயமாய் நானேதான் சேனாபதி. ஆனால், கூடாரத்தைவிட்டு வெளியே போகவேண்டும் என்கிற அவசரமென்ன வந்தது அப்படி? என் மைத்துனன் இநாயக்கான்தான் போயிருக்கிறானே போதாதா? என்னோடு போர்புரிய இந்த ரஜபுத்திரர்களுக்குச் சக்தியிருக்கிறதா என்ன?

ஹுஸேன் :—அது வாஸ்தவம் ஜனாப்! அதோ பாருங்கள் அந்த ரஜபுத்திரர்கள்; எவ்வளவு அட்டகாசமாய் கர்ஜிக்கிறார்கள்? மறுபடியும் மறுபடியும்; ரஜபுத்திரர்களின் ஜெயகோஷிதான் விம்முகிறது. ஆஹா! இருப்பதைப் பார்த்தால் எனக்கொன்றும் நன்றாகத் தோன்றவில்லை ஜனாப்!

ஹிதாயத் :—கொஞ்சம் வெளியே போய்ப்பார் ஹுஸேன் அங்கே என்ன நடக்கிறதென்று?

ஹுஸேன் :—ரொம்பச்சரி ஜனாப்!

ஹிதாய :—இல்லை ஹுஸேன்? நீ இங்கேயே இரு! எனக்கு இது ஒரு கெட்ட பழக்கம்! சாயங்காலமாகிவிட்டால் தனியாய் இருக்கவே முடிகிறதில்லை.

ஹஸேன் :—ஆம் அதைவிடக் கெட்ட பழக்கம் வேறு எது இருக்க முடியும்? தெரியாதவர்கள் பயங் கொள்ளித்தனம் என்றுகூடச் சொல்லுவார்கள்!

ஹிதாயத் :--மீண்டும், அதே ரஜபுத்திர ஆரவாரம் கேட்கி றதே ஹஸேன்!

ஹஸேன் :—ஆம் ஜனுப்! அதுவும் அதி சமீபத்தில்!

ஹிதாயத் :—என்ன சொல்கிறாய்?

ஹஸேன் :—இங்கேயே வந்துவிட்டார்கள் போல் இருக் கிறதே ஜனுப்!

ஹிதாயத் :—ஐயோ! வந்துவிட்டார்களா? (ஹஸே னைக் கட்டிப்பிடித்துக்கொள்ளுகிறான்.)

[சிப்பாயி ஒருவன் வேகமாய் வருகிறான்.]

ஹிதாயத் :—என்ன சமாச்சாரம் கொண்டுவந்தாய் சிப் பாயி?

சிப்பாயி :—தளபதி ஷம்ஷேர்கான் மடிந்துபோனார் ஹஜூர்!

ஹிதாயத் :—ஹா!

ஹஸேன் :—வேறென்ன நடந்தது?

சிப்பாயி :—சண்டை நடக்கிறது சர்க்கார்!

ஹிதாயத் :—இநாயத்கானுக்கு அப்படி யொன்றும் ஆகி விடவில்லையே?

சிப்பாயி :- இல்லை ஹஜூர்!

ஹஸேன் :—நல்லது நீ செல்லலாம்!

[சிப்பாயி விரைந்து செல்லுகிறான்.]

ஹிதாயத் :—உண்மையில் ஏதோ ஒரு கெடுதல் நடக்கப் போகிறது ஹஸேன்!

ஹூஸே :—எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது ஜனப்! அன்றைக்குச் சொன்னீர்கள் மீவாரத்தை ஜெயிப்பது ஏதோ சொடக்குப் போடுவது போலென்று!' ஆனால் அது, அவ்வளவு இலகுவான காரியமல்ல என்பது இன்றைக்கு நன்றாய்த் தெரிகிறதா இல்லையா? ஆஹா! அதோ அந்த ஓசை அதி சமீபத்தில் கேட்கிறதே!

ஹிதாயத் :—ஆம் ஹூஸேன். ஆனால் எப்படியாகும் இச் சண்டை?

ஹூஸே :—யாருக்குத் தெரியும் ஜனப்?

[இன்னொரு சிப்பாயி அதி வேகமாய் ஓடி வருகிறான்.]

ஹிதாயத் :—என்ன செய்தி?

சிப்பாயி :-சர்க்கார் சைன்யம், பின்புறமாய் ஓடுகிறது ஹூஜூர்!

ஹிதாயத் :—ஏன்?

ஹூஸே :—ஒருக்கால் இதோ கேட்கிற முழக்கம் அவர்கள் சத்தமா யிருக்குமோ?

சிப்பாயி :—ஆம் ஹூஜூர்!

[சிப்பாயி திரும்பி ஓடுகிறான்.]

ஹூஸே :-சேனாதிபதி சாஹிப்! இன்னுந் தாங்கள் கூடாரத்துக்குள் இருப்பது கூடாது. கொஞ்சம் வெளியே செல்லுங்கள்! உங்கள் தலையைப் பார்த்தாவது சைன்யத்துக்குக் கொஞ்சம் தைர்யம் வரலாம் ஜனப்!

ஹிதாயத் :—ஓ! நான் சேனுபதியா? [கர்வத்தோடு தன் னைத்தானே பார்த்துக்கொள்ளுகிறான்.]

[மற்ருேர் சிப்பாயி ஓடோடி வருகிருன்.]

சிப்பாயி :—இநாயத்கான் இறந்து போனுர் ஹுஜுர்!

ஹிதாயத் :—ஹா! இறந்து போனுன இநாயத்! நிஜமாகத்தானு? ஐயோ! அந்த ரஜபுத்திரர்களின் பயங்கர முழக்கம் இன்னுஞ் சமீபத்தில் கேட்கிறதே!

ஹுஸேன :—தாங்கள் ஒருதரம் வெளிச்சென்று, சைன்யத்துக்குத் தாங்கள் தைர்யத்தைக் கொடுங்கள் ஜனுப்!

ஹிதாயத் :—அதற்கு நேரமிருக்கிறதா என்ன ஹுஸேன்? கேட்கிறதா பகைவர்களின் பைரவ நாதம்?

ஹுஸேன :—கேட்கிறது ஜனுப்! சரியாய் அந்தச் சத்தம் சமீபித்துக்கொண்டே வருகிறது! ரொம்பச் சமீபித்து விட்டது ஜனுப்!

[வேருேர் சிப்பாயி காக்குத்தள்ள வெகு வேகமாய் ஓடி வருகிருன்.]

சிப்பாயி :—ஒரே ஹதமாகிவிட்டது ஹுஜுர்!

ஹிதாயத் :—அதுதான் எனக்கு முன்னமேயே தெரியுமே! வேறேதாவது புதுச் சமாச்சாரமுண்டா?

ஹுஸேன :—தோல்வியே தோல்வி. தோல்விக்குப்பின் என்ன புதுமை நடக்கும்?

ஹிதாயத் :—அப்புறம் என்ன நடக்கவேண்டும்? என்ன தான் பாக்கியிருக்கப்போகிறது நடப்பதற்கு? இநாயத்கானே போய்விட்டான்! ஐயோ!

சிப்பாயி :—நமது சைனிகர்கள் பூராவும் ஓடுகிறார்கள் ! சத்துருக்கள் அவர்களைக் குதிங்காலில் விரட்டுகின்றனர் !

ஹிதாயத் :—பகைவர்கள் இங்கு வந்தேவிட்டார்கள் போலிருக்கிறது ஹாமேஸன் ?

[திரைக்குள்ளிருந்து "ஓடுங்கள் ஓடுங்கள்" என்று கேட்கிறது.]

ஹிதாயத் :—எந்தப் பக்கம் ஓடவேணும் ?

ஹாமேஸ :—இந்தப் பக்கம், இந்தப் பக்கம்.

[ஹாமேஸன் ஒரு பக்கம் ஓடுகிறான். ஹிதாயத்கான் கலவரத்தால் வேறொரு பக்கமாய் ஓடுகிறான். அவ்வளவில் அவன் மீது குண்டு பாய்ந்து கீழே விழுந்து விடுகிறான். அதேசமயம், சில ரஜபுத்திர சிப்பாயிகள் சகிதம், மொகல் கொடியைக் கையிலெடுத்துக் கொண்டு அஜய சிம்மன் அங்கு வந்து சேருகிறான்.]

அஜய :—ஜே ! மீவார ராணுக்கி ஜே !

சைனிகர் :—ஜே ! மீவார ராணுக்கி ஜே !

ஹிதாயத் :—(கரங்களை உயர்த்திக்கொண்டு) காப்பாற்றுங்கள் ! காப்பாற்றுங்கள் ! உயிர்ப்பிச்சை கொடுங்கள் ! கொல்லவேண்டாம் ! கைதிவேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள் !

அஜய :—யார் நீ ?

ஹிதாயத் :—நான் மொகல் சேனாபதி.

அஜய :—சேனாபதியா? இரணகளத்தைவிட்டு இந்த நேரம் இங்கே எப்படி வந்தீர்?

ஹிதாயத்:—நா...ன்? இங்...கே....யா? சும்...மா. ஐயோ! என்னைக் கொல்லவேண்டாம்! உயிர்ப்பிச்சை கேட்கிறேன்! ஓடிப்பிழைக்கிறேன்!

அஜய :—மீவாரத்தை வெல்லவந்த இந்தப் புழுவைப் பார்த்தீர்களா? பயப்படவேண்டாம். உன் உயிரை நாங்கள் எடுத்துக்கொண்டு போகமாட்டோம். இராஜபுதான முழுதிலும், மீவார விஜயம் எதிரொலிக்கட்டும்!

ஹிதாயத்:—ஆம் ஐயா! எதிரொலிக்கட்டும்! அதற்காக நான் ஆண்டவனை வேண்டுகிறேன்.

[தனது சைனிகர்கள் சகிதம், அஜய சிம்மன் செல்லுகிறான்.]

ஹிதாயத்:—அப்பா! தலை தப்பியது! தாகமெடுக்கிறது! நா வறளுகிறது! தண்ணீர்! தண்ணீர்!

காட்சி முடிவு.

---

## எட்டாங் காட்சி.

இடம் :—இரணகளம்.

காலம் :—நடு ராத்திரி.

[ஆங்காங்கு பிரேதங்கள் சிதைந்துகிடக்கின்றன. இடை இடையே படுகாயமுற்றுக் குற்றுயிராகவும் புரளுகின்றனர். காயம்பட்டவர்களும் இருக்கின்றனர். சைனிகர்கள்

சகிதம் மானஸி, ரவைகளத்தை அதிவேகமாய்ச் சுற்றிக்கொண்டு சுழன்று வருகிருள். சைனிகர்கள் திவர்த்தியை ஏந்திக்கொண்டும், மருந்து முதலிய சாமான்களை வைத்துக்கொண்டும் உடன்வருகின்றனர்.]

மானஸி :—அதோ! அதோ! அங்கே யாரோ புலம்புவது போல் தெரிகிறது! அங்கே போங்கள்! இங்கே நான் போய்ப் பார்க்கிறேன்!

[சில ரஜபுத்திரர் செல்லுகின்றனர்.]

மானஸி :—ஹா! நாலா பக்கங்களிலும் எத்தனை கொலை! எவ்வளவு சித்திரவதை! என்ன கொடுஞ் செயல்கள் நடந்திருக்கின்றன! அழுகையும் கூக்குரலும், அந்தோ! எவ்வளவு பரிதாபகரமாயிருக்கிறது! கருணை காட்டப்படவேண்டிய காட்சிகள்! துக்கமயமான சம்பவங்கள்! ஹே! பரமேஸ்வரா! மனுஷ்யனை மனுஷன் தின்கிறதான நிஷ்டூரமான நியமம், உனது நீதி நிறைந்த ராஜ்யத்தில் நடக்கவும் நடக்கலாமா? நரவதமும் நாச காரியமும், பூலோகத்தைப்—புண்ணிய பூமியை, நரகலோகமாக்கிக்கொண்டிருக்கின்றன! மனிதனை மனிதன் கொலை புரிகிறது, கருணாநிதியான கடவுள் கையைக் கட்டிக்கொண்டும் மௌனமாய் வேடிக்கை பார்த்துக்கொண்டும் இருப்பதா? நீல விதானமாகிற ஆகாசத்தை முட்டிக் கிழித்துக்கொண்டு மனிதர் செய்கிற பாவமானது, கோரமான

கோலாகலத்தோடு சிரித்துக்கொண்டு தேவலோகம் வரை எட்டுகிறது! அப்போதுகூட, ஹா! பரமாத்மாவே! நீ அதைக் கழுத்தை நெரித்துக் கொல்லாதிருக்கின்றனே! இதோ பார்! இங்கே எவ்வளவு பயங்கரமான கோர நாடகம் நடந்திருக்கிறது! இந்தப் பிணப்பட்டைகளைப்— பிரேதக் காட்டைக், கண்கொண்டு பார்க்கவும் பார்க்கலாமா? காயமுற்றவர்களின் அபயக் குரலைக் காதுகொடுத்துக் கேட்கவும் கேட்கலாமா?

1-வது காயக்காரன்:—ஐயோ செத்தேன்! செத்தேன்!

மானஸி:—எங்கே சகோதரா! எங்கே காயம்பட்டது காண்பி! அந்தோ! இவர் எவ்வளவு கஷ்டப்படுகிறார்?

1-வது காயக்காரன்:—இங்கே! இங்கே! அம்மா! தாங்கள் யார் தாயே?

மானஸி:—நான் யாராகவு மிருக்கிறேன்! சகோதர! நீ பேசாதே! வேதனை அதிகமாகும். (குண்டுபட்ட அவ்விடத்தைச் சுத்தித்து மருந்திட்டுத் துணியால் சுற்றிக் கட்டுகிறாள்.) பயப்படவேண்டாம்! காயம் அதிகமில்லை. சீக்கிரம் சௌக்கியமாகிவிடும். இந்தா! இந்த மருந்தை அருந்து! (காயக்காரன் மருந்து குடிக்கிறான். சமீபத்தில் மற்றொரு காயக்காரனின் கூக்குரல் கேட்கிறது. அங்கே போய்ப் பார்க்கிறாள்.)

2-காயக்காரன்:—ஹா...ய்! ஐயோ! [கண்ணீர் கடகட வென்று ஓடுகிறது.]

மானஸி :—பாவியோ! மருந்து கட்டுவதற்கு ஏற்பாடு செய்கிறேன். பயப்படாதே! (ரஜபுத்திர சைனிகன் ஒருவனைப் பார்க்கிறாள். அவன் அதி மரியாதையோடு மானஸியிடம் வந்து வணங்கி நிற்கிறான்.) இவரைச் சேவாசிரமத்திற்கு எடுத்துச்செல்ல ஏற்பாடு செய்! (அப்பால் செல்கிறாள்.)

3-வது காயக்காரன் :—ஹாய் பகவானே! பிராணனை வேண்டுமென்றால் எடுத்துக்கொண்டுவிடு! சித்திரவதைக்குச் சமமான வாதனையை ஏன் தருகிறாய்?

மானஸி :—(3-வது காயக்காரனிடம் சென்று அவன் நாடியைப் பிடித்துப் பார்க்கிறாள்.) மூர்ச்சை போட்டிருக்கிறது. பிராணன் போகவில்லை. (சைனிகன் ஒருவனை நோக்கி) இவனையும் எடுத்துக்கொண்டு செல்!

ஹிதாயத் :—தாகவிடாய்! தண்ணீர்! தண்ணீர்! நா வறளுகிறது!

மானஸி :—(ஹிதாயத்கானிடம் செல்கிறாள். பக்கத்தில் நிற்கும் சைனிகனிடமிருந்த தண்ணீர்க் கூசாவை வாங்கி, ஹிதாயத்திடம் கொடுக்கிறாள்.) இதோ தண்ணீர்! குடி! தாகம் தீர்த்துக்கொள்.

ஹிதாயத் :—ஆண்டவனே! பிராணன் பிழைத்தது. (சில சிப்பாயிகள் சகிதம், அஜய சிம்மன் அங்கே பிரவேசிக்கிறான்.)

அஜயன் :—அந்தகாரம் நிறைந்த இந்த இருளில்—பேய்கள் உலாவும் மயானக்காட்டில் நீ யார்? மீவார தேசத்து ராஜகுமாரியா?

மானஸி :—யார்? அஜய சிம்மனா?

அஜய :—(அருகே சென்று) ஆம் மானஸீ!

மானஸி :—அஜய! இதோ பார்! காடுபோல் கிடக்கும் காயக்காரர்களுக்கு சிகிச்சை செய்வதற்காக, உன் சைனிகர்களைச் சிறிது உதவி செய்யும்படி கட்டளையிடமாட்டாயா? என்பால் அதிகம் ஆட்களில்லை.

அஜய :—அவர்கள் எந்த விதத்தில் உனக்கு உதவி புரிய வேண்டும்?

மானஸி :—காயக்காரர்களைத் தூக்கிக்கொண்டு போய்ச் சேவாசிரமத்தில் சேர்க்கவேண்டும்.

அஜய :—சைனிகர்காள்! இக்காயக்காரர்கள் அனைவரையும் மானஸியின் கட்டளைப்படி சேவாசிரமம் சேருங்கள்! (சைனிகர் செல்கின்றனர்.)

மானஸி :—எவ்வளவு ஆநந்தத்தைத் தருகிறது அஜய!

அஜய :—எது மானஸீ!

மானஸி :—இந்தச் சேவை!

அஜய :—எவ்வளவு ஜோதிமயமா யிருக்கிறது மானஸீ?

மானஸி :—எது அஜய?

அஜய :—உனது வதனம்! சூரிய ஸ்புடம் எறியிருக்கும் ஜென்மபூமியில்—மிருத்யு தேவனின் லீலா க்ஷேத்திரத்தில்—பயங்கரமான இம்மயானப் பிரதேசத்தில்—நட்சத்திரங்கள் புஷ்பித்திருக்கும் இந்த

அர்த்த ராத்திரியில், ஆஹா! உனது முகாரவிந்தம் எவ்வளவு ஜோதிமயமாயிருக்கின்றது? பிரசண்ட வேகத்தால் அலைக்கழிக்கப்படும்சமுத்திர அலைகளிலிருந்து, காலையில் உதயமாகும் இளஞ் சூரியனைப்போல், மேகங்கள் மத்தியில் மேகங்களால் சூழப்பட்ட ஆகாசத்தின் நேத்திரானந்தமான நிலத்தைப்போல், துக்கத்தின் மீது அருள் பாலிக்கும் கருணையைப்போல் ஆஹா! எவ்வளவு அழகிய சொரூபம்! இந்த சௌந்தர்யம்! இந்த ஆனந்தம்! இந்தக் கருணைமயமான காம்பீர்யம்! இவைகளெல்லாம் எவ்வளவு அபூர்வமானவை மானஸி? (அப்படியே மானஸியின் அரவிந்தம் போன்ற கரங்களைப் பற்றிக்கொள்கிறான்.)

மானஸி:—அஜய!

(காட்சி முடிவு.)

---

## ஒன்பதாம் காட்சி.

இடம்:—உதயபுரி ராஜ சபை.

காலம்:—அதிகாலை.

[சில சாரணர்கள் வெற்றிக் கீதம் பாடிக்கொண்டு வருகின்றனர். அவர்களைத் தொடர்ந்து அமர சிம்மன், கோவிந்த சிம்மன், அஜய சிம்மன் முதலியோர் சிப்பாயிகள் சகிதம் வெளியிலிருந்து வந்து பிரவேசிக்கின்றனர்.]

" இச்சகத்து ளோரெல்லாம்
எதிர்த்து நின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே!
துச்சமாக எண்ணி நம்மைத்
தூறு செய்த போதினும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே!
பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை
பெற்றுவிட்ட போதினும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே!
இச்சைகொண்ட பொருளெலாம்
இழந்துவிட்ட போதினும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே!
உச்சி மீது வானிடிந்து
வீழுகின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே!"

(காட்சி முடிவு.)



---

முதல் அங்கம் முடிவுற்றது.

# இரண்டாவது அங்கம்.

## முதற் காட்சி.

இடம் :—ஆக்ராவில், ராஜா சகர சிம்மன் மாளிகை.

காலம் :—காலை.

[ராஜா சகர சிம்மனும், அவன் பேரன் அருண சிம்மனும் சம்பாஷித்துக்கொண்டு இருக்கின்றனர்.]

**சகர சிம்மன் :**—தேவார் யுத்தத்தில் மொகல் சைன்யங்களை, ராணு அமர சிம்மன், புல்லாங்காட்டை வெட்டிச் சாய்ப்பதுபோல் கொன்று குவித்துவிட்டானல்லவா? ஹா! ஆச்சர்யம்!

**அருண சிம்மன் :**—தன்ய ராணு அமர சிம்ம!

**சகர :**—இளம் பிராயத்திலேயே போர் புரிவதில், அமர சிம்மன் மகா கில்லாடியா யிருந்தான்! என்றாலும், மொகல் சைன்யத்தை முடிவாய் வெல்லமுடியுமென்று யாரால் சொல்ல முடியும்?

**அருண :**—மகரிஷி வால்மீகிகூடக் கொள்ளைக்காரனுகத்தான் இருந்தார் தாத்தா!

**சகர :**—மகரிஷி வால்மீகியா? அவர் யார் அருண? துளசிதாஸின் பிள்ளையா?

**அருண :**—பேஷ்! தாத்தா பேஷ்! வால்மீகியின் பேரைக்கூடக் கேள்விப்பட்டதில்லையா? அவர் மகா பெரிய மகரிஷி தாத்தா!

சகா :—அப்படியா? அவரை எங்கே பார்த்தேன்? ஞாபகமே இல்லையே?

அருண :—அவரை நீ எப்படி எங்கே பார்த்திருக்க முடியும்? திரேதாயுகத்திலல்லவா அவரிருந்தார்?

சகா :—எந்த யுகத்தில்?

அருண :—திரேதா யுகத்தில். இப்பொழுது நடப்பது கலியுகம்.

சகா :—திரேதா முடிந்து, இப்போது நடக்கிறது கலியுகமா?

அருண :—இல்லை தாத்தா! திரேதா போய், துவாபரம் முடிந்து, கலியுகம் நடக்கிறது.

சகா :—ஆமாம்! அப்போது நீகூட பிறக்கவில்லை. ஆனால் அவர் பெயரைக் கேட்டிருக்கிறேன். அவர் ஒரு பெரிய ரஸிகர்!

அருண :—இல்லை தாத்தா! அவர்தான் ராமாயணத்தை எழுதினவர்.

சகா :—ராமாயணத்தை அவரா எழுதினார்? அது ரொம்ப நல்ல புத்தகம்!

அருண :—ராமாயணம் நீ படித்ததில்லையா தாத்தா? பகவான் ராமச்சந்திரன்தான் நமது பூர்வ புருஷர்! அவர் கதைதான் ராமாயணத்தில் எழுதப்பெற்றிருக்கிறது! இதுகூடத் தெரியாதா? சீ!

சகா :—அதை நான் எப்படிப் படித்திருக்க முடியும் அருணா? சண்டை போட்டுச் சண்டை போட்டு என் காலமெல்லாம் போய்விட்டன. படிப்பதற்கு நேரமேது?

அருண :—நீ கூடச் சண்டை போட்டிருக்கிருயா தாத்தா?

சகர :—பெரிய பெரிய போர் புரிந்திருக்கிறேன். அப்போதெல்லாம் நீ பிறக்கக்கூடவில்லை.

அருண :—தாத்தா! நீ யார்கூட யுத்தம் செய்தாய்?

சகர :—யாருடன் என்பதே ஞாபகமில்லை. ஆனல் எப்போதோ போருக்குப் போயிருக்கிறேனென்பது மாத்திரம் ஞாபகமிருக்கிறது. அச்சமயம் உன் அம்மா...

அருண :—என் அம்மாவா? அவள் எங்கே தாத்தா?

சகர :—அவள் எங்கே இருக்கிருள் என்பது யாருக்கும் தெரியவராது. ஒரு நாள் அதிகாலையில் எழுந்திருந்து, ஹே! மீவாரமே மீவாரமே என்று கதறினுள். அதே நாள் மாலையில், அவளை நாங்கள் தேடினேம்; அகப்படவில்லை. எங்கோ போய் விட்டாள்.

அருண :—என் அப்பா?

சகர :—அவனொரு பைத்தியக்காரன்! சதா யுத்தம் யுத்தமென்று யுத்தவெறிகொண்டு திரிந்தான். ஒரு சமயம் மகா ராஜா கஜ சிம்மனுடன், கூர்ஜரத்தின் மீது போருக்குப் போனுன். ஆனல் திரும்பி வரவில்லை. அங்கேயே அமர பதம் அடைந்து விட்டானென்று சொன்னூர்கள்!

அருண :—என் அன்னை, இந்த மீவாரத்தில் எங்கேயாவது இருக்கத்தானே இருப்பாள்?

சகர :—இருக்கலாம்!

அருண :—நீயேன் மேவாரத்தைவிட்டு இங்கே வந்தாய் தாத்தா? உனது தம்பி ராணு பிரதாப சிம்மன் தனது தாய் நாட்டின் சுதந்தரத்தைக் காக்கத், காலமெல்லாம் யுத்தம் செய்து வீர சுவர்க்கம் எய்தினர்! ஆனல் நீ?

சகர :—பாவம் அவன் அவ்வளவு சின்ன வயதில் இறந்து போனுன்! எவ்வளவோ சொன்னேன். கேட்டால்தானே! என் குற்றம் என்ன இருக்கிறது?

அருண :—ஆனல், இன்று தெருத் தெருவாகக், கிராமங் கிராமமாக, நகரங்கள் தோறும், அந்த மகா வீர னுடைய அபார கீர்த்திக் கீர்த்தனத்தைச் சாரணர்கள் பாடிக்கொண்டு வருகிறார்களல்லவா?

சகர :—அதனுல் என்னுகிவிடப் போகிறது? அவன்தான் இறந்துவிட்டானே? இறந்த பிறகு எவ்வளவு தான் கீர்த்திப் பாடல் பாடினுலும் பிராணன் வந்துவிடப்போகிறதா திரும்பி? அல்லது அவர் கள் பாடுகிற கீர்த்திப் பிரதாபத்தை அவனுல் கேட்கத்தான் முடியுமா? ஒரு நாள் எனக்கு நன்ருக ஞாபகமிருக்கிறது. பிரதாபனும் நானும் சிறுவர்களாயிருந்தோம். அப்பொழுது ஒரு கீரி யும் பாம்பும் தம்மில் சண்டையிட்டுக்கொண்டி ருந்தன. நான் சொன்னேன் கீரிதான் ஜெயிக்கு மென்று பிரதாபன் என் பேச்சைக் கேட்க வில்லை. பாம்பின் படத்தைப் பார்த்துக் குறி வைத்துக்கொண்டு, கீரி இங்கும் அங்குமாகத் துள்ளி விழுந்து போர் புரிந்தது. பாம்பு சீறிக் கொண்டும், படத்தை விரித்துக்கொண்டும் கீரி யைக் கொல்ல முயன்றது. கடைசியில் கீரி ஜெ

பித்துவிட்டது. பாம்பு, படத்தைக் கீழே போட்டு அங்கேயே மாண்டு மடிந்தது. பாம்பைக் கொல்வதுதான் கீரியின் வேலை. கீரிக்கு முன்னுல் பாம்பு எத்தனை நேரம் தலை தூக்கி நிற்க முடியும்? அதனுலேதான் நான் கீரியின் கட்சியில் சேர்ந்தேன். பிரதாபன் பாம்பின் கட்சியிலிருந்தான். இப்பொழுதும் அப்படித்தா னிருக்கிறது.

அருண :—ஆனுல் இந்தத் தேவார் யுத்தத்தில்......?

சகர :—அதிருக்கட்டும் தம்பி! இந்த ரத்த பிஜவம்ஸம், எத்தனை காலத்திற்குத்தான் இப்படித் தலை தூக்கி நிற்க முடியும்? மறுபடியும், மொகலாயர்கள் ஜெயித்து சித்தூரைச் சர்வ நாசஞ் செய்தது போல், உதய புரியையும் பிடித்துக் கொட்டை பரப்பமாட்டார்களென்பது என்ன நிச்சயம்?

[மொகல் சேனுபதி ஸையத் அப்துல்லா பிரவேசம்.]

சகர :— வாருங்கள் ஸையத் சாகிப்! சலாம்!

அப்துல்லா :—சலாமாலேகும் ராணுஜீ!

சகர :—யார் ராணு?

அப்து :—தாங்கள் தான்.

சகர :—பேஷ்! நான் எதற்கு ராணு?

அப்து :—மீவாரத்திற்கு.

சகர :—எப்படி? மீவாரத்திற்குத்தான் அமர சிம்மன் ராணுவாக இருக்கிறுனே?

அப்து :—தில்லி பாதுஷா, தங்களை ராணுவாக்கியிருக்கிறுர்.

சகர :—அர்த்தமென்ன?

அப்து :—தங்களை உடனே சித்தூருக்குப் போகும்படி பாதுஷா கட்டளை!

சகா :—ஏன் அங்கே?

அப்து :—சித்தூர், தங்கள் ராஜதானியாக இருக்கும்!

சகா :— அப்படியானால், அமர சிம்மன் எதை ராஜதானியாக வைத்துக்கொள்வான்? உதய புரியையா?

அப்து :--அவர்தான் இப்பொழுது ராஜாவாக இல்லையே! அமரசிம்மனைப் பாதுஷா சிம்மாசனத்தைவிட்டு நீக்கிவிட்டார்.

சகா :—இருந்தாலும் எப்படி அவன் சிம்மாசனத்தை விடுவான்?

அப்து :—விடும்படி பலவந்தப்படுத்தப்படுவார்.

சகா :—அப்படியானால் நான் போய் அவனுடன் போர் புரியவா என்ன? வேண்டாமையா வேண்டாம்! நான் ராஜாவாகிப் பாழட குலைந்தேன்

அருண :—ஏன் தாத்தா, இப்போது சற்று முந்தித்தானே சொன்னாய் யுத்தம் செய்யத் தெரியுமென்று? இப்பொழுது சண்டை போடேன் பார்க்கலாம்!

சகா :—சும்மாயிருடா நீ. உன்னை யார் கேட்டா? (அப்துலாவை நோக்கி) இல்லை ஜனாப் சயத் சாகிப், என்னால் சண்டை கிண்டையெல்லாம் போட முடியாது. சண்டைக்குப் பயந்துதானே இப்படி மொகலாயர்களை சரணமென்று வந்திருக்கிறேன். யுத்தம் செய்யத்தான் வேண்டுமானால் நான் என் பிராணனை எடுத்துக்கொண்டு மரியாதையாய்ச் சுதேசம் போய்ச் சேருகிறேன்.

அப்து :—அப்படி யொன்றும் நீங்கள் சண்டைபோடவேண்டாம். வேண்டியதிருந்தால் நாங்கள் போடுகிறோம். நீங்கள் தயவு செய்து ராஜாவாகச் சித்தூரில் போய் இருங்கள் போதும்.

சகர :—ஆனால் அந்தச் சித்தூரின் மீது அமரசிம்மன் படையெடுத்தால்?

அப்து :—அப்படிச் செய்யமாட்டார். இதுவரை செய்யாதவரா இனி அதன் மீது படையெடுக்கப் போகிறார்?

சகர :—ரொம்ப நல்லாயிருக்கிறது ஜனாப் நீங்கள் செய்கிற சித்தாந்தம்! இதுவரை சாகாதவன் இனிச் சாகிறதே இல்லையா? அன்றைக்கு நீங்கள் கல்யாணம் செய்தீர்கள். இனிக் கல்யாணமே செய்து கொள்ள மாட்டீர்களா?

அப்து :—நீங்கள் சொல்வதின் அர்த்தம் எனக்கு விளங்கவேயில்லையே. என்ன சொல்கிறீர்கள்?

சகர :—தங்கள் கல்யாணத்திற்கு முன்னால் தங்களுக்குக் கல்யாணமாகாமலே இருந்தது. அப்பொழுது தங்களுக்குக் கல்யாணமே ஆகாதென்று, தாங்களோ அல்லது பிறரோ எப்படி எண்ணமுடியும்? பின் அது நடந்தது. ஆனால் அது கல்யாணமல்லவோ? (அருணா சிம்மன் நகைக்கிறான். அவனை நோக்கி) ஏண்டா சிரிக்கிறாய்? (அப்துலாவைப் பார்த்து) இதற்கு முன் எப்போதும் பாம்பு கடிக்கவில்லை. ஆனால் இனி என்றுமே அது கடியாதென்று அர்த்தமா?

அப்பு :— இப்படியேன் குழம்பிக் குழம்பி மாறி மாறிப் பேசுகிறீர்கள் ஜனாப்?

சகா :—மன்னிக்கவேண்டும்! எனக்கு ராணுவாக விருப்பமேயில்லை!

அப்பு :—நல்லது ஜனாப்! பாதுஷாவிடம் செல்லுங்கள். அவர் உங்களுக்குச் சொல்லவேண்டியதெல்லாம் சொல்வார்!

சகா :—சரி போகலாம்! ஆனால் இது ரொம்பக் கேவலம்! என்னை உள்ளங்கையில் அடக்கிவைத்துக்கொண்டு, உங்களிஷ்டம்போல் ராணுவாக்கப் பார்க்கிறீர்கள்! என்ன ஆகுமோ தெரியவில்லை. வா அருணா போகலாம். விதி! இது விதி!

காட்சி முடிவு.

---

## இரண்டாங் காட்சி.

இடம் :—உதயபுரி அந்தப்புரம்.
காலம் :—மாலை.

[மானவி ஏகாந்தமாய், ஆனந்தமாக, இயற்கையை ரஸித்துப் பாடிக்கொண்டிருக்கிறாள்.]

"பார்! சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்
எத்தனை தீப்பட் டெரிவன! ஓகோ!
என்னவோ இந்த வன்னத் தியல்புகள்!
எத்தனை வடிவம்! எத்தனை கலவை!
தீயின் குழம்புகள்! செழும்பொன் காய்ச்சி

விட்ட ஒடைகள்! வெம்மை தோன்றுமே
எரிந்திடுந் தங்கத் தீவுகள்! ஆஹா!
நீலப் பொய்கைகள்! அடடா! நீல
வண்ண மொன்றில் எத்தனை வகை வகை
எத்தனை செம்மை! பசுமையுங் கருமையும்
எத்தனை! கரிய பெரும் பெரும் பூதம்!
நீலப் பொய்கையில் மிதந்திடுந் தங்கத்
தோணிகள்! சுடரொளிப் பொற்கரை யிட்ட
கருஞ் சிகரங்கள்! கல்கவர் தோற்றம்!
தங்கத் திமிங்கிலம் தாம்பல மிதக்கும்
இருட்கடல்! ஆஹா எங்குநோக் கிடினும்
ஒளித்திரள்! ஒளித்திரள்! வன்னக் களஞ்சியம்!"

[அஜய சிம்மன் வருகிறான்.]

மானஸி:—யார்? அஜய சிம்மனா?

அஜய:—ஆம் மானஸி!

மான:—இத்தனை நாளாய் நீ ஏன் இங்கு வரவில்லை? உடம்புக்கு அப்படி யொன்றுமில்லையே?

அஜய:—இல்லை மானஸி! இல்லை! உனது பரம பவித்திரமான சேவா கைங்கர்ய புண்ணியத்தால் யாதொன்றும் அணுகாது மானஸி! ஆனால் நீ யேன் இங்கு ஏகாந்தமாய் இருக்கின்றாய்?

மான:—பாடிக்கொண்டிருந்தேன். யோசனை வந்துவிட்டது.

அஜய:—யாது யோசனை?

மான:—மனிதர்களைப்பற்றி யோசனை! மக்கள் எங்கு பார்த்தாலும் மகா அபாக்கியர்களாக இருக்கின்ற

னர். தேவார் யுத்தத்தில் நான் ஏதாவது பாடம் படித்துக்கொண்டதுண்டானால், அது மனிதர்கள் ரொம்ப பலவீனர்களாக இருக்கிறார்களென்கிற ஒரே பாடந்தான். மின் வெட்டுப் போன்ற ஒரே வாள் வீச்சில், மனிதன் பாவம் பூமியிலே விழுந்து படுகிறான்! கொஞ்ச ஜுரம் வந்துவிட்டதானால், குழந்தையைப் போல் சகாயமற்றவனாகிவிடுகிறான்! அந்தோ! அவன் ரத்தத்தில், மரணத்தின் விதை, சதா வளர்ந்துகொண்டேயிருக்கிறது! பரஸ்பரம் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி அமரர்களைப்போல் வாழாமல், மனிதர் ஏன் இப்படி ஒருவர்க்கொருவர் பகைவர்களா யிருக்கின்றார்கள்? அதிருக்கட்டும் அஜய! நீ யேன் இப்படி இமை கொட்டாமல் என் முகத்தையே பார்த்துக்கொண்டிருக்கிறாய்?

அஜய:—ஆம். அன்று கண்ட அதே அமரஜோதியை, நான் இன்றும் உன் வதனத்தில் காணுகிறேன் மானவி!

மான:—என்று?

அஜய:—அன்று இரவு! தேவார் யுத்தகளத்தில்! அந்த அந்தகாரத்திலே, தரை நிறைந்த பூரண சந்திரமாவைப் போல், மூர்த்தண்யமாய் இருந்தது உன் முகம்! அப்பொழுது என் பிரேமகாதலானது, நிராசையின் நீண்ட ஸ்வாசத்தோடு ரேசித்தது!

மான:—நிராசை எவ்விதம்?

அஜய :—எப்படிப்பட்ட நிராசை யென்று கேட்கிறாய் மானஸி? உன்னைக் கைப்பிடிக்க முயலுவது முடியாத காரியமென்று எனக்குத் தோன்றிற்று. நீ இந்த உலகத்தைச் சேர்ந்த பெண்ணல்ல என்று எனக்குப் புலனாயிற்று. ஸ்வர்க்கத்தின் தேவியாக உன்னை ஸ்தோத்தரிக்கத் தொடங்கினேன். உனது உன்னதமான ஆத்மாவின் திவ்ய ஜோதியைச் சகிக்கக்கூடிய சக்தி, பூலோகத்துக் கில்லை! அதனாலேதான் ஆண்டவன் உனக்கு அபூர்வமான அழகையும், அளவிடமுடியாத அறிவையும் அளித்திருக்கிறான்! ஆகாசம் அரங்கமாகவும், அதிலிருக்கிற ஒவ்வொரு நட்சத்திரமும் ஒவ்வொரு சரித்திரமாகவும், சந்திரன் நிர்மலமான சங்கிர்தனாகவும், இயற்கை அம் மஹா நாடகத்தின் கதா நாயகனாகவும் விளங்குகிற காட்சி, நேத்திரானந்தமாகவும், பிரமானந்தமாகவும் இருக்கிறது—நீ. நான் உன்னைக் காதலிக்க யோக்கியதையற்றவன். ஆனால் காதலுக்குப் பதிலாய் பக்தி செலுத்த முடியும். அந்தப் பக்திக்கு நீ, சிறிதே—ரெம்பச் சிறிதே கருணை பாலித்தால் போதும்! என் இச்சையைப் பூர்த்தி செய்ய மாட்டாயோ மானஸீ?

[அஜய சிம்மன், மானஸியின் கரங்களைப் பற்றுகிறான். அவ்வளவில் ராணி அங்கு வந்து சேருகிறாள்.]

ராணி :—அஜய சிம்மா!

[மானஸியின் கரங்களை விட்டு விட்டுச் சற்றுப் பின் வாங்குகிறான்.]

மான :— என்ன அம்மா?

ராணி :— அஜயா! இனிமேல் இம்மாதிரி ஏகாந்தமாய் எனது கன்னிகையோடு பேசக்கூடாது தெரியுமா?

அஜய :— மன்னிக்கவேண்டும் மகா ராணி!

மான :— மன்னிக்கவா? ஏன் மன்னிக்கவேண்டும்? எதற்காக? மன்னிக்கப்படவேண்டிய அப்படியென்ன குற்றத்தை நீ செய்தாய் அஜய?

ராணி :— வெறும் பெண்ணல்ல. ராஜ கன்னிகை நீ என்பது ஞாபகமிருக்கட்டும் மானவி! போ! உள்ளே போ!

[மானவி செல்லுகிறாள்.]

ராணி :— சேனு நாயகர் கோவிந்த சிம்மருடைய குமாரன் நீ! உன்னை நாங்கள் எங்கள் வீட்டுப் பிள்ளையைப் போல் எண்ணியிருக்கிறோம். மேலும், மானவியும் நீயும் இன்னும் குழந்தைகளல்ல—ஒத்த வயதுக்கு வந்துவிட்டவர்களென்பதை ஞாபகம் செய்துகொண்டு வார்த்தையாடல் வேண்டும்! அவளை நீ சந்திக்கவுங் கூடாது!

அஜய :— உத்தரவு!

[அஜய சிம்மன், ராணியை வணங்கிக் கொண்டு செல்லுகிறான்.]

ராணி :— இந்த அஜய சிம்மனுக்கும், என் தவ மகள் மானவிக்கும் விவாகம் முடியுமானால் ரொம்ப நன்றாயிருக்கும். ஆனால் அது எப்படி ஆக முடியும்? இல்லை; ஆகக்கூடிய காரியமல்ல அது. அதைப் பற்றி வீணே சிந்தனை செய்து யாது பலன்?

[ராஜா அமரசிம்மன் பிரவேசம்.]

ராஜா :—ராணி!

ராணி :—மகாராஜ்! தங்களைச் சந்திக்கவேண்டுமென்று இப்பொழுதுதான் எண்ணினேன்; வந்துவிட்டீர்கள். என்ன சங்கதி?

ராஜா :—அதிருக்கட்டும் மாளவியை நீ என்ன செ... ா?

ராணி :—ஒன்றும் சொல்லவில்லையே. ஏன்? என்ன...

ராஜா :—அழுதுகொண்டிருக்கிறாள்.

ராணி :—(அதி ஆச்சர்யம் அடைந்தவளாய்) அழுது கொண்டிருக்கிறாளா? ஏன்?

ராஜா :—ஏனோ? போய்ப்பார்!

ராணி :—பைத்தியக்காரப் பெண்! ஏன் அழுகிறாள்! அழக்கூடிய அவ்வளவுக்கு அப்படியொன்...ம் நான் சொல்லவில்லையே? நீங்கள்தான் உங்கள் பெண்ணைக் கவனிக்கிறதே யில்லை. அவளுக்குச் சுயமாகவே ஒன்றும் தெரிகிறது மில்லை. கொஞ்ச நேரத்துக்கு முன் அஜய சிம்மனோடு அவள்......

ராஜா :—ஜதனம்! மாளவி விஷயத்தில் எதுவும் நன்றாய்த் திர்க்காலோசனை செய்து பேசு! அவள் யாரென்று உனக்குத் தெரியுமா?

ராணி :—யார் அவள்?

ராஜா :—எனக்குந் தெரியாது அவள் யாரென்று! அவளை யின்னாரென்று என்னால் இதுவரை அறிந்து கொள்ளவே முடியவில்லை! அவள் யார், எங்கிருந்து வந்தாள் என்பது யாருக்குந் தெரியாது

ராணி :—இருவருக்கும் நான் கெட்டவளாகிவிட்டேன். தங்கைக்கும் நல்லவளல்ல—மகளுக்கும் நல்லவளல்ல நான். நல்லது நான் போய்ப் பார்க்கிறேன் என் அழுகிருளென்று (புறப்படுகிருள்.)

ரா[illegible] :—இதோ ! ராணி !

(ராணி திரும்பிப் பார்க்கிருள்.)

[illegible] :—இந்தா ராணி! இனிமேல் மாங்கலியை ஒன்றும் சொல்லாதே! சுவர்க்கத்திலிருந்து ஒரு கிரணமானது தயவு செய்து இவ்வுலோகத்தில் உதித்திருக்கிறது. ஆனல், நீ ஏதாவது கூறிவிட்டாயோ அது திரும்பிப் போய்விடும்!

[ராணி செல்கின்ருள். ராஜா ஓர் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்து ஆகாசத்தை நோக்கிக்கொண்டு.]

ராஜா :—ஜீவியமே ஒரு கனவைப் போன்றிருக்கிறது. இதோ இந்த ஆகாசமானது எவ்வளவு நீலமாகவும், ஸ்வச்சமாகவும், வர்ண பேதமுள்ளதாகவுமிருக்கிறது! அதன் கீழே ஊசலாடிக்கொண்டிருக்கும் மந்தார மேகமானது சமுத்திரத்தைப் போல் விசாலமாகவும், கைமாறு கருதாது உதவும் உதாரம் நிறைந்ததாகவும் இருக்கிறது! சமயா சமயங்களில், அந்தச் சௌந்தர்ய மேகங்கள், பயங்கரமாய்க் கர்ஜித்துக்கொண்டும், பேரிடிகளை முழக்கிக்கொண்டும் மழையாகிற ஜல வர்ஷத்தைப் பிரவகிக்கச் செய்கிறது. அப்புறம்

காலைக் கடலிற் கருத்தின்றிக் கேட்டிருக்க,
இன்னமுதைக் காற்றினிடை எங்குங் கலந்ததுபோல்
மோகனப் பாட்டு முடிவுபெறப் பாரெங்கும்
ஏக மவுன மியன்றதுகாண்! மற்றதிலோர்
இன்ப வெறியும் துயரும் இணைந்தனவால்.

"காதல், காதல், காதல்
காதல் இன்றேல்
சாதல், சாதல், சாதல்.

"பெண்டிர் மனத்தைப் பிடித்திழுக்குங் காந்தமே!
மென்மையுறக் காதல் விளையாடினேன் என்றீர்;
என் சொல்வேன்! எங்ஙனுய்வேன்! ஏது செய்கேன்!
நின் சொல் மறுக்க நெஞ்சில்லை ஆனாலும் [ஐயனே!
என்மேற் பிழையில்லை யாரிதனை நம்பிடுவார்?
நின்மேற் சுமை முழுதும் நேராகப் போட்டுவிட்டேன்.
காதலுற்று வாடுகின்றேன் காதலுற்ற செய்தியினை
மாத ருரைத்தல் வழக்கமில்லை யென்றறிவேன்.
ஆனாலும் என்போல் அபூர்வமாங் காதல் கொண்டால்
தானா உரைத்தலன்றிச் சாரும் வழியுளதோ?
ஒத்த குலத்தவர்பால் உண்டாகும் வெட்கமெலாம்.
ஆனாலும் ஆசைதான் வெட்கம் அறியுமோ?

"கூடல், கூடல், கூடல்
கூடலின்றேல்
வாடல், வாடல், வாடல்.

"மானக் குலைவும் வருத்தமும் நான் பார்க்காமல்
உண்மை முழுதும் உரைத்திடுவேன் காதலா!
காதல் வழிதான் காடுமுரடாமென்பர்.
சோதித் திருவிழியாய் துன்பக் கடலினிலே

கல்லுறுதி கொண்டதோர் காவாய்போல் வந்திட்டாய்!
அல்லலற உன்ஞேடளவளாய் நான் பெறுமின்
பின்பத் திளுக்கும் இடையூறு மூண்டதுவோ?

"இன்பம், இன்பம், இன்பம்
இன்பமின்றேல்
துன்பம், துன்பம், துன்பம்."

[ராணி பிரவேசம்.]

ராணி:—மானஸி!

மான:—ஏனம்மா!

ராணி:—உன் அப்பா உன்னை அழைக்கிருர்.

மான:—ஏன்? எதற்காக என்னை அவரழைக்கிருர்?

ராணி:—உன் விவாஹத்துக்கு நாள் குறிக்கவேண்டியிருக்கிறது. அதற்காக உன்னிடம் என்னவோ கேட்கவேண்டுமாம். ஆனல் என் பேச்சைத்தான் அவர் கேட்கிறதே யில்லையே!

மான:—என் விவாஹமா?

ராணி:—ஆம் ஜோதிபுரி ராஜகுமாரன் ஜஸ்வந்த சிம்மனுக்கு உன்னைக் கல்யாணஞ் செய்துகொடுக்கிறதென்று பேசி முடித்திருக்கிரும். நாள் குறித்து நிச்சயார்த்தஞ் செய்வதற்காக ஜோதிபுரி மஹாராஜாவிடமிருந்து ஆள் வந்திருக்கிறது.

[மானஸி அழுகிருள்.]

ராணி:—ஏன்? ஏன் அழுகிருய் மானஸி?

மான:—இல்லை; நான் அழவில்லை; எனக்குக் கல்யாணம் வேண்டாம்.

ராணி :—கல்யாணஞ் செய்துகொள்ளாமல் வேறென்ன செய்கிறது ?

மான :—விவாஹ பந்தனத்தால் என்னை நானே கட்டுப்படுத்திக்கொள்ள விருப்பமில்லை. காதலையும், கல்யாணத்தையும்விடப் பெரியதும் அரியதுமான சேவையில் மனம் செல்லுகிறது.

ராணி :—எங்காவது இப்படி யுண்டா ? கன்னிகையாகப் பெண்கள் காலங்கழிக்க முடியுமா ?

மான :—ஏன் முடியாதம்மா ? பால்ய விதவைகளால் அநுஷ்டிக்கமுடிகிற பிரமச்சரியத்தை பால்ய குமாரிகளால் அநுஷ்டிக்க முடியாதா ? நான் பிரமச்சாரிணியாயிருக்கப் போகிறேன். அப்பாவிடம் போய்ச் சொல்லுகிறேன்.

[மானஸி போகிறாள்.]

ராணி :—இதென்ன இவளுக்குப் பைத்தியம் கியித்தியம் பிடித்துவிட்டதா ? இல்லாவிட்டால் இப்படியும் பேசுவாளா ? முந்தியிருந்தே எனக்குப் பயமாயிருந்தது ! அதோ அவரும் வருகிறார்; நன்றாய் நாலிரண்டு வார்த்தைகள் அவருக்குச் சொல்லிக் காண்பிக்கிறேன்.

[ராஜா வருகிறார்.]

ராஜா :—மானஸி யெங்கே ?

ராணி :—தங்களிடத்தில் வரவில்லையா அவள் ? அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டபோலிருக்கிறது !

ராஜா :—பைத்தியம் பிடித்துவிட்டதா ?

ராணி :—அப்புறமென்ன ? கல்யாணஞ் செய்துகொள்ள

மாட்டாளாம்; பிரமச்சாரிணியாயிருக்கப் போகிறாளாம்.

ராஜு :—வாஸ்தவம்; விவஸ்தை தெரிந்தவள்.

ராணி :—அப்பொழுதே சொன்னேன் அவளைக் கொஞ்சங் கவனியுங்களென்று. கேட்டால்தானே! இப்பொழுது தெரிகிறதா பலன்?

ராஜு :—எனக்கு எல்லாம் தெரிகிறது; உனக்குத்தான் ஒன்றுந் தெரியவில்லை.

ராணி :—எனக்கும் எல்லாம் தெரியும்: அவளுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது.

ராஜு :—வாஸ்தவம். அதே பைத்தியம் உனக்குப் பிடித்திருக்குமானால் சுவர்ண சிம்மாசனத்தில் உட்கார வைத்து உன்னை நான் பூஜிப்பேன்.

ராணி :—கேட்டீர்களா சேதியை! அப்பாவுக்கும் மகளுக்கும் ஒரே பைத்தியம்.

ராஜு :—ராணி! அவள் ஒரு சுவர்க்க பதார்த்தம். அவ்வளவுதான் அவளை என்னால் அறிய முடிந்தது; அதற்கு மேலும் அறிய முடியவில்லை.

ராணி :—என்ன....?

ராஜு :—இல்லை. அவள் விஷயத்தில் நீ தலையிடாதே! அவளைப் பார்த்துக்கொண்டிரு! வாயை மூடிக்கொண்டு அவளின் அபூர்வ சக்தியைப் பார்த்துக்கொண்டேயிரு!

[ராஜு போகிறார்.]

ராணி :—வாஸ்தவம். அப்பாவுக்குள்ள புத்தி மகளுக்கும். விரையொன்று போடச் சுரையொன்று முளைக்குமா? என்னவோ? நடப்பதொன்றும் நன்றாயில்லை.

[ராணி போகிறாள்.]

(காட்சி முடிவு.)

---

## ஆறாங் காட்சி.

---

இடம் :—கோவிந்த சிம்மன் வீடு.

காலம் :—பகல் பத்துமணி.

[சுவற்றில் ஒரு படம் மாட்டப்பட்டிருக்கிறது. கல்யாணி கையில் புஷ்பமாலையை வைத்துக்கொண்டு படத்துக்கு முன்னே நிற்கிறாள்.]

கல்யா :—பிராணேஸ்வர! பிரியதம! யௌவன நந்தவனத்தின் நாத! எனது சொப்பனாவஸ்தையின் சுக ஜாக்கிரதையும், ஜாக்கிராவஸ்தையின் சொர்ண சொப்பனமும் நீரே! நீரே யென் வாழ்க்கையில் வர்ணந் தீட்டியவர்! நீரே யென் சாமான்ய ஜீவியத்தில் பிரமாதமான ரகஸ்யத்தை யுண்டாக்கியவர்! நீரே பிராதக் காலத்துப் பிரபா சூரியன்! நீரே எனது ஹிருதயமாகிற அந்தரங்கப் பள்ளியறையின் அமர ஜோதி! நீரே எனது ஹிருதய சாம்ராஜ்யத்தின் சக்கிரவர்த்தி! ஆகை

யால் எனது அதிகாரியும் நீர்! அன்பும் நீர்! நிராசையின் தலையை நிமிர்த்தி, பிரேம உலகத்தில் பிரவேசிக்கச் செய்த பிரபுவே! சதா மதுரமாகவும், சதா நவீனமாகவும் நீர் இருக்கிறீர்! நீரே எனது சுவாமி! நீரே எனது ஆராதிய தேவதை! நீரே எனது வாழ்க்கையின் தபோவனம்! (கையிலிருந்த புஷ்பமாலையைப் படத்துக்குச் சாத்துகிறாள்.)

கோவி :—(கம்பீரமாய்) கல்யாணி!

கல்யா :—(திரும்பி) அப்பா!

கோவி :—அது யார் படம்?

கல்யா :—(தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு) என் கணவனுடையது.

கோவி :—உன் கணவன் யார்? மஹேபத்கானா?

கல்யா :—ஆம்.

கோவி :—இந்தப் படம் இங்கெப்படி வந்தது?

கல்யா :—பூஜிப்பதற்காக நான்தான் இதை இன்று இங்குக் கொண்டுவந்து வைத்தேன்.

கோவி :—பூஜிப்பதற்காகவா?

கல்யா :—ஆம். பூஜிப்பதற்காகத்தான். ஏன் கோபிக்கிறீர்களப்பா? கோபப்படக்கூடிய குற்றமா இது? (கோவிந்த சிம்மன் கால்களைப் பிடித்துக்கொள்ளுகிறாள்.)

கோவி :—மஹேபத்கான் யார்?

கல்யா :—(எழுந்து) என் புருஷர் அவர்!

கோவி :—உனக்குக் கணவனில்லை என்று எத்தனையோ தரம் நான் சொல்லவில்லையா ?

கல்யா :—சொன்னீர்கள்; அதை நான் அப்பொழுது நம்பினேன். ஆனால் இப்பொழுது எனக்குக் கணவனிருப்பதாய்க் கண்டுகொண்டேன்.

கோவி :—யார் ? விதர்மி மஹபத்கானா உன் கணவன் ?

கல்யா :—ஆம், அவர்தான் என் கணவர், தர்மத்தை நானறியேன் ! ஆச்சாரத்தையும் அறியேன் ! அவரோடு எனக்கு விவாஹம் நடந்தது; அதுதான் எனக்குத் தெரியும். அந்த விவாஹ பந்தனத்தில் ஈஸ்வரனைச் சாட்சியாக வைத்து நாங்களிருவரும் ஒன்றானோம்—எங்களைப் பிரிக்க யாரால் முடியும் ?

கோவி :—மஹபத்கான் முஸல்மானாகி, ஸ்வயம் தானாகவே உங்கள் விவாஹ பந்தனத்தை உடைத்துவிடவில்லையா ?

கல்யா :—இல்லை. முஸல்மானான பின்னும் அவர் என்னை ஏற்றுக்கொள்ளவே விரும்பினார்.

கோவி :—ஏற்றுக்கொள்ள விரும்பினானா அவன்? அது அவன் இஷ்டத்தைப் பொறுத்ததல்ல; முஸல்மானான பின் கோவிந்த சிம்மனுடைய பெண்ணை ஏற்பதோ நிராகரிப்பதோ, அது அவன் இஷ்டத்தைப் பொறுத்ததல்ல. என்றைக்கு மஹபத்கான் ஹிந்து தர்மத்தைவிட்டு முஸல்மானானானோ,

அன்றைக்கே அவன் உன்னையும் பரித்தியாகம் பண்ணிவிட்டான்.

கல்யா :—இல்லை; என்னையவர் பரித்தியாகம் பண்ணவில்லை.

கோவி :—என்ன சொல்லுகிறை? உன்னையவன் பரித்தியாகம் பண்ணவில்லையென்று சொல்லுகிறை? நல்லது; நான் கேட்பதற்கு பதில் சொல்! நீ மறுபத்காரனுக்குக் கடிதம் எழுதினுயா இல்லையா?

கல்யா :—ஆம், எழுதினேன்.

[அஜய சிம்மன் வருகிறுன்.]

கோவி :—ஹா! அதிர்ஷ்ட ஹீனமே! (தலையிலடித்துக்கொண்டு) அந்தக் கடிதத்தை அவன் திருப்பியனுப்பிவிட்டதுமல்லாமல் அதன் மீது "கல்யாணி! உன்னை நான் ஏற்றுக்கொள்ள முடியாது" என்றும் எழுதியிருக்கிறுன். இவ்வளவு அவமானம் செய்யப்பட்ட பின்னும் நீ சும்மா இருக்கப்படாதா? இந்தா அந்தக் கடிதம்!

[கோவிந்த சிம்மன் கையிலிருந்த கடிதத்தைக் கீழே யெறிகிறுன். கல்யாணி அதைக் கையிலெடுத்து உற்சாகத்தோடு பார்க்கிருள்.]

கோவி :—என்ன அஜயா! அந்தச் சமாச்சாரம் வாஸ்தவமா?

அஜய :—ஆம் அப்பா! முழுதும் வாஸ்தவந்தான். மொகலாயர்கள் மறுபடியும் மீவாரத்தின் மீது படையெடுத்து வருகிறார்களாம்.

கோவி :— இந்தத் தடவை மொகல் சேனுபதி யார்?

அஜய :— இளவரசன் பர்வேஜ்!

கோவி :— சைன்யம் எவ்வளவு?

அஜய :— ஏறக்குறைய ஒரு லட்சமாம்.

கோவி :— சரி; சர்வ நாசந்தான்; என்ன மிஞ்சப்போகிறது இந்தத் தடவை? மீவாரத்தில் கொஞ்சநஞ்சம் ஒட்டிக்கொண்டிருந்த உயிரும் போய்விடப்போகிறது. ஏன் கல்யாணி? ஏன் இப்படித் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டிருக்கிறாய்?

கல்யா :— என்ன சொல்லுவேன் அப்பா!

கோவி :— இனியும் மஹாபத்கான் உன் கணவன்தானு?

கல்யா :— ஆம். இனியும், இந்த ஜென்மத்திலும், எல்லா ஜென்மங்களிலும் அவர்தான் என் பதி. எந்தப் பதி, தன் மனைவியை யாதரிக்கிறாரோ அவரை ஸ்திரீகளும் பூஜிக்கிறார்கள். ஆனால் மிதிக்கிற காலைப் பூஜிக்கிற மனைவிதான் உண்மையான பதிவிரதை. எவளுடைய பதி பக்தியானது, வியோகமடைந்தபோதும் குறைகிறதில்லையோ, அவமானமடைந்தபோதும் சங்கோசமடைகிறதில்லையோ, நிஷ்டூரஞ் செய்யப்பட்டபோதும் நிலை குலைகிறதில்லையோ, நிராசை காண்பிக்கப் பட்டபோதும் நிம்மதியோ டிருக்கிறதோ, அந்தப் பதி பக்தியானது, அந்தகாரத்தில் சந்திர

லைப்போல் சாந்தமாகவும், பர்வதத்தைப்போல் திடமாகவும், துருவதாரகையைப்போல் (துருவ நட்சத்திரம்) ஸ்திரமாகவும் இருக்கிறது. எத்தகைய அவஸ்தையிலும், எவ்வளவு அவசரத்திலும் விஸ்வாசத்தைப்போல் ஸ்வச்சமாகவும், (தெளிவு) கருணையைப்போல் அநாயாஸமாகவும், மாத்ரு ஸ்நேகத்தைப்போல் நிரபேக்ஷையுடையதாகவும் இருக்கிற பதி பக்திதான் வாஸ்தவமான பதி பக்தி. அவர், எனது ஸ்வாமி, பதி, தேவதை! அவர், என்னைத் தமது சேவையில் வைத்துக்கொண்டாலும் சரி, இல்லாவிட்டாலுஞ் சரி எனக்கு இரண்டும் ஒன்றுதான்.

கோவி :—இரண்டும் ஒன்றுதானு? நீ என் கன்னிகையல்லையோ?

கல்யா :—ஆம். தங்களுடைய கன்னிகைதான் நான். தங்களுடைய கௌரவத்துக்கு நஷ்டம் வரும்படி நான் ஒருக்காலும் நடக்கமாட்டேன்.. இன்றைக்கு நான் ஒரு கடினமான விவஸ்தையிலே சிக்கிக்கொண்டிருக்கிறேன். ஒரு பக்கம் பிதா இன்னொரு பக்கம் பதி. பிதா பிரியத்துக்குப் பாத்திரமானவர்; பதி காதலுக்கு. விவாஹமாகிவிட்ட ஸ்திரீகளுக்குக் கணவனே சதம் என்பதை இன்று கண்டுகொண்டேன். தாங்கள் எப்படித் தங்களுடைய உயிரைத் தேசத்துக்காக அர்ப்பணித் திருக்கிறீர்களோ, அப்

படியே நானும் என் பிராணனைப், பதி பக்தியின் பாதத்திலே சமர்ப்பித்திருக்கிறேன். அதை நிறைவேற்றுவதிலிருந்து என்னை யாராலுந் தடுக்க முடியாது. (ஆவேசத்தால் அவள் தொண்டை கர்முகிறது.)

கோவி :—அர்ப்பணம்? இத்தகைய குடில (வஞ்சகம்) பிரவிர்த்திக்கும் அர்ப்பணமென்ற பெயரா?

அஜய :—அப்பா! சொல்லுவதை நன்றுய் யோசித்துச் சொல்லுங்கள்! குரோதத்தால் கண் கருத்தறியாமல் பேசலாமா? எது அதி உச்சமானதாகவும், அதி பவித்திரமானதாகவு மிருக்கிறதோ அதைத் தாங்கள் ஏன் இவ்வளவு கேவலமாகக் கருதுகிறீர்களென்பது எனக்கே விளங்கவில்லை.

கல்யா :—(கர்வத்தோடு) அண்ணு! நீதான் எனது உண்மையான சகோதரன்.

கோவி :—அஜய! கல்யாணிக்குக் கணவனில்லையென்றும், அவள் விதவையாகிவிட்டாளென்றும் நான் நூறு தரம் சொல்லியிருக்கிறேன்.

கல்யா :—ஆம். அதே மாதிரி நானும் எனது ஜீவியத்திலும், மரணத்திலும் அவர்தான் என் பதியென்று ஆயிரந்தரஞ் சொல்லத் தயாராயிருக்கிறேன்.

கோவி :—மஹறபத்கான் உன் பதி? அத்தகைய குலத்துரோஹி, நீசன், அதமாதமன். அவனு உன் பதி?

கல்யா :—அப்பா! அவர் எவ்வளவுக் கெவ்வளவு உங்களுக்கு ஆகாதவராகிவிட்டாரோ அவ்வளவுக் கவ்வ

ளவு எனக்கு ஆராதனைக்குரியவராயிருக்கிறார். ஏன் வீணில் சபிக்கிறீர்கள் ?

**கோவி** :—ஹூம்! அந்தச் சாதித் துரோகி! விதர்மி! மறுமதக்காரனா என் கன்னிகையின் ஆராதனைக்குரியவன் ?

**கல்யா** :—(ஸ்திரமான ஸ்வரத்தில்) பிதாஜீ! எனக்குப் பிதாவும் வேண்டாம், ஜாதியும் வேண்டாம், தர்மமும் வேண்டாம், கணவன்தான் வேண்டும். அவரே என் தர்மம்! அவரே என் சொத்து! அவரே என் சுகம்! சாஸ்திரங்களில், ஸ்திரீகளுக்குக் கணவனைவிடச் சிரேஷ்டமான ஒரு பொருளிருப்பதாயெழுதியிருக்கவில்லை. இல்லறத்தில் ஒரு ஸ்திரீயானவள் ஒரு தரம் இறங்கிவிட்டாளானால் அது பாற்கடலாயிருந்தாலுஞ் சரி, நச்சுப் பொய்கையாயிருந்தாலுஞ் சரி அதிலே கிடந்து வாழவோ, வீழவோ வேண்டியதுதான். ஹிந்துவோ முஸல்மானோ, ஆஸ்திகரோ நாஸ்திகரோ என்றைக்கு நான் ஒருவர் கழுத்தில் விழுந்துவிட்டேனோ அன்றைக்கு முதல் அவரும் நானும் ஒன்றாகிவிட்டோம். நரகத்துக்குப் போவதானாலும் அவரோடு போக நானும் தயாராயிருக்கிறேன்.

**கோவி** :—நல்லது; அப்படியானால் நட! உனக்கிஷ்டமான இடம் எங்கோ அங்கு செல்! இன்று முதல் நீ யென் புத்திரியல்ல!

அஜய :—என்ன? என்ன சொன்னீர்கள்? என்ன சொன்னீர்களப்பா? கல்யாணி-தங்களுடைய கன்னிகை—!

கோவி :—இல்லை. அவள் என் கன்னிகையல்ல. போ கல்யாணி! போ உன் புருஷனிடத்தில்!

கல்யா :—நல்லதப்பா! நான் போகிறேன்; உத்தரவு கொடுங்கள்!

[கல்யாணி தன் தந்தையை நமஸ்கரிக்கிறாள்.]

அஜய :—ஆலோசனை செய்து பாருங்கள் அப்பா! அநியாயஞ் செய்யவேண்டாம். கல்யாணி சிறு பெண். அவள் அபராதமே செய்தபோதிலும், குற்றமே செய்த போதிலும் மன்னியுங்கள்!

கோவி :—அவள் நரகத்துக்குப் போக விரும்புகிறாள் அஜயா! போய்த் தொலையட்டும்; தடுக்காதே!

அஜய :—அல்ல; அவளுக்கு அது நரகமல்ல. எங்கே காதலின் புண்ய பிரகாசமானது பிரதிபலிக்கிறதோ அங்குதான் உண்மையான சொர்க்கமிருக்கிறது. இந்த ரத்தினத்தை இவ்வளவு சீக்கிரத்தில் இழந்துவிடக்கூடாது. செய்வது இன்னதென்றறியாமல் செய்கிறீர்கள் அப்பா தாங்கள்!

கோவி :—இல்லை. நான் நன்றாய்த் தீர்க்காலோசனை செய்துதான் இம்முடிவுக்கு வந்திருக்கிறேன். கல்யாணி! எவன் எனது தேசத்தின் சத்துருவாயிருக்கிறானோ, அவனுக்கு என் வீட்டில் இடம்

இருக்க முடியாது.'பதி தர்மம்'உன்னுடையது. 'தேச தர்மம்' என்னுடையது. போ! உனக்கிஷ்டமான இடத்துக்குப் போ!

[கோவிந்த சிம்மன் வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக்கொள்ளுகிறான்.]

கல்யா :—உத்தரவு அப்பா!

அஜய :—நில்லு கல்யாணி! நில்லு! அப்படியானால் அப்பா! நானும் போகிறேன்! எனக்கும் உத்தரவு கொடுங்கள்!

கோவி :—(திரும்பி) ஏன் அஜயா? ஏன் நீ போகிறாய்?

அஜய :—இந்த அபலைப் பாலிகையை தனிமையாய்ப் போக விடக்கூடாது; நானும் அவளோடு போகிறேன்.

கோவி :—ஆனால் அஜயா! உன்னை நான் வீட்டைவிட்டுப் போகச் சொல்லவில்லையே?

அஜய :—அந்த ஆசை எனக்குமில்லை அப்பா! ஆனால் கல்யாணி சிறு பெண்—அவளைத் தாங்கள், அவள் கொண்ட விரதத்துக்காக வீட்டைவிட்டு, துஷ்ட மனுஷ்யர்கள் நிறைந்த உலகத்தில் தனியாகத் துரத்துகிறீர்கள். அவள் கணவன் இங்கிருந்தால் காத்து ரட்சிப்பார். கணவனில்லை; சகோதரனிருக்கிறான். அவன் தன் தங்கைக்குச் சகாயஞ் செய்வான். வா கல்யாணி! வா போகலாம்! இன்றைக்கு நாமிருவரும்—சகோதரனும், சகோதரியுமாக நமது வாழ்க்கைத் தோணியை, இந்த விசால விஸ்வ பிர்மாண்டமாகிற சம்சார சாகரத்

தில் மிதக்க விடுவோம்! கரை தட்டுகிறதோ இல்லையோ கவலையில்லை. வா! போவோம்! பிதாஜி! நமஸ்காரம்!

[அஜய சிம்மன் தந்தையை நமஸ்கரித்து விட்டுத் தங்கையை யழைத்துக்கொண்டு போகிறான். கோவிந்த சிம்மன் நட்டு வைத்த கல்லைப்போல் நிற்கிறான்.

(திரை விழுகிறது.)

(காட்சி முடிவு.)

---

## ஏழாங் காட்சி.

---

இடம் :—சித்தூரை யடுத்த காடு.

காலம் :—மாலை.

[சகர சிம்மனும் அருண சிம்மனும் ஓர் மரத்தடியில் தங்கியிருக்கிறார்கள்; தூரத்து மலையில் சூரியன் அஸ்தமிக்கிறான்.

சகர :—இந்த ராஜ்யத்தில் இருப்பதற்கே எனக்குக் கொஞ்சங்கூட இஷ்டமில்லை. சித்தூர்க் கோட்டை, ஒரு விதமாகப் பார்த்தால் சிறைச்சாலையைப் போலிருக்கிறது. புராதனமானதும், பயங்கரமானதும், இருள் நிறைந்ததுமான அதைச் சுற்றி நாலா பக்கங்களிலும் பர்வதங்கள்; மனித சஞ்சாரமென்கிற நாமதேயமே யில்லை. அவ்வளவு பெரிய பெரியதும், பழமையானதுமான மரங்களை இது

வரை நான் கனவிற்கூடக் கண்டது கிடையாது. அருணா! நான் ஆக்ராவுக்குத் திரும்பிப் போகிறேன்.

அருண :—எனக்கு இந்த இடந்தான் பிடித்திருக்கிறது தாத்தா! இங்கிருக்கிற ஒவ்வொரு பர்வதத்தோடும் எனது மூதாதைகளுக்கு ஸ்மிருதி சம்மந்தமிருந்திருக்கிறது. பண்டைக் காலத்துக் கௌரவக் கதைகளென்ன உனக்குப் பிடிக்கவில்லையா தாத்தா?

சகா :— பார்! பார்! மறுபடியும் அந்தப் புராதன கௌரவத்தைக் கட்டிக்கொண்டு அழத்தொடங்கிவிட்டாயா? சென்று போனது சென்று போனது தானடா! இனி யொருதரம் அது திரும்பி வரப் போகிறதா?

அருண :—ஆனால் எனக்கென்னவோ தாத்தா வர்த்தமானத்தை (நிகழ் காலத்தை)விடப் புராதனந்தான் பிரியமாயிருக்கிறது. வர்த்தமானம் தீவிரமாகவும் ஸ்பஷ்டமாகவுமிருக்கலாம். ஆனால், புராதனமில்லாமல் வர்த்தமானம் எங்கிருந்து வந்தது? பார்வைக்குத் தோன்றாவிட்டாலும், ஆகாசமாகிற நீல விதானத்தைப் போல் விசாலமாகவும், உபன்யாசத்தைப்போல் அர்த்தம் நிறைந்ததாகவும், சொப்பனத்தைப்போல் சிந்திக்கத்தக்கதாகவும் அது இருக்கிறது.

சகர :— எது ஏற்படக்கூடாதென்று நான் பயந்தேனே அதுவே ஏற்பட்டிருக்கிறது பெரியவனாக ஆக உன் அம்மாவைப்போல் நீயும் ஆகிக்கொண்டே வருகிறாய்! அவளும் இப்படித்தான் பேசிக்கொண்டேயிருந்தாள். அவ்வளவுதான், ஒரு நாள் வீட்டைவிட்டு வெளியேறிப்போய்விட்டாள். எங்கேபோனாளென்று ஒரு தகவலுமில்லை.

அருண :—என் அம்மாவும் இப்படித்தானா பேசிக்கொண்டிருந்தாள் தாத்தா?

சகர :—ஆம். அவளும் "மீவாரம், மீவாரம்" என்று சொல்லிக்கொண்டே பைத்தியம் பிடித்தவள்போ லாகிவிட்டாள். அப்புறம் வீட்டை விட்டுப் போய்விட்டாள்.

அருண :—நான் அம்மாவைத் தேடிப்பார்க்கட்டுமா தாத்தா?

சகர :—எங்கே யென்று தேடுவாய் அவளை? இந்தக் கருங் கானகத்திலா? சூரியன் நுழைந்தாலும் இந்தக் காட்டுக்குள்ளே கண்டுபிடிக்க முடியாதே.

அருண :—இல்லை தாத்தா! இல்லை. நான் ஆக்ராவுக்கு வர மாட்டேன். உனக்கு இஷ்டமானால் நீ போ! எனக்கு இந்த இடந்தான் பிடித்தமாயிருக்கிறது. மேலும் என் அம்மா இருக்கிற தேசம் என் வீடு. இத்தனை நாள் ஆக்ராவில் அவலமாய்க் காலங் கழித்தது போதாதா?

சகா :—இதற்குத்தான் முந்தியே பயந்தேன் நான். ஆக்ராவில், பாதுஷாவுடைய வெள்ளைக் கல் அரண்மனையை நீ பார்த்ததில்லை போலிருக்கிறது? வா! அதைக் காண்பிக்கிறேன்.

அருண :—இல்லை, எதையும் பார்க்க நான் இஷ்டப்படவில்லை. ஆக்ராவைவிட, ஜன சஞ்சாரமற்ற இவ்வனத்திலிருக்கத்தான் எனக்கு விருப்பமாயிருக்கிறது.

சகா :—ஆக்ராவில் எழுபத்தெட்டு மசூதிகளிருக்கின்றன. அவைகளெல்லாம் ஒன்றுக்கொன்று பெரிதாகவும், புதிதாகவும், அலங்காரமாகவும் இருக்கின்றன.

அருண :— இருக்கலாம். ஆனால் எனக்கென்னவோ தாத்தா அந்த உயரம் உயரமானதும், தகத்தகாயமானதுமான தங்க மசூதிகளைவிட, எனது தேசத்தின் இடிந்து சிதைந்த தேவாலயந்தான் சிறந்ததாகத் தோன்றுகிறது. மொகலாயர்களின் காலடியிலிருந்துகொண்டு ராஜபோக மனுபவிப்பதைவிட தேச மாதாவின், எலும்புந் தோலுமாய் மெலிந்த மடியிலே கிடந்து, சாகசத்துக்களைத் தின்று (காய், கனி, கிழங்கு) ஜீவிப்பது மேலென்று கருதுகிறேன். என் தாத்தா! நீ யென்ன பிச்சை வாங்கித் தின்று பிழைப்பதற்காகவா சொந்தத் தேசத்தைவிட்டுச், சொந்தச் சகோதரனைவிட்டுப், பிராபல்யமான புண்யக் கதைகளையுடைய

சொந்த வீட்டைவிட்டுப், பிறருடைய வாசலுக்குப் போனாய்? அவர்கள் அங்கே நிலைந்தோறும், பிச்சையாக உனக்குக் கைநிறையத் தங்கத்தை வாரி வாரிக்கொடுத்தாலும் அந்தத் தங்கத்தோடு அவர்களின் காலடிப் புழுதியும் கலந்திருப்பதை நீ பார்க்கவில்லையா? உன்னைப் பார்த்து அவர்கள் சிரிக்கிற ஒவ்வொரு சிரிப்பின் அடியிலும், ஏழனமும், குரோதமும் கலந்திருப்பது எனக்குத் தெரிகிறது. பிறர் கொடுக்கிற சொர்ணக் களஞ்சியத்தைவிடச், சகோதரனுடைய வெறுஞ் சிரிப்பு எவ்வளவோ மேலானது தாத்தா!

[சத்தியவதி வருகிறாள்.]

சத்ய:—வாழ்க மகனே! வாழ்க நீ!

சகர:—யார்? சத்தியவதியா? நானென்ன சொப்பனங் காண்கிறேனா? இல்லை; சத்தியவதிதான். சத்தியவதி! நீ எப்படி யிங்கு வந்தாய்?

சத்ய:—வாத்ஸல்ய புத்திரா! சுதேசத்திற்காக என்றைக்கு நான் சன்னியாசமெடுத்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறினேனோ, அன்றைக்குப் பட்டுப்பட்டாயிருக்கும் உனது இரு சிறு மணிக் கரங்களையும் விலக்கிக்கொண்டு புறப்படுவது தான் எனக்கு எவ்வளவோ கடினமாயிருந்தது. இந்த மலையடிவாரங்களில் மேவாரத்தின் மஹிமையை நான் பாடிக்கொண் டலைந்தபோது, ரோஜா மொக்கிலிருந்து மல்லிகை மலர்வது போலிருக்கும் உன் புன் சிரிப்பை மறப்பதுதான்

எனக்கு மகா கஷ்டமாயிருந்தது. நீ யிங்கு வந்திருக்கிறாயென்று கேள்விப்பட்டதும், எவ்வளவு தான் தடைப்படுத்த முயன்றும் உன்னைக் காணாமலிருக்க முடியவில்லை. உடனே ஓடிவந்தேன் உன்னைத்தேடி! எங்கிருந்தோ ஒரு வீணைக்குரல் வந்தது! ஒழிந்திருந்து ஒட்டுக்கேட்டேன். இத்தகைய அமுது நிரம்பிய தேவ வசனங்கள், பூலோகத்துக்கு எப்படி வந்ததென்பது எனக்கே ஆச்சர்யமாயிருந்தது. அதற்குமேலும் என்னால் அங்கு நிற்க முடியவில்லை. அட நான் பெற்ற மகனே! என் புத்திர பாக்கியமே!

[அருணா சிம்மனை அப்படியே சத்தியவதி அள்ளித் தழுவுகிறாள்.]

சகர :—பட்சமுள்ள மகளே! சத்தியவதி! என்னையேன் ஒரு தரமாவது ஏறிட்டுப் பார்க்கமாட்டேனென்கிறாய்? அப்படியென்ன தீமை செய்தேன் நான்?

சத்ய :—தீமையா? தாங்கள் செய்த தீமை தங்களுக்கே தெரியவில்லையா? நன்மை தீமை யறியக்கூடிய சக்திகூடத் தங்களுக்கில்லையா? தீன, ஹீன, துக்கமிருக்க ஜனனி ஜன்ம பூமியைவிட்டு, மொகலாயர்களின் பிரசாத போகியாகிவிட்ட பின், என்னதானிருக்கப்போகிறது! நமது நாட்

டு நாரீமணிகளின், பதிவிரதத் தன்மையை நாசப்படுத்தினவர்கள் யாரோ, யார் இந்த தேசத்துப் புருஷர்களின் மனிதத்துவத்தைக் கெடுத்துவிட்டார்களோ அவர்களுக்கு அடிமையாகிவிட்ட பின், சுய அறிவு இருக்கப்போகிறதா? அடைந்திருக்கிற அபார வெற்றியால் கெர்வந் தலைக்கேறி மொகலாயர்கள், ராஜபுதானத்தில் ஏதோ கொஞ்சம் மிஞ்சியிருக்கிற சுவாதீன ராஜ்யமான மீவாரத்தின் மீது, அடிக்கடி ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். பசுமையான பூமியில், அதன் சந்ததியாரின் ரத்தத்தைத் தானே, நதியாகப் பாய்ச்சுகிற மொகலாயர்களின் காலடியே கெதி யென்றிருக்கிறீர்கள். அதுவுமன்றி தங்கள் தம்பி, ராணா பிரதாப சிம்மருடைய புத்திரர் அமர சிம்மரைச், சிம்மாசனத்தைவிட்டுத் துரத்துவதற்கும் துணிந்துவிட்டீர்கள். இவ்வளவுஞ் செய்துவிட்டு, இப்போது நான் என்ன தீமை செய்தேன் என்று கேட்கிறீர்கள்! போதும் போங்களப்பா! போங்கள்! உங்கள் பாதை வேறு; எங்கள் பாதை வேறு. வாடா மகனே! வா போவோம்! அந்தகாரம் நிறைந்த இந்த அதிர்ஷ்ட ஹீனமான நாட்களில், என்னுடன் சகயாத்திரிகனாக வா போகலாம்! இன்றைக்கு என் ஹிருதயத்தில், துளி பலம் வந்திருக்கிறது. வா போவோம்!

[அருணா சிம்மனை அழைத்துக்கொண்டு சத்தியவதி புறப்படத் தயாராகிறாள்.]

சகர :—இல்லை இல்லை. சத்தியவதி நில்லு! அருணா நீயும் போகாதே! நானும் உங்களோடு வருகிறேன். இதுவரை குருடாகியிருந்த என் கண்கள் இன்றைக்குத்தான் திறந்திருக்கின்றன. இன்றுதான் என் தாய்த்திருநாட்டைப் பார்க்கிறேன். இப்பொழுதுதான் எனது ஜனனீ ஜென்ம பூமியின் தரித்திரத்திலும், துக்கத்திலும், உபவாசத்திலும் பங்கெடுக்க ஆரம்பிக்கிறேன். நில்லு மகளே! நில்லு! நானும் வருகிறேன்; என்னையும் அழைத்துக்கொண்டு போ!

சத்ய :—என்ன? என்ன இது? நானென்ன கனவு காண்கிறேனா? அல்லது வாஸ்தவத்திலேயே எனது பிதாவுக்குச் சுய பிரக்ஞை வந்திருக்கிறதா? இப்படி ஏக காலத்தில் இழந்த தந்தையையும், பிரிந்த புத்திரனையும் அடையக்கூடிய அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்திருக்கிறதா? எனப்பா! தாங்கள் சொல்லுவது வாஸ்தவமா? வாஸ்தவத்திலேயே அடிமைப் பிரகிருதி தங்களைவிட் டகன்றுவிட்டதா?

சகர :— ஆம் சத்தியவதி! ஆம். இன்றுதான் நான் எனது தேசத்தை அறியத் தொடங்கியிருக்கிறேன். எனது தீமைகளை மறந்து என்னை மன்னித்து விடு!

சத்ய :—பிதாஜீ! பிதாஜீ!

[தனது தந்தையின் முன், முழந்தாட் படியிட்டுச் சத்தியவதி அவன் பாதங்களில் சிரசை வைத்து நமஸ்கரிக்கிறாள்.]

\ (திரை விழுகிறது.)

(காட்சி முடிவு.)

---

இரண்டாம் அங்கம் முடிவுற்றது.

---

# மூன்றாவது அங்கம்.

## முதற் காட்சி.

இடம் :—உதயபுரி ராஜ சபை.

காலம் :—காலை.

[மந்திரி பிரதானிகள் பேசிக்கொண்டிருக்கின்றனர்.]

ஜெய சிம்மன் :—*காமனேரி யுத்தம், சரித்திரப் பொன்னேடுகளில் நவரத்தின எழுத்துக்களால் எழுதி வைக்கக்கூடியது !

கோகுலதாஸ் :—பர்வேஜினுடைய உதவிச் சைன்யம் வரும் பாதையை யடைத்ததுதான் புத்திசாலித்தனமான காரியம்.

பூபதி :—அவர்களுக்கு இந்தக் காட்டில் வழி கண்டு வரத் தெரியாது போலிருக்கிறது.

கோகுல :—ஆனால் புறங்காட்டி யோடுவதற்கு வழி நன்றாய்க் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஜெய :—இன்றைக்குத்தான் மீவாரத்தின் கௌரவம் உதயமாகியிருக்கிறது. பாருங்கள் எத்தகைய நவீன பிரகாசத்தோடு மீவாரத்தின் சர்வ பர்வதங்களும் பிரதி பலிக்கின்றன ?

பூபதி :—அந்தப் பிரதி பலிப்பு, மீவாரத்தின் வெற்றிப் பிரதாபத்தை, அகில பாரதத்துக்கும் அறிவிக்கக் கடவது ! [ராணா அமர சிம்மன் வருகிறான்.]

---

*காமனேரி என்பது மீவாரத்தில் ஓர் ஊர்.

எல்லோரும் :—ஜே! ராணு அமர சிம்மஜீகி ஜே!

[ராணு சிம்மாசனத்தில் அமருகிறூர்.]

[ராஜ கவி கிஷோர்தாஸ் வருகிறுன்; ராணுவின் விஜய கீதத்தை, அவன் அசாவேரி ராகத்தில் பாட ஆரம்பிக்கிறுன்.]

ராணு :—கீதம் நன்ருயிருக்கிறது கிஷோர்! ஆனுல் அதனேடு இன்னெரு அடியும் சேர்க்கப்படவேண்டும்!

கிஷோர் :—உத்தரவு மஹாராஜ்!

ராணு :—"சூரிய வம்சக் கீர்த்திப் பிரதாபம்—உன்னுல் சூன்யமடைந்தது பரிதாபம்!"

கிஷோர் :—அது ஏன் மஹாராஜ்! .

ராணு :—(சிரித்துக்கொண்டே) ஏனு? ஏனென்று கேட்கிருயா?—சொல்லுகிறேன்.

[சத்தியவதி வருகிருள்.]

சத்ய :—ஜே! மீவார ராணுகி ஜே!

ராணு :—யார் தங்கை சத்தியவதியா?

[ராணு சிம்மாசனத்தை விட்டிறங்கிச் சத்யவதியை யாசீர் வதிக்கிருர்.]

சத்ய :—மீவாரத்தின் விஜய கீதத்தை, இவ்வளவு நேரம் வெளியில் நின்று கேட்டுக்கொண்டிருந்தேன் மஹாராஜ்! ஆநந்தக் கண்ணீர் என்னையறியாமல் ஓட ஆரம்பித்தது. மந்திரத்தாற் கட்டுண்டவள் போல், அப்படியே அசைவற்று நின்றுவிட்டேன். ராவண சம்ஹாரம் முடித்து, மஹா

ராணாவின் பூர்வ புருஷரான பகவான் ராமச்சந்திர மூர்த்தி, அயோத்திக்குத் திரும்பி வந்த கதை ஞாபகத்துக்கு வந்தது. அவ்வளவில் கீர்த்தனையும் நின்றுவிட்டது. யாரோ ஒரு தேவி வந்து, திருமணிக்கரத்தால், அந்த கீத நாதத்தைச் சொர்க்க லோகத்துக்கு எடுத்துக்கொண்டு போய்விட்டாளோ என்று தோன்றிற்று. அதே சமயம் சொப்பனத்திலிருந்து நான் ஜாக்கிரதையடைந்தேன்.

ராணா:—அவ்விதமாக மீவாரத்தின் மஹிமைக் கீர்த்தனம் முடிந்தது சத்தியவதி! அநேகமாய் எல்லாக் கீர்த்தனங்களும் ஒருவிதமான ஆநந்த கோலாகலத்தோடு ஆரம்பித்து, அந்தத்தில் ஒரு நீண்ட பெருமூச்சிலேதான் முடிகின்றன.

சத்ய:—ஏன் மஹாராஜ்? என்ன இது? ஆநந்தமடைய வேண்டிய தினத்தில், தாங்களேன் இப்படி நிராநந்தமாகவும், விசாரமாகவுமிருக்கிறீர்கள்? நிராசையைத், தங்கள் ஹிருதயத்தை விட்டு நீக்குங்கள்! இன்று மீவாரத்தின் மஹிமை நாள் — கௌரவதினம்.

ராணா:—கௌரவதினம் என்பது சொல்வதற்கு எவ்வளவோ கௌரவமாகத்தானிருக்கிறது. ஆனால் சத்தியவதி! நானொன்று புதிதாகச் சொல்லுகிறேன் கேட்கிறாயா? காமனேரி யுத்தத்தில் ஜெயித்தவர்கள் நாமல்ல!

சத்ய :—பின்னர் யார் ஜெயித்தது? மொகலாயர்களா?

ராஜு :—இல்லை; ரஜபுத்திரர்கள் ஜெயித்தார்கள்! ஆனால் நாம்—இப்பொழுது விஜயோத்ஸவம் கொண்டாடுகிறோமே நாம்—அல்ல அந்த யுத்தத்தை ஜெயித்தவர்கள். உண்மையாகக் காமனேரியை வென்று விஜய பிராப்தஞ் செய்தவர்கள், அங்கே ரணக்ஷேத்திரத்தி லிருக்கிறார்கள். வாஸ்தவத்தில், போர்க்களத்தில் வெற்றிக் கொடி நாட்டி, ஜெயபேரி கொட்டி, விஜய கீதம் பாடிக்கொண்டு வீடு திரும்புகிறவர்கள் யுத்தத்தை ஜெயித்தவர்களாக மாட்டார்கள்; உண்மையில் ரணக்ஷேத்திரத்தில் மரித்தவர்கள்தான் ஜெயித்தவர்கள்.

சத்ய :—அது வாஸ்தவம் மஹாராஜ்! அவர்கள் கிருதார்த்தமடையக் கடவர்! அவர்களுடைய ஆத்மாவுக்கு ஆண்டவன் சாந்தியளிக்கட்டும். அவர்கள் அடைந்திருக்கிற கீர்த்தி, அமரத்தன்மையுடையது. அத்தோடு மஹாராஜாவுக்கு நானொரு சுப சமாச்சாரம் சொல்ல விரும்புகிறேன்.

ராஜு :—அதென்ன சத்தியவதி? அதென்ன சமாச்சாரம்?

சத்ய :—எனது பிதா—ராஜா சகர சிம்மர், சித்தூர்க் கோட்டையைத் தங்களுக்காக விட்டுவிட்டார். தாங்கள், தங்கு தடையில்லாமல் அங்குச் சென்று அதிகாரம் செய்யலாம்!

ராஜு :—என்ன? எனக்காகச் சித்தூர்த்துர்க்கத்தை (கோட்டை) அவர் விட்டுவிட்டாரா? சத்தியவதி! நீயென்ன சொல்லுகிறாய்? நீ சொல்லுவது வாஸ்தவந்தானா? அப்படியும் ஆக முடியுமா?

சத்ய :—ஆம் மஹாராஜ்! அது வாஸ்தவந்தான்!

ராணு :—அவர் சுயமாகவே அப்படிச் செய்தாரா? அல்லது பாதுஷா அப்படிச் செய்யும்படி ஆக்ஞை யிட்டாரா?

சத்ய :—இல்லை மஹாராஜ்! பாதுஷாவின் ஆக்ஞைப்படி யல்ல; அவராகவேதான் செய்தார். சித்தூர்க் கோட்டையைச் சகர சிம்மருக்குப் பாதுஷா கொடுத்தாரல்லவா? அப்போது அவருக்கு, அதைத் தாமிஷ்டம்போல் யாருக்குவேண்டுமா னாலும் கொடுக்கலாமென்ற அதிகாரமுமிருந்தது. அதைத் தங்கள் விஷயத்தில் ஆநந்த பூர்வமாகக் கொடுத்துவிட்டு அவர் ஆக்ராவுக்குப் போய்விட் டார்.

ராணு :—மந்திரி பிரதானிகளே! ஜெயத்தொனி செய்யுங் கள்! சுவர்கிய பிதாவின் ஜென்ம சொப்பனம் இன்றுதான் பூர்த்தியாயிற்று! ஆனால் அவர் குமாரனுடைய வீரப்பிரதாபத்தாலல்ல—சகோ தரருடைய தானத்தால். வாருங்கள் சித்தூருக் குச் செல்வோம்! சேனை திரட்டுவோம்! அந்த பரியந்தம் போர் புரிவோம்!

சத்ய :—ஜே! ராணு அமர சிம்மர்கி ஜே!

(திரை விழுகிறது.)

(காட்சி முடிவு.)

## இரண்டாம் காட்சி.

---

இடம் :—ஒரு கிராமத்தை யடுத்த பாதை: அத ன் ஓரம் ஓர் இடிந்த குடிசை.

காலம் :—மாலை.

[கல்யாணியும் அஜய சிம்மனும், அவ்வழி யாக வந்துகொண் டிருக்கின்றனர்.]

**கல்யா** :—ஐயோ! இனி யென்னால் அடி. எடுத்துவைக்க முடியா தண்ணா!

**அஜய** :—வேண்டாம் கல்யாணி! இன்றைக்கு இந்தக் கிராம த்திலிருந்து விடுவோம். கிராமத்தையடுத்துத்தான் இக்குடிசையிருக்கிறது. கடையோ என்னவோ இருந்த இடம்; கதவுகூட இல்லை; உள்ளே இருட் டாயிருக்கிறது.

**கல்யா** :—கூப்பிட்டுப்பார்! உள்ளே யாராவது இருந்தாலும் இருக்கலாம்.

**அஜய** :—யார்? யார் உள்ளே? உள்ளேயிருக்கிறது யார்? ஆளில்லை போலிருக்கிறது.

**கல்யா** :—என்றாலும், இன்றைக்கு நாம் இதிலேயே தங்கி விடுவோம். என்னால் இனி நடக்க முடியாது.

**அஜய** :—நல்லது கல்யாணி! நீ யிங்கே கொஞ்ச நேரம் இரு! நான் போய் இந்தக் கிராமத்தில் தீப மொன்று வாங்கி வருகிறேன்.

**கல்யா** :—பசிக்கிறதண்ணா! உண்பதற்கும் ஏதாவது வாங்கி வா!

அஜய :—நல்லது; வாங்கி வருகிறேன்.

கல்யா :—சீக்கிரம் திரும்பிவிடண்ணு! தனியாயிருக்க பயமாயிருக்கிறது.

அஜய :—பயமேன் கல்யாணி? இங்குதான் ஒருவருமில்லையே ஏன் பயப்படவேண்டும்? பயப்படாமலிரு! நானிதோ வந்துவிட்டேன். (செல்லுகிருன்.)

கல்யா :—நடந்து வழக்கமில்லாமல் கால்கள் ரத்தவாறு கண்டுவிட்டன. என்றாலும் மனதுக்கு ஆநந்தமாகவே யிருக்கிறது. தனக்குத் தானுகவே தரித்திரத்தையும் துக்கத்தையும் அநுபவிப்பதானது, அளவில்லாத அபிமானத்தைத் தருகிறது. எவ்விதமான எதிர் அலைகளும், தங்கு தடைகளுமில்லாமல், எவ்வாறு நதியானது தன்னிஷ்டம்போல் சமுத்திரத்தை நோக்கிச் செல்லுகிறதோ, அவ்வாறே நானும் ஆநந்த பூர்வமாய் எனது சர்வஸ்வ சுவாமியிடம் போய்க்கொண் டிருக்கிறேன். தாதியாகவாவது அவர் என்னை ஏற்றுத் தமது சரணாரவிந்தங்களிற் சிறிது இடமளிப்பரோ என்னவோ தெரியவில்லை. யார்? அவ்வனு?

[சன்னியாசி வேஷத்திற் சகர சிம்மன் பிரவேசம்.

சகர :—நான் ஒரு ரஜபுத்திரனம்மா! பயப்படாதே! நீயும் ரஜபுத்திரப் பெண் போலவே யிருக்கிருய்! ஏன் இங்கு ஏகாந்தமா யிருக்கின்றனை?

கல்யா :— நிபமும், உலவும் வாங்கிவர அண்ணா இந்தக் கிராமத்துக்குப் போயிருக்கிறார்.

சகர :— நல்லது; அவர் வரும்வரை நான் உனக்குத் துணையாயிருக்கிறேன். இப்பகுதியில் மொகல் சிப்பாயிகளின் உபத்திரவம் அதிகமாயிருக்கிறது. நாலைந்து பேரை நான் சமீபத்திற் சந்தித்தேன். அவர்கள் ஒருக்கால் இங்கு வந்தாலும் வரலாம்.

கல்யா :— அப்படியானால் அபலை ஸ்திரீயை அனுக்கிரகியுங்கள் ஐயா!

திரைக்குள் :— இந்த இடிந்த குடிசைக்குள்ளா?

திரைக்குள் :— ஆம். அங்கேதான்.

கல்யா :— யார்? அண்ணா! அண்ணா!

[மூன்று திருடர்கள் உள்ளே நுழைகின்றனர்.]

முதல் திருடன் :— அவள்தான்! அவள்தான்!

இரண்டாவது திருடன் :— அவளைப்பிடி!

[முதல் திருடன் கல்யாணியின் கையைப் பிடிக்கப் போகிறான்; கல்யாணி தூர விலகிக்கொண்டு கத்துகிறாள்.]

சகர :— (முன்னே சென்று) ஜாக்கிரதை!

முதல் திருடன் :— இது யார்?

இரண்டாவது திருடன் : யாராயிருந்தாலுஞ்சரி அவனை அடி முதலிலே!

[சகர சிம்மன் திருடர்களோடு சண்டை போட்டுக் கீழே விழுந்துவிடுகிறான்.]

கல்யா :—அண்ணு! அண்ணு! [அதே தருணம் அஜய சிம்மன் வருகிருன்.]

அஜய :—அஞ்சாதே கல்யாணி! அஞ்சாதே! நான் இதோ வந்துவிட்டேன். (அஜய சிம்மன் வாளையுருவித் திருடர்களோடு சண்டையிட்டு அவர்கள் அனைவரையும் கீழே வீழ்த்திவிடுகிருன்.)

அஜய :—இது யார்?

கல்யா :—யாரோ தெரியாது? எனக்குக் காவலாய் இங்கு வந்திருந்தார். இந்தத் திருடர்களோடு சண்டை போட்டுக் கீழே விழுந்துவிட்டாரண்ணு!

சகர :—நீங்கள் யார்?

அஜய :—நாங்கள் சேனுபதி கோவிந்த சிம்மரின் பிள்ளைகள்—அஜய சிம்மன் நான்; இவள் என் தங்கை கல்யாணி?

சகர :—யார்? மஹபத்கான் மனைவி கல்யாணியா?

அஜய :—ஆம் ஐயா! தாங்கள் யார்?

சகர :—அதே மஹபத்கானுடைய பிதா—சகர சிம்மன் நான்.

(திரை விழுகிறது.)

(காட்சி முடிவு.)

---

## மூன்ருங் காட்சி.

---

இடம் :—ஜோதிபுரி மஹாராஜா கஜ சிம்மன் அரண்மனை.

**காலம் :—** அதிகாலை.

[மார்வார மன்னன் கஜ சிம்மன், அவன் மகன் அமர சிம்மன், மந்திரி ஹரிதாஸ், மீவாரத் தூதன் அருண சிம்மன் இந்நால்வரும் சம்பாஷித்துக்கொண் டிருக்கின்றனர்.]

**கஜ சிம்மன்:—** தூத! மீவார மஹாராணாவிடம், இந்த விவாகத்துக்கு என்னால் சம்மதிக்க முடியாதென்று சொல்லிவிட்டேனென்று கூறிவிடு! தில்லி சம்ராட்டுக்கு (சக்கிரவர்த்தி) விரோதமாய்ப் புரட்சி செய்கிற எவரோடும், எவ்விதமான சம்பந்தமும் நான் வைத்துக்கொள்ளமாட்டேன். இல்லையா ஹரிதாஸ்!

**ஹரிதாஸ் :—** ஆம் மஹராஜ்! அது வாஸ்தவம்! அவஸ்யம் அப்படித்தான் செய்யவேண்டும்! அதுதான் சரி.

**அருண :—** தில்லிக்கு விரோதமாய், மீவாரம் புரட்சி செய்கிறதா மஹராஜ்? மீவாரம், மொகல் ஆதீனத்துக்குள்ளாகிவிட்டதா என்ன? எந்தச்சுவாதீனத்துக்காக அது இதுவரை போராடிக்கொண் டிருக்கிறதோ அந்தச் சுவாதீனத்தைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சிப்பது புரட்சியாகுமா?

**கஜ :—** ஆம். அது புரட்சிதான்! அகில ராஜபுதானமும் தில்லிக்குத் தலை குனிந்துவிட்டபின், மீவாரம் மாத்திரம் ஏன் தலை நிமிர்ந்து நிற்கிறது?

அருண :—இதற்காகவா மஹாராஜாவின் மனதில் இவ்வளவு ஈரிஷ ஏற்பட்டது? எல்லாப் பர்வதங்களின் சிகரங்களிலிருந்தும், கௌரவப் பிரபையானது, கண்ணுக்கெட்டாமற் போய்விட்டது. ஆனால் மீவார மலைகளின் மீது மாத்திரம் சுதந்திரப் பிரபையானது, சூர்யப் பிரகாசமாய் ஜொலித்துக் கொண்டிருக்கிறது. இதைக் கண்டு மஹாராஜாவுக்கு மனம் பொறுக்கவில்லையா? எல்லா ரஜபுத்திர ராஜாக்களும் வெறுந்தலையோ டிருக்கிறார்கள்—மீவார மஹாராணா மாத்திரம் மகுடதாரியாயிருக்கிறார். அதைக் காண மஹாராஜாவுக்குக் கண் குத்தலெடுக்கிறதா? ஆனால் அந்தக் கௌரவத்தை ராணாஜீ தங்களுக்கு வஞ்சித்துவிடவில்லையே? உங்களுக்கு நீங்களாகவே மோசம் செய்துகொண்டீர்களே யல்லாமல், ராணாவால் ஒரு தீமையும் உங்களுக்கேற்படவில்லை.

கஜ:—அட தூத! நீ யென்ன அதிகப் பிரசங்கியாயிருக்கிறாய்? மஹாராஜா கஜ சிம்மனுக்கு முன்னால் இப்படிப் பேச இதுவரை எவருந் துணிந்ததில்லை. மகுடதாரியாயிருப்பதால் உன் ராணாவுக்கு மௌடீகம் அதிகரித்துவிட்டது. அதை யடக்க கஜ சிம்மனுக்குத்தெரியும். இருபதினாயிரம் ரஜபுத்திரர்களோடு, பாரதச் சக்கிரவர்த்திக்கு, நான் படைத்துணை செய்வேனேயானால், அவஸ்யம் அந்த மௌடீகமும்—உன்மத்தமும் ஒழிந்துவிடும்.

3998

அருண :—வாஸ்தவம் மஹாராஜ்! மஹாராணாவுக்கு மௌடீகமும், உன்மத்தமும் இருப்பது உண்மை. அது தான் அவருக்கு உண்மையான சோபையைக் கொடுக்கிறது. ஆனால் அந்த உன்மத்த சக்தி, உங்களிடமிருக்கிறதா மஹாராஜ்?

கஜ :—நீ தூதன்! இல்லையானால்—

அருண :—நல்லது. இவ்வளவு மனுஷ்யத்துவம் மிஞ்சியிருக்கிறதா தங்களிடம்? தூதனை யொன்றுஞ் செய்யக்கூடாதென்று, எங்கே எப்பொழுது கற்றீர்கள் மஹாராஜ்? உங்கள் வாயிலிருந்து இவ்வளவு பெரிய நீதி—இத்தகைய மணிவாசகம் எப்படி உதிர்ந்தது?

கஜ :—தூத பொறுமைக்கும் எல்லையுண்டு! இந்த விவாக சம்பந்தத்தில் எனக்கு இஷ்டமில்லை யென்று, நீ போய் ராணாவிடம் சொல்லிவிடு! போ!

அருண :—போகிறேன்; ஆனால் அதற்கு முன்னதாக மஹாராஜாவுக்கு ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போகிறேன். அதாவது: தட்சணத்தில் தாங்கள் பாதுஷாவுக்காக அநேக யுத்தங்கள் செய்தீர்களாம்; குஜராத்தையும் ஜெயித்தீர்களாம். மீவாரத்துக்கு ஒருக்கால் வந்தாலும் வரலாம். வராமல் இருந்துவிடக்கூடாதென்பதற்காக இப்பொழுதே தங்களை நான் அழைத்துவிட்டுப் போகிறேன்; அவஸ்யம் வரவேண்டும்.

[அருண சிம்மன் புறப்படத் தயாராகிறான்.]

கஜ :—ரொம்பச்சரி; அப்படியே அவஸ்யம் வருகிறேன். ஆனால் நில்லு தூதா! நீயும் என்னோடு வரலாம் நில்லு!

அருண :—என்ன? என்னைக் கைதி செய்கிறீர்களா?

கஜ :—ஆம். அமர! இவனைக் கைது செய்!

அமர :—ஏனப்பா? ஏன்? இந்தத் தூதனைக் கைது செய்வது க்ஷத்திரிய தர்மமல்லவே?

கஜ :—என்னடா அதிகப்பிரசங்கி! எனக்கா தர்மாதர்மத்தைப்பற்றிப் பாடஞ் சொல்லிக்கொடுக்க வந்துவிட்டாய்? என் கட்டளையை நிறைவேற்று!

அமர :—பிதாஜீ! என்னால் இந்த அநியாய ஆக்ஞையை நிறைவேற்ற முடியாது!

கஜ :—(கோபத்தோடு) என்ன? என் கட்டளை நிறைவேற்ற முடியாதா உன்னால்? அட மூட மகனே! நீ யென் மூத்த குமாரனாயிருந்தும்—பட்டத்து இளவரசனாயிருந்தும், என் சொற் கேட்க மறுக்கின்றனை? நல்லது. இதனால் என்னாகும் தெரியுமா?

அமர :—தெரியுமப்பா! தெரியும்! உங்கள் ராஜ்யத்தை யெனக்குக் கொடுக்க மாட்டீர்கள்! அவ்வளவு தானே?

கஜ :—ஆம். எனக்குப் பின் எனது இளைய குமாரன் ஜஸ்வந்த சிம்மனே இச் சிம்மாசன மேறுவான்.

அமர :—ஏறட்டுமப்பா! ஏறட்டும்! உங்கள் ராஜ்யம் எனக்கு வேண்டாம்; அதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்! மொகலாயர்களின் காலடியிலே

கிடந்து, அவர்களின் கருணைக்குப் பாத்திரமாய், இதை யாள்வதைவிடப், பரதேசியாய்ப் போய் விடுவது எவ்வளவோ மேல்! போதும் போதும் மொகலாயர்களின் செருப்பைத் தலையிலே தூக்கிக்கொண்டிருந்தது!

**கஜ**:—நல்லது. இது முதல் என் ராஜ்யத்தில் இராதே! போய்விடு இப்பொழுதே?

[அமர சிம்மன் புறப்பட்டுப் போகிறான்.]

**கஜ**:—(கொஞ்ச நேரம் பொறுத்து) நீயும் போகலாம் தூத!

(திரை விழுகிறது.)

(காட்சி முடிவு.)

---

## நாலாங் காட்சி.

---

**இடம்**:—மஹாபத்கான் வீடு: வெளித்தாழ்வாரம்.
**காலம்**:—இரவு.

**மஹபத்**:—பரித்தியாகந்தான் பண்ணிவிட்டேனே! அப்புறம் ஏன் அவளை என்னால் மறக்க முடியவில்லை? அடிக்கடி அவள் எண்ணம், என் ஹிருதயத்தைத் தொட்டுக்கொண்டே யிருக்கிறது. அழகு தேவி அவதார மெடுத்து வந்ததுபோன்ற கல்யாணியின் கல்யாண சொரூபம், எந்த நேரமும் என் கண்களுக்குள்ளே கந்தர்வ நிர்த்தனம் செய்து கொண்டிருக்கின்றது. புன்னகையும் புது நிலவும் தோன்ற அவள் என்னோடு பேசுவது போலவும்

என்னோடு காதற் சேஷ்டைகள் செய்வது போலவும் இருக்கிறது. அந்தோ! அந்த ரத்தினத்தை ஏனிழந்தேன்? ஏன் அவள் எழுதிய காதற் கடிதத்தைத் திருப்பியனுப்பினேன்? அவ்வளவு அனுராகமான அன்பை—களங்கமற்ற காதலை—பின்னமில்லாத பிரேமையை, அறியக் கூடிய சக்திகூட என்னில் மழுங்கிவிட்டதா என்ன? மாதுலன் (மாமன்) மீதிருந்த குரோதத்தால், மனைவியைத் திரஸ்கரிக்க, நான் எவ்வளவு மூடனாயிருக்க வேண்டும்? என்னிருக்க என்ன செய்துவிட்டேன்! இப்பொழுது தெரிகிறது நான் செய்த தவறு. அதற்காக அவளிடம் மன்னிப்புக் கேட்கக்கூடிய சந்தர்ப்பம் ஒன்று கிடைக்குமானால், இரு கரங்குவித்து மன்னிப்புக் கேட்கத் தயாராயிருக்கிறேன்.

[வாயிற்காப்போன் வருகிறான்.]

**வா. கா** :—எஜமானே! மஹாராஜா கஜ சிம்மர், பேட்டிக்காகக் காத்திருக்கிறார்.

**மஹபத்** :—கஜ சிம்மனா? ஜோதிபுரி ராஜாவா?

**வா. கா** :—ஆம்.

**மஹபத்** :—அழைத்து வா!

[வாயிற் காப்போன் போகிறான்.]

**மஹபத்** :—மஹாராஜா கஜ சிம்மனுக்கு என்னிடம் என்ன வேலை? கோழை! அதமன்! மொகலாயர்களின் அடிமை! அதோ அந்த நர பிசாசு வருகிறது!

[கஜ சிம்மன் வருகிறான்.]

கஜ :— சலாம் வருகிறது சேனுபதி சாஹிப்!

மஹபத் :— வாருங்கள்! வாருங்கள் மஹாராஜ்! தங்கள் வருகைக்காக இந்த ஏழைக்குடில் என்ன தவஞ் செய்ததோ! மஹாராஜாவின் ஆசிர்வாதத்துக் காக அடியேன் காத்திருக்கிறேன். ஏதேனும் கட்டளையுண்டோ?

கஜ :— பாதுஷா சன்னிதானம், சேனுபதி சாஹிபுக்கு ஞாப கப்படுத்தச் சொன்னூர்.

மஹபத் :— அது அவருக்கு என்னிடமிருக்கிற அபிமானத் தின் ஆழத்தைக் குறிப்பிடுகிறது. ஒருக்கால் மீவாரத்தின் மீது நான் படையெடுத்துப் போக வேண்டுமென்று, ஞாபகப்படுத்தச் சொல்லியி ருப்பாரோ?

கஜ :— ஆம் ஜனுப்!

மஹபத் :— அது மாத்திரம் என்னுல் முடியாது என்று பாதுஷா சன்னிதானத்துக்கு நான் எத்தனையோ தரம் சொல்லியிருக்கவில்லையா? பின்னரேன் மேலும் மேலும் அவரென்னைத் தொந்தரவு செய்கிறூர்?

கஜ :— சர்க்கார் சைன்யம் எத்தனையோ தரம் மீவாரத்துக் குத் தோற்றுவிட்டதல்லவா? அது சக்கிரவர்த் திக்கு மஹா சஞ்சலத்தை யுண்டுபண்ணியிருக் கிறது. நீர் ஒருவர்தான் சஞ்சல நிவர்த்தி செய் யக்கூடியவர்.

மஹபத் :— எப்படி?

கஜ :—மீவாரத்தின் மீது படையெடுத்துப்போவதன் மூலமாக.

மஹபத் :—ஹூம். (இங்கும் அங்கும் உலவுகிறுன்.)

கஜ :—மீவாரம், உமது ஜென்ம பூமியென்று எனக்குத் தெரியும். ராணு அமர சிம்மன், உமது சிற்றப்பா பிள்ளையென்பதையும் யானறிவேன். ஆனல் நீர் தான் அந்த தேசத்தையும், அந்த பாந்தத்துவத்தையும் விட்டு விட்டீரே. மத மாற்றத்தால் நீரும் அவரும், யாரோ எவரோ என்று ஆகிவிடவில்லையா?

மஹபத் :—இருக்கலாம். என்றுலும் மீவாரத்தில்தானே நான் பிறந்து வளர்ந்தேன்?

கஜ :—ஆம். ஆனல் அந்த மீவாரம், இப்போதும்மைத் தன் சந்தானமாகக் கருதுகிறதா? சண்டைக்கில்லாவிட்டாலும் சாதாரணமாகவாவது ஒருமுறை அங்கே போய்ப்பாரும்! அப்போது தெரியும், மீவாரவாசிகள் உம்மைக் கை நீட்டிச் சுட்டிக் காட்டிக்கொண்டு, "இவர்தான் பிரதாப சிம்மனுடைய அண்ணன் மகன்—முஸல்மானுகிவிட்டவன்" என்று பேசிக்கொள்வது. சாகப் போகிற கிழவிகூட உம்மைக் கண்டு ஏழனமாய் முகத்தைத் திருப்பிக்கொள்ளுவாள்! வாலிபர்கள், செக்கச் சிவந்த கண்களோடு சின்னச் சின்னமாய்ப் பார்ப்பார்கள்! பெண்கள், கதவிடுக்கின் வழியாக உம்மைப் பார்த்து, சட்டியையும் பெட்டியையும் ஜாடை பேசுவது போலப் பேசிக்

கொல்டு, காறியுமிழ்வார்கள்! ரஜபுத்திரர்கள், உம்மை யொருக்காலும் தமது ஜாதிச் சகோதரனாய்ப் பாவிக்கப்போகிறதில்லை.

மஹபத்:—ஹம்! (சிந்தனை)

கஜ:—இனி மொகலாயர்களே உமக்குச் சதம். அவர்கள் வாழ்வோடு உமது வாழ்வும் தாழ்வோடு உமது தாழ்வும் சம்பந்தப்படுத்தப்பட் டிருக்கிறது. ரஜபுத்திரர்களோடு உமது சம்பந்தம் அற்றுவிட்டது கான் சாஹிப்! அற்றுவிட்டது. அந்த ஆசையைவிட்டுவிடும்!

[சந்நியாசி வேஷத்தில் சகர சிம்மன் பிரவேசம்.]

சகர:—மஹபத்!

மஹபத்:—யார்? அப்பாவா? இங்கே இந்த வேஷத்திலா?

சகர:—சந்நியாசியாகிவிட்டேன் மஹபத்!

மஹபத்:—ஏன்? எதற்காகச் சந்நியாசி யானீர்கள்? இது என்ன ஆச்சரியம்!

சகர:—ஆச்சரியமாயிருக்கிறதா மஹபத்கான்? ஆச்சர்யப் படக்கூடிய சமாச்சாரந்தான் இது. தேசத்தையும், ஜாதியையும், தர்மத்தையும், ஆச்சாரத்தையும் விடுத்துத், தனது ஜீவனைத் தானே நாசப் படுத்திக்கொண்ட ஒருவன்—அந்நியர்களுக்கு அடிமையாய், அவர்களின் அனுக்கிரகத்துக்கும் கருணைக்கும் பாத்திரமாய்ப் பிச்சையெடுத்துப் பிழைத்த ஒருவன், தனது அந்திய காலத்தில், மறுபடியும் தன் மார்க்கத்தை மாற்றியிருக்கிறு

னென்பது, உண்மையிலேயே ஆச்சரியப்படக் கூடிய சங்கதிதான். ஆனால் நானேன் எதற்காகச் சந்நியாசியானேனென்று உனக்குத் தெரியுமா?

மஹபத் :—தெரியாதப்பா! ஏன்? எதற்காக?

சகா :—இவ்வளவு காலத்துக்குப் பிறகுதான், பூமித்தாயின் புனிதமான அழைப்புக்குரல் என் காதுகளில் விழுந்தது. மாதாவின் சிநேக மயமான அந்தக் குரல், எவ்வளவு ஸ்பஷ்டமாகவும், எவ்வளவு கம்பீரமாகவும், எவ்வளவு கருணை பூரணமாகவும், எவ்வளவு மதுரமாகவும் இருக்கிறது? உன்னால் அதைக் கற்பனைகூடச் செய்ய முடியாது மஹபத்! அத்தகைய அன்னைக்கு நான் செய்த துரோகம் அனைத்துக்கும் பிராயச் சித்தமாகத்தான் சந்நியாசமெடுத்துக்கொண்டிருக்கிறேன். நீயும் உன் பாபங்களுக்குப் பிராயச் சித்தம் செய்து கொள்!

மஹபத் :—என் பாபங்களுக்கா? நானா?

சகா :—ஆம் நீயுந்தான்; நீ செய்த பாபங்களுக்காகத்தான். நான் என் ஜாதி ஜனங்களைவிட்டு மொகலாயர்களின் அடிமையாயிருந்தேன்; நீயோ என்னைவிட ஒரு அடி தாண்டிவிட்டாய்! சொந்த தர்மத்தையும், சுய ஆச்சாரத்தையுங்கூட விட்டுவிட்டாய்—நீ செய்திருக்கிற பாபத்துக்கு எல்லையே யில்லை.

மஹபத் :—இல்லையப்பா! நான் எதுவும் பாபம் செய்ததாக எனக்குத் தோன்றவில்லை. எனது நம்பிக்கையில் இஸ்லாம் சத்ய—

சகர :—அந்த நம்பிக்கை உனக்கு எப்படி யேற்பட்டது? குர் ஆன் ஷரீபை நீ அவஸ்யம் படித்திருப்பாய்! அது ரொம்ப நல்ல கிரந்தமாயிருக்கலாம். ஹிந்துதர்மம் அதை நிந்திக்கவில்லை; அதனோடு தாவாச் செய்யவுமில்லை. ஆனால் நீ, உனது முன்னோர்களான வியாசர், கபிலர், சங்கராச்சாரியார் முதலிய மஹரிஷிகளின் கிரந்தங்களை மதமாறுவதற்கு முன் படித்திருக்கிறாயா? உன்னைப் போல் மூர்க்கர்களும், நிரட்சர குட்சிகளுந்தானா தர்ம சாஸ்திரங்களை விசாரஞ் செய்யப்போகிறார்கள்? எந்த தர்மத்தின் மந்திரமானது பிரவிர்த்தியில் சத்தியத்தையும் ஆத்ம ஜெயத்தையும் அளிப்பதாயிருக்கிறதோ, எந்த தர்மத்தின் சாஸ்திரமானது சகல ஜீவராசிகளிடத்திலும் தயை காட்டும்படி உபதேசிக்கிறதோ, எந்த தர்மத்தின் ஆச்சாரமானது மனிதரனைவருக்கும் சம சுதந்திரம் தருவதாயிருக்கிறதோ அந்த தர்மத்தை ஆராயாமல் விட்டுவிட்டாய் மஹபத்கான். அது வென்ன சின்னப்பாபமென்று கருதுகிறாய்?

மஹபத் :—போதுமப்பா! போதும்! உங்கள் தர்மமும் நீங்களும்—

சகர :—ஏன் மஹபத்? ஏனிந்தத் தர்ம வெறுப்பு உனக்கேற்பட்டது? உலகத்திற் செல்வத்தைவிடச் சிரேஷ்டமானதெதுவுமே யில்லை யென்றெண்ணிக்கொண்டிருந்த நானே தர்மத்திற்காகச் சந்நியாசமெடுத்துக்கொண் டிருக்கிறேன். ஆனால்

மஹபதிக்காள் இந்த ஹிருதயத்தில் உச்சப் பிரவிர்த்தியை உச்ச சுரத்தில் தொனிக்கக்கூடிய ஒரு தந்தி (கம்பி) யாவது பந்திக்கப்பட்டிருக்கவில்லை. என்றாலும் எப்படியோ ஒரு நாள் பிரகிருதியின் மிருதுவான ஸ்பரிசம்பட்டு அத்தந்தி யதிர்ந்தது; அதிலிருந்து அதி மதுரமான கீத நாதம் உண்டாகி அகில ஹிருதயத்திலும் எதிரொலித்தது. உடனே எனது ஆத்மா ஆநந்தத்தால் பூரித்து, அநந்த ஆகாசத்தைப்போல் விசாலித்தது. அந்தப் பாக்கியத்தைத் தந்தது யார் தெரியுமா? கல்யாணி!

**மஹபத்** :—யார்? கல்யாணியா?

**சகர** :—ஆம். அவள்தான். அவள்தான் எனக்கு ஒரு நாள் இந்த உபதேசத்தைச் செய்தாள். அது என் காதுகளுக்குச் சங்கீத ஸ்மிருதியைப்போலிருந்தது. அப்போது அவள், தன் தந்தையால் கிருஹப் பிரஷ்டம் செய்யப்பட் டிருந்தாள்!

**மஹபத்** :—ஏன்? எதற்காக அவள் வீட்டைவிட்டு விரட்டப்பட்டிருந்தாள்? அப்படியவள் என்ன குற்றத்தைச் செய்தாள்?

**சகர** :—இன்னும் அவள் உன்னை—ஒரு விதர்மியை—பூஜித்துக்கொண்டிருக்கிறாள்.

**மஹபத்** :—நீங்கள் அவளை யெங்கே சந்தித்தீர்கள்?

**சகர** :—ஒரு கிராமத்திலோரம் ஒரு ஓட்டைக் குடிசையில்?

**மஹபத்** :—இதுதானோ உங்கள் உதார, அதி உதார ஹிந்து தர்மம்? என் மீது இவ்வளவு குரோதமா?

இத்தனை துவேஷம் ஏன்? கல்யாணியை அவள் செய்த பதி பக்திக்காக வீட்டைவிட்டு விரட்டுவதா? என்னைப் பிராயச்சித்த மெடுத்துக்கொள்ளுகிறேன். ஆனால் முசல்மானானதற்காகவல்ல; ஹிந்துவாயிருந்ததற்காக! ஹிந்துவாயிருந்த பாவத்துக்காகப் பிராயச்சித்த மெடுக்கிறேன்.

சகர :—மஹபத்கான்!

மஹபத் :—போதும் நிறுத்துங்கள்! ஹிந்துக்கள் மீது எனக்குக் கொஞ்சநஞ்சமிருந்த பிரியத்தையும் இன்று அடியோடகற்றிவிட்டேன். இன்று முதல் நான் உச்சி முதல் உள்ளங்கால்வரை—ஒவ்வொரு உரோமக்கால்கள் தோறும் முஸல்மானாகிவிட்டேன்.

சகர :—மஹபத்கான்!

மஹபத் :—ஏனப்பா என் சுபாவந்தான் தங்களுக்குத் தெரியுமே? உங்களுடைய சகல உபதேசங்களும், சமஸ்த யுக்திகளும், சர்வ புத்திமதியும் பிரயோஜனமில்லை.

[மஹபத்கான் அவ்விடத்தைவிட்டுப் புறப்படத் தயாராகிறான்.]

சகர :—மஹபத்! ஏன் இப்படி அதோகெதியாய்ப் போகிறாய்? போய்த் தொலை! அந்தகாரத்தில் விழுந்து சா! மிலேச்ச! விதர்மி! குலாங்கார்! (குலத்துரோஹி!)

[சகர சிம்மன் போகிறான்; அவன் போன பின் மஹபத்கான் ஆழ்ந்த சிந்தனையோடு

அங்கு மிங்கும் உலவுகிறான்.]

மஹாபத் :—(சிறிது நேரஞ் சென்று) இத்தனை கோபம், இத்தனை குரோதம், இத்தனை ஆக்ரோஷமா? தில்லி பாதுஷாவினால், அடிக்கடி மீவாரம் ஆக்ரமிக்கப்படுவதில் ஆச்சர்யம் என்ன இருக்கிறது? முஸல்மான்கள் இந்துக்களைப்பகைக்கிறார்களென்றால் அதிலேதான் என்ன ஆச்சர்யமிருக்கிறது? இதுதான் இவர்களின் உதார—அதி உதார—சநாதன ஹிந்து தர்மம்! இஸ்லாம் தர்மம் எத்தகையதாயிருந்தாலும், பிற மதஸ்தர்களைத் தங்களோடு சேர்த்துத் தழுவிக்கொள்ளக்கூடிய உதாரத்துவமும், மஹத்துவமும் அதனிடமிருக்கிறது. ஆனால் ஹிந்து தர்மமோ, பிற மதஸ்தர்கள் தலை கீழாய்த் தவமிருந்தாலும், தன்னோடு அவர்களைச் சேர்த்துக்கொள்ளுகிறதில்லை. எவ்வளவு கர்வம்? எவ்வளவு அகங்காரம்? எவ்வளவு மமதை? நல்லது, நான் அந்த மீவாரத்தைச் சுக்குநூறாய்த் தகர்த்தெறிகிறேன்! (கஜ சிம்மனை நோக்கி) மஹாராஜ்! நான் மீவாரத்தின் மீது, படையெடுத்துப் போகிறேனென்று, பாதுஷாவிடம் போய்ச் சொல்லுங்கள்!

[கஜ சிம்மன் ஆச்சர்யமடைந்தவனாய் மஹாபத்கானை நோக்குகிறான்.]

மஹாபத் :—ஏன் ஆச்சர்யமடைகிறீர்கள் அரசே? நான் ஏன் மீவாரத்தின் மீது படையெடுக்கப்போகிறேன் தெரியுமா?

கஜ :—தெரியும், பாதுஷாவின் சஞ்சலத்தை நிவிர்த்திப்பதற்காக!

மஹபத் :—மஹாராஜ்! அல்ல. ஹிந்து தர்மத்தை வேரோடு பிடுங்கி யெறிவதற்காக! ஹிந்து ஜாதியைக் கொன்று குவிப்பதற்காக! ஹிந்துக்களில் ஒரு பூண்டுகூட இல்லாமல் அழித்துத் தொலைக்கப் போகிறேன்! தெரிந்ததா? பாதுஷாவிடம் போய்ச் சொல்லி விடுங்கள் சமாச்சாரத்தை!

[மஹபத்கானை வணங்கிவிட்டு கஜ சிம்மன் ஒருபுறம் போகிறான்; மஹபத்கானும் மறு பக்கமாய்ப் போகிறான்.]

(திரை விழுகிறது.)

(காட்சி முடிவு.)

---

## ஐந்தாம் காட்சி.

---

இடம் :—ஜிஹாங்கீர் தர்பார்.
காலம் :—காலை.

[பாதுஷா ஜிஹாங்கீரும், ஹிதாயத் அலியும்.]

ஜிஹாங்கீர் :—இத்தோல்வியை, தில்லி சிம்மாசனத்தால் எப்படி மறக்க முடியும்? தோற்பதற்கு, உங்களுக்குக் கொஞ்சங்கூட வெட்கமில்லையே? பர்வேஜ், என், புறமுதுகு காட்டிக்கொண் டோடி வந்தான்.

ஹிதாயத் —இல்லை ஜஹாம்பனாஹ்! ஷாஜாதா (இளவரசன்) தோற்றது, அவர் குற்றமல்ல!...சத்தியமாய்ச் சொல்லுகிறேன்: அவர் குற்றமல்ல அது.

ஜிஹாங் :—வேறென்ன சொல்லுவாய் நீ-ஹிதாயத்! யுத்தத்தில் நீ கைதியானாய்—ராணா, ஏதோ தயவு வைத்து உன்னை விடுதலை செய்தார். அப்துல்லா, நன்றாய் யுத்தஞ் செய்து உயிரைக் கொடுத்தான். உன்னால் யுத்தத்திற் சாகக்கூட முடியவில்லை யல்லவா?

ஹிதா :—எனக்கென்னவோ சண்டை செய்து சாகத்தான் இஷ்டம். ஆனால் என் பீவி (மனைவி)க்கு அது கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை.

ஜிஹாங் :—சுப்!

[சகர சிம்மன் வருகிறான்.]

ஜிஹா :—வாரும் ராஜா சாஹிப்!

சகர :—சன்னிதானம்!

ஜிஹா :—உம்மை மீவார ராணாவாக்கி, சித்தூருக்கு அனுப்பியிருந்தேனல்லவா? நீர் யாருடைய உத்தரவின் பேரில், சித்தூர் துர்க்கத்தை, ராணா அமர சிம்மனுக்குத் கொடுத்தீர்?

சகர :—அதற்கு யாருடைய உத்தரவும் அவஸ்யமென்று எனக்குத் தோன்றவில்லை.

ஜிஹா :—(ஆச்சர்யத்துடன்) ஏன்?

சகர :—ராணா அமர சிம்மன்தான் அதன் உண்மையான சொந்தக்காரன்.

ஜிஹா :—(அதிசயப்பட்டு) எப்படி?

சகர :—நியாயமான யுத்தத்தால், அக்பர் பாதுஷா, சித்தூரை ஜெயிக்கவில்லை யென்றும், கபடமாக ஜெயமாலை அவர் கொன்றாரென்றும் கேள்விப் பட்டேன்.

ஜீஹா :—இந்த நியாயா நியாயத்தை நீர் எப்பொழுது அறிந்தீர் ?

சகர :—என்றைக்கு ஒரு புது ஜோதி—புது தரிசனம் புலப் பட்டதோ அன்றைக்குத்தான்.

ஜீஹா :—புது தரிசனமா ? அது யாது ?

சகர :—ஆம். புது தரிசனந்தான். என் கண்ணுக்கு முன்னே ஒவ்வொன்றாய்ப் பல திரைகள் விரிந்து விரிந்து அகன்றன. பகவான் ராமச்சந்திரன் காலத்திலிருந்து இதுவரை நிகழ்ந்த மீவாரச் சரித்திரமானது சலனபடம்போல் அடுக்கடுக்காய்த் தோன்றிற்று. பாப்பா ரவால் தோற்ற கதை, சகர சிம்மனும், சூல்டாஜீயும் தேசத்துக்காகப் பிராணத் தியாகம் பண்ணிய சரிதை, கும்பமஹாராணாவின் வீர சூர பராக்கிரமம், இவைகளெல்லாம் எனக்குக் காட்சி கொடுத்தன. அப்புறம் ஒரு திரை விழுந்தது. அதிலே பிரதாப சிம்மனுடைய—என் தம்பி ராணா பிரதாப சிம்மனுடைய வீர வாள், "பிஜ்லி" (மின்னல்) போல் பிரகாசித்தது. என்னை நானே பார்க்கத் தொடங்கினேன்.

ஜீஹா :—அப்புறம் என்ன நடந்தது ?

சகர :—நானும் அதே வம்ச வல்லியில் வந்தவன்தானே என்று எண்ணினேன். எதிரிகளுக்கு உதவி செய்தது எவ்வளவு கீழ்மையானதென்று என்னை நானே கேட்டுக்கொண்டேன். இப்படியெல்லாம் விசாரஞ் செய்துகொண்டிருந்தபோது, ஒருநாள் இன்னும் கொஞ்சம் ஆழமாகப் பார்த்தேன்.

ஜிஹா :—அப்பால்?

சகர :—வேறொரு புதிய காட்சி தோன்றிற்று. அது பழங் காலத்துச் செய்தியல்ல—என் மகள்—மொகலாயர்களின் குலாமாகிய இந்த அடிமையின் மகள்—தனது ஜெனனீ ஜென்ம பூமிக்காகக் கிழிந்த பழங் கந்தைகளை யுடுத்திக்கொண்டு, காடு, மலை, வனம், வனாந்திரங்களில் சாரணியாகத் திரிந்து, ஜன சாகரத்தில் சண்டமாருதத்தைப்போல் வீர அலைகளை யுண்டுபண்ணிக்கொண்டிருந்த என் மகள்—சத்தியவதி தோன்றினாள், அவளைக் கண்டதும் என்னையறியாமலே கண்ணீர் பெருகிற்று; தொண்டையில் என்னவோ அடைப்பது போலிருந்தது. வெட்கம், வெறுப்பு, அபிமானம், எல்லாம் ஏற்பட்டது. என்னால் சும்மா இருக்க முடியவில்லை. உடனே சித்தூர்க் கோட்டையை அமரசிம்மனுக்குக் கொடுத்துவிட்டு இங்கு வந்தேன்.

ஜிஹா—சாகத் துணிந்துதானே இங்கு வந்தீர் ராஜா சாஹிப்?

சகர :—சந்தேகமில்லாமல் சாகத் துணிந்துதான் இங்கு வந்தேன். மரண பயம் இப்போதெனக்கில்லை— முன்னே சாகப் பயந்தேன்; இப்போது அதை வென்றுவிட்டேன்.

ஜிஹா :—எப்படி ?

சகர :—உலகத்தில் இரண்டு பாதுஷாக்களின் இரண்டு ராஜ்யங்கள் இருக்கின்றன. ஒன்றுக்குச் சுயநலமென்று பெயர்; இன்னொன்றுக்குப் பலி தியாகம். ஒன்றைச் சைத்தான் ஆளுகிறான்; மற்றொன்றைக் கடவுள். இதுவரை நான் சுயநலமென்கிற சைத்தான் ராஜ்யத்தில் இருந்தேன். பலி தியாகமாகிற பரோபகார ராஜ்யத்தை அன்றைக்குத்தான் பார்த்தேன். அதன் சொந்தக்காரர் புத்தர், ஈஸா, அல்லது கிருஷ்ண பரமாத்மா! அவருடைய சட்டம் அன்பு; பக்தி; தண்டனை; மன்னிப்பு; அல்லது ஆத்ம தியாகம். அவைகளை அன்றைக்குப் பார்த்தது முதல், அந்த ராஜ்யத்தின் உண்மைப் பிரஜையானேன். உடனே ஒரு சுய சமர்ப்பண உணர்வு உண்டாயிற்று. வாள் பிடித்தறியாத கைகளில், அபலைகளுக்காகவும், ஏழைகளுக்காகவும் வாள் பிடித்துப் போராடித் திருடர்களால் மார்பில் காயப்படுத்தப்பட்டேன்.

ஜிஹா :—அப்புறம் ?

சகர :—அப்புறம் மரணக் கடலில் இறங்கி, பழைய குணங்களுக்கும் குற்றங்களுக்கும் பிராயச் சித்தமாக, மறுகரை சேருவதற்கு இங்கு வந்தேன். முன்னர்

சாவதென்றால் ரொம்பப் பயமாயிருந்தது. இப்போது அதைக் கொன்றுவிட்டேன். ஆத்ம அபிமானம் அற்றவனையும், தியாகம் என்கிற பலி பீடத்தில் ஏறியிருப்பவனையும் மரணத்தால் ஒன்றும் செய்ய முடியாது.

ஜிஹா —அப்படியானால் சாகத் தயாராயிரும்!

[ஜிஹாங்கீர் தனது மெய் காப்பாளனைப் பார்த்துக் கண்ணால் சமிக்ஞை செய்கிறான். அவன் வாளை யுருவிக்கொண்டு சகர சிம்மனை நோக்கிச் செல்லுகிறான்.]

சகர :—கேவலம் இதற்காகவா இன்னொருவர் தேவை? (இடையிற் சொருகியிருந்த கட்டாரியை யெடுத்துமார்பிற் பாய்ச்சிக்கொள்ளுகிறான்) "இந்த ரத்தந்தான் எனது பழைய பிரகிருதிக்குத் தகுதியான பிராயச் சித்தம்—பிழைகளுக்கெல்லாம் எடைக்கெடை". (கீழே சாய்ந்தபடியே மரண யோக நித்திரையில் மூழ்கிவிட்டான்.)

(திரை விழுகிறது.)

(காட்சி முடிவு.)

---

மூன்றாவது அங்கம் முடிவுற்றது.

---

# "சுயராஜ்யம் ஏன்?"

( இரண்டாம் பதிப்பு. )

எளிய நடையில் இனிய அமைப்பில்

எழுதப்பெற்றது.

காப்பேடு முதல் கடையேடு வரை

ஆவேசக் கருத்து! ஆர்வப் போக்கு!

ஆதாரத்துடன் ஆராய்ச்சி!

அவசியம் அனுபவிக்கத்தக்க நூல்.

# நான்காவது அங்கம்.

## முதற் காட்சி.

**இடம்** :—உதய சாகரத்தின் ஒரு கரை.

**காலம்** :—சந்திரிகை இரவு.

[உதயபுரி ஏரிக் கரையில், ஓர் சிலாசனத்தில், (கற்பீடத்தில்) ராணு அமர சிம்மன் வீற்றிருக்கிறன். அலைகள் சப்திக்கின்றன. சமீபத்தில் ஓர் மரத்திலிருந்துகொண்டு குயில் "அகோ அகோ" என்று பாடுகிறது. ராணு கண்ணை மூடிக்கொண்டு கவனமாய் அதன் மதுரப் பாடலைக் கேட்டு ரஸித்துக்கொண்டிருக்கிருர். சிறிது தூரத்தில் சில ஸ்திரீகள் "காமன்" பண்டிகை கொண்டாடுவதும் கமாஸ்ராகத்தில் லாவணி பாடுவதும் கேட்கிறது.]

**ராணு** :—காமன் பண்டிகை கொண்டாடுவதும், கமாஸ் ராகத்தில் பாடுவதும், மனதுக்கு மஹா ரம்மியமாயிருக்கிறது. காலடியிற் பூமி வெடித்தாலும் தெரியாதவாறு, அவர்கள் காமன் விழாக் கொண்டாடுகின்றனர். சம்ஸார சாகரம் எவ்வளவு பெரிய மாயை பார்! ஆடல் பாடல்களிலேயே மனிதன், தன்னையும் தானிருக்கிற உலகத்தையுங்கூட மறந்துவிடுகிருன். இல்லையானல் இந்த மரணபூமியில்—கர்மப் பிரகிருதியில் எவனுவது இருக்க விரும்புவானு? பிரபஞ்சம்,

மாறா சஞ்சலம்; அது கொடும் துக்க சாகரம்; துயர படலம். அதோ மானஸி வருகிறாளே!

[மானஸி வருகிறாள்.]

மான:—ஏனப்பா இவ்வளவு நேரம் இங்கிருக்கிறீர்கள்? வீட்டுக்குப் போங்கள்! குளிர்கிறது!

ராஜ:—கொஞ்சம் பொறம்மா! போகிறேன்! இங்கே உதய சாகரத்தினடியில் உட்கார்ந்திருந்தால் மனதுக்குச் சிறிது சாந்தி யேற்படுகிறது. இல்லையா மானஸி!

மான:—ஆம் அப்பா!

ராஜ:—சம்சாரம் சஞ்சலமுடையதென்று உனக்கும் எப்பொழுதாவது தோன்றியதுண்டா?

மான:—சஞ்சலமுடையதென்று?

ராஜ:—ஆம். சஞ்சலமுடையதென்றுதான்.
எந்த நேரமும் விசாரணையும் விரக்தியுமாயிருந்து மனிதன் எப்பொழுதாவது அமரத்தன்மை யடைய முடியுமா? அதனுலே தான் பிரபஞ்சம் அவனுக்கு பிரமையாகவும், கவலை நிறைந்ததாக வுமிருக்கிறது. சஞ்சலத்தால் செல்லரிக்கப்படாத ஜடம் எதுவுமே யில்லை.

மான:—இருக்கலாம். ஆனல் எனக்கு இந்த உலகம், அவ்வளவு கெட்டதாய்த் தெரியவில்லை.

ராஜ:—இதோ இந்தச் சந்திரிகையைப் பார்! தாரா கணங்களை நோக்கு! அலைகளின் அநுராகத்தைக் கேள்! மந்த மாருதத்தை அனுபவி! இன்பகர

மான இவ்வளவு வஸ்துக்களிலிருந்தும் பிரித்துக், கவலையானது மனிதனைப் பலவந்தமாய் இழுத்துக்கொண்டுபோய், ஏதோ கொஞ்சம் சுகம் அல்லது மிதமிஞ்சிய துக்கத்துக்குள்ளே போட்டு விடுகிறது. அப்போது சம்சாரத்தை விட்டே போய்விடலாமா என்று தோன்றுகின்றது மானஸி! உலகம் மாயை; பிரபஞ்சம் வெறும் மித்தை.

மான:—உலகம் மாயை யாகவும், பிரபஞ்சம் மித்தையாகவுமிருக்கலாம். ஆனால் நீங்கள் கூறுகிறபடி அது வெறும் மாயையல்ல; வெறும் மித்தையுமல்ல— இன்பமான மாயை! மனோகரமான மித்தை! உண்மையிலேயே பிரகிருதியிலுண்டாகிற பிர்மானந்தத்தை, வேறெங்கும் அனுபவிக்க முடியாது. அழகிய இயற்கைத் தேவி, அவ்வளவு தயவும் கிருபையும் நம்மீது வைக்கவில்லையானால், நாமிந்த உலகத்திற் பிறந்திருக்கவே மாட்டோம்; பிறந்தாலும், ஒருநாள் ஒரு நிமிஷம் உயிர் வாழ முடியாது. கிரீஷ்மரிதுவால் (கோடையால்) உஷ்ணம் தாங்கமாட்டாமல் நாம் உபத்திரவப்படும்போது கம்பீரமான கர்ஜனையோடும், மனோகரமான மின்னலோடும் வர்ஷரிது (மழைக்காலம்) வந்து மழை பெய்து நம்மைக் குளிர்விக்கிறது. அப்புறங் குளிரால் நாம் நடுங்கும்போது, வசந்தரிது (இளவேனிற்காலம்) வந்து, தனது மந்த—சுகந்த வாயுவினால் சீதளத் திரையை யகற்றுகி

றது. அப்போது நாம், தினத்தின் தீவிர ஜோதியை (முதுவேனிலை)க் கண்டு பயப்படுகிறோம். உடனே இரவு வந்து, தனது இன்பப் பராமரிப்பில் நம்மைத் தாலாட்டித் தூங்கச் செய்கிறது. இவ்வாறு சதா சர்வ காலமும் பிரகிருதியின் பிர்மானந்தமான கிருபை, நம்மீது பிரவஹித்துக் கொண்டேயிருக்கிறது.

ராஜ :—அப்படியானால் அதற்கு முடிவே யில்லையா?

மான :—இருக்கிறது; மனிதனுடைய சிந்தனை உலகத்தில். அப்பா! இப்போது தாங்கள், இந்தச் சரோவரத்தைப் (ஏரியை) பார்த்துக்கொண்டிருக்கிறீர்களல்லவா?

ராஜ :—ஆம்; பார்த்துக்கொண் டிருக்கிறேன்.

மான :—இதில் நிலவொளி தோன்றுகிறதல்லவா?

ராஜ :—தோன்றுகிறது.

மான :—அதைப் பிடிக்க முடியுமா?

ராஜ :—எதை?

மான :—அந்த நிலா வொளியை! அந்த அலைகளின் கலகலத் தொனியை!

ராஜ :—முடியாது.

மான :—ஏன்?

ராஜ :—ஒளி மாத்திரமாகவும், ஒலி மாத்திரமாகவுமிருக்கிற அவற்றை எப்படிப் பிடிக்க முடியும்? அது தான் ஜலத்தோடு ஜலமாயிருக்கிறதே?

மான :—சரி. அந்தகாரமான இரவு; காற்று நின்றுவிட்டது; சரோவரத்தின் மேற்பரப்புச் சலனமற்றி

ருக்கிறது. அப்போது அந்தச்சௌந்தர்யமும் சங்கீதமும் எங்குப் போய்விட்டன ?

ராஞ :—நீ தான் சொல்லு அவைகள் எங்கே போய்விடும் ?

மான :—நிச்சயமாய் ஒன்றுஞ் சொல்ல முடியாது. ஆனால் இது மாத்திரம் நிஜம்: அவைகள் அழிந்துவிடவில்லை. பிரகிருதியின் ஸ்மிருதியில் (இயற்கைக் காவியத்தில்) கவிகளின் சொப்பனத்தில், மாதாவின் ஸ்நேகத்தில், பக்தர்களின் பக்கத்தில், மனிதர்களின் அநுக்ரஹத்தில் அவைகள் இருக்கின்றன. மனுஷ்யர்களிடமிருக்கிற அழகு, பூமியினிடமிருக்கிற தயை, வாயுவிலிருக்கிற சுகந்தம், ஜலத்திலிருக்கிற ஜின்கார சப்தம், ஆகாசத்திலிருக்கிற நக்ஷத்திர நிருத்தியம், அக்கினியிலிருக்கிற கனகனப்பு, இவைகளெல்லாம் பிரகிருதியின் குடத்துக்குள்ளே யிருக்கின்றன—வெளிப்படும்போது வெளிப்படும்; அடங்கும்போது அடங்கும். இல்லையானால் இந்தச் சௌந்தர்யம் எப்படித் தோன்றும் ? எங்குப் போகும் ?

ராஞ :—மனுஷ்யனுக்கு அழகு தரக்கூடிய அத்தகைய அபூர்வ குணம், அவனிடம் என்ன இருக்கிறது மானஸி ? ஒரு பிடி அன்னத்தை யெடுத்துவாய்க்குக் கொண்டுபோவதற்குள்ளாக, அதை அபகரித்துக்கொள்ளவேண்டுமென்று, எத்தனை பேர் பார்க்கிறார்கள் ? எத்தனை பேர் நினைக்கிறார்கள் ? எத்தனை பேர் முயற்சிக்கிறார்கள் ? அதை நான் யாரை வஞ்சித்து அபகரித்தேன் ? எனக்கு நானு

கவே சம்பாதித்த உனைவுக்கு இவ்வளவு பொறு மையா? இவ்வளவு ஈரிஷா? இவ்வளவு தூவே ஷமா?

மான :—அது மனிதர்களின் மானஸ வியாதி! அந்த வியாதி மனிதனைப் பிடிக்கவில்லையானால், மனிதர் ஒருவருக் கொருவர் அன்பு வைப்பதற்கே இட மிராது. ஒருவருடைய துக்கத்தைத் தூர அக ற்றி, அவரை உத்தாரணஞ் செய்து சுகமடைவ தெங்கே? சம்ஸாரம், அதமமானதென்று அதை விட்டுவிடவேண்டுமென்று அபிப்பிராயப்படுகி றீர்களப்பா? சம்ஸாரம் மஹா தீனமானது; அதை உத்தாரணஞ் செய்யவேண்டும்!

ராணு :—வாஸ்தவம்; நீ சொல்லுவதெல்லாம் வாஸ்தவந் தான் மானவி! தலை சுற்றுகிறது—என்னால் எதை யும் சிந்திக்க முடியவில்லை. (திரைக்குள்ளிருந்து) "மானவி!—மானவீ!"

மான :—அம்மா! இதோ வந்துவிட்டேன். அப்பா! இருட் டிவிட்டது; நீங்களும் வாருங்கள் போகலாம்!

[மானவி போகிறாள்.]

ராணு :—இது ஒரு சுவர்க்கலோகக் கதை! சம்சாரத்தின் சார பூத சௌந்தர்யம்! சுந்தரமான மந்த வாயு வீசுகிறது; ஆகாசம், மேகமின்றி நிர்மலமா யிருக்கிறது; சம்ஸார சாகரம், சந்தடியின்றிச் சாந்தமாயிருக்கிறது. உதய சாகரத்தின் மேற் பரப்பில், சங்கீத அலைகள் சப்திப்பதானது, ஆகாசத்திலிருந்து அநேக சுவர்ண கிரணங்கள்

இறங்கிவந்து ஸ்நானஞ் செய்வது போலவும், அலைகள் அவைகளின் அழகு விளையாடலாகவும் இருக்கிறது. மரத்தின் இலைகள் நிலாவில் அசைந்து காற்றோடு கொஞ்சுகின்றன. அவைகளினுலுண்டாகிற 'மர்மர்' சப்தமானது, அலைகளின் சங்கீதத்துக்கு ஜாலராப்போடுவதுபோ லிருக்கிறது. இவைகளை யெல்லாஞ் சற்று உற்று நோக்கினல், ஜட பதார்த்தங்கள்கூட, சௌந்தர்ய லகிரியில் சஞ்சரிப்பதுபோ லிருக்கிறது.

[ராணி வருகிருள்.]

ராணி :—மஹாராஜ் !

ராஜ :—கொஞ்சம் பேசாதிரு! சொப்பனங் கண்டுகொண்டிருக்கிறேன்.

ராணி :—என்ன ? சொப்பனமா ? விழித்துக்கொண்டா சொப்பனங் காணுகிறீர்கள் ?

ராஜ :—போனுற் போகிறது; சொப்பனபங்கமாகிவிட்டது. சரி நீ யென்ன சொல்ல வந்தாய் ?

ராணி :—என்ன மிஞ்சப்போகிறது ? இக்காலத்துப் பெண்கள்தான் தாய் தகப்பன் பேச்சைக் கேட்கிறதே யில்லையே ? அன்றைக்குச் சேனுதிபதி கோவிந்த சிம்மருடைய பெண்ணும் பிள்ளையும், அவா அப்பா என்னவோ கொஞ்சங் கோபித்துக்கொண்டாரென்பதற்காக, வீட்டை விட்டே போய் விட்டார்கள். இனி நாளைக்கு—

ராஜ :—மறுபடியும் அதே சம்ஸாரத்தின் அழுகை! உலகத்தின் ஒப்பாரி! மாய்கையின் மந்திரம்!

ராணி :—என்னவோ அம்மா, இந்தக் கலிகாலத்துப் பெண்களுக்கு என்னவோ தெரியலே! நாங்களும் ஒரு காலத்தில் பெண்களாகத்தானிருந்தோம்! இந்த அநியாயமா?

ராஜா :—அப்போது துவாபர யுகம் நடந்ததோ என்னவோ! நானும் பார்க்கிறேன் எல்லாத் தாய்மார்களும் துவாபர யுகத்திலேதான் பிறந்திருக்கிறார்கள்; பெண்களெல்லாம் கலியுகத்தில். சரி; அதெல்லா மிருக்கட்டும்; நான் செய்யவேண்டியதைச் சொல்! சீக்கிரம்!

ராணி :—மானஸிக்குக் கல்யாணம் முடிப்பதானால் இப்போதே முடிக்கவேண்டும்; பின்னர் முடியாது.

ராஜா :—நானும் மானஸிக்குக் கல்யாணம் முடியாதென்று தான் நினைக்கிறேன். அவள் கல்யாணத்துக்காகப் பிறந்தவளல்ல!

ராணி :—போதும் போதும்; நிறுத்துங்கள்! எனக்கு எல்லாந் தெரிந்துவிட்டது! நீங்கள் கனவு காண்கிறீர்கள்!

ராஜா :—ஆம். நான் கனவுதான் காண்கிறேன்; உன்னால் அதுகூட முடியவில்லையே?

ராணி :—ஜோதிபுரிக்குப் போன ஆள் இன்னும் திரும்பி வரவில்லையா? சத்தியவதி மகன் அருண சிம்மன் தானே போனவன்?

ராஜா :—ஆம். அவன் திரும்பி வந்துவிட்டான்.

ராணி :—திரும்பி வந்துவிட்டானா? கல்யாணத்துக்கு நாள் குறித்தாயிற்று?

ராஞ :—இல்லை. மஹாராஜாவுக்கு நமது பெண்ணை யெடுக்க இஷ்டமில்லையாம்.

ராணி :—ஏன்?

ராஞ :—நம்மீது வருத்தத்தால்.

ராணி :—என்ன வருத்தம்? அப்படியொன்றும் அவர்களுக்கு நாம் தீங்கு செய்யவில்லையே?

ராஞ :—யுத்தத்தில் நாம் ஜெயித்ததும், மொகலாயர்கள் தோற்றதுந்தான் காரணமாம்.

ராணி :—நான்தான் ஏற்கனவே சொல்லிவிட்டேனே, மானஸிக்கு விவாஹமாகாதென்று. இதற்குள் நடந்து முடிந்திருக்கும்! இனிமேலா நடக்கப் போகிறது?

ராஞ :—நானும் அப்படித்தான் நினைத்தேன். அவள் கல்யாணத்துக்காகப் பிறக்கவில்லை. நாம் செய்ததெல்லாம் ஒரே தவறு?

ராணி :—எது தவறு!

ராஞ :— ஜோதிபுரி ராஜ குமாரனோடு மானஸிக்குக் கல்யாணம் பேசியது ஒரு தவறு; இவ்வளவு சின்னச் சைன்யத்தை வைத்துக்கொண்டு மொகலாயர்களோடு போர் செய்தது பெருந் தவறு; உனக்கும் எனக்கும் விவாஹம் நடந்தது கூடத் தவறு; இந்த ராஜ்யமும், எனது வாழ்க்கையும்— எல்லாமே தவறு.

ராணி :—இருக்கலாம் எல்லாம் ஏகத் தவறுகளாய்! ஆனால் மஹாராஜா என்னைக் கல்யாணஞ் செய்யாதிருந்திருந்தால்தான் தவறு என்று நான் நினைக்

கிறேன்—இல்லையா? ஏன் சிரிக்கிறீர்கள் மஹாராஜ்?

ராணு:—மேலும் மஹாராஜா (கஜ சிம்மன்) ஆக்ராவுக்குப் போயிருப்பதாகவும் அறிகிறேன்.

ராணி:—ஏன்?

ராணு:—அங்கே போய் பாதுஷாவுக்குத் தமது விஸ்வாசத்தைத் தெரிவித்துக்கொள்ளவும், படைத்துணை செய்வதாக வாக்களிக்கவும்.

ராணி:—அப்புறம்?—நீங்கள் சிரிக்கிறீர்கள்—சிரிக்கக்கூடிய சங்கதியா இது?

ராணு:—சிரிப்பதற்கு இதைவிட வேறு பெரிய சமாச்சாரம் என்ன கிடைக்கப்போகிறது ராணி? நீயும் சிரி!

ராணி:—என்ன? நானும் உங்களைப்போல் பைத்தியக்காரியாகிவிடவேண்டுமா என்ன?

ராணு:—சபாஷ்! ரொம்பப் பெரிய சங்கதி ராணி! எல்லாம் சர்வநாசமாகிவிடப்போகிறது—ஒன்றுமே மிஞ்சாது.

ராணி:—எது நடக்கவேண்டுமோ அது நடந்துதான் தீரும் மஹாராஜ்! எனக்கு அவைகளெல்லாந் தெரியாது; கல்யாணம் அவஸ்யம் நடக்கவேண்டும்.

ராணு:—எப்படி?

ராணி:—மார்வாரத்தின் மீது படையெடுக்களேன்?

ராணு:—பேஷ்! இவ்வளவு காலத்துக்குப் பிறகு இன்றுதான், நீ, க்ஷத்திரிய ராணியென்று காட்டிக் கொண்டாய்! சக்தியிலிருந்துதான் பக்தியேற்படுகிறதென்று உனக்குத் தெரியுமா? ஜோதிபுரி மஹாராஜாவுக்கு மொகல்-பக்தி இருக்கிறது—

என்னிடம் அது இல்லை. ஆனால் சுய சக்தியிருக்கிறது; அதுவும் அநேகமாய்ச் செலவழிந்துவிட்டது.

ராணி :—அப்படியானால் அவமானத்தைப் பொறுத்துக் கொண்டிருப்பதா?

ராணு :—வேறென்ன செய்வது? அவமானத்தைப் பொறுக்காமல் அழுவதா? அல்லது பிரலாபிப்பதா? பயப்படுவதற்கொன்றுமில்லை; எல்லாம் சர்வ நாசமாகிவிடும். எந்த ஜாதியினிடத்தில் சுத்த சூரத்துவமிருக்கிறதோ அந்த ஜாதியைச் சாக்ஷாத் பகவான்கூட ரக்ஷிக்க முடியாது—மனித சக்தி எம்மாத்திரம்?

ராணி :—ஆனால் இதில் நீங்கள் செய்த குற்றம் என்ன?

ராணு :—நான் செய்த குற்றமா? இதுதான்: நானும் மஹாராஜாவும் ஒரே ஜாதி. யாரோ ஒரு தோஷி உட்கார்ந்த தவறால் தோணி மூழ்கினால் அவனோடுகூட நிர்தோஷிகளும், நிரபராதிகளும் நீரில் மூழ்கிவிடுவதில்லையா? அப்படித்தான் எல்லாம். சரி, போ!

[ராணி போகிறாள்.]

ராணு :—வானம் எவ்வளவு கருப்பாயிருக்கிறது!

[ராணுவும் போகிறார்; மானஸி மறுபடியும் வருகிறாள்.]

மான :—அஜய சிம்மன், மீவாரம் விட்டுப் போய்விட்டான்! போவதற்கு முன்னால் ஒரு தரம் என்னைச் சந்தித்துப் "போய்வாரேன்!" என்று சொல்லிவிட்

டுப் போயிருக்கக் கூடாதா. கேவலம் ஒரு கடி தத்தில்—உலர்ந்த ஒரு துண்டுக் காகிதத்தில் "விதேசம் போகிறேன்-எப்போதும் உன்னைச் சந் திக்காதவாறு விடைபெற்றுக்கொள்ளுகிறேன்." என்று எழுதத்தானு உனக்குத் தயவு வந்தது? அஜய! அஜய! நீ அதி நிஷ்டுரன்! பிரிய காதல! காதல! இதுதானு? உன்னை நான்...ஆஹா! இப்பொழுது சந்திரிகையின் ஜோதி ஏன் தணிந் துவிட்டது? உதய சாகரத்தின் மார்பகமும் ஏன் மலினமடைந்துவிட்டது? பிரகிருதியின் புன்னகையும் புது நிலவும் எங்குப் போய்விட் டன?

[மாளவி பாடுகிருள்.]

"தாரகை யென்ற மணித்திரள் யாவையுஞ்
சார்ந்திடப் போ மனமே
ஈரச் சுவையதி லூறி வருமதில்
இன்புறுவாய் மனமே
சீர இருஞ்சுடர் மீனெடு வானத்துத்
திங்களையுஞ் சமைத்தே
ஓரழகாக விழுங்கிடு முள்ளத்தை
யொப்பதோர் செல்வமுண்டோ?

"வீதிக் கதவை யடைப்பதுங் கீழ்த்திசை
விம்மிடுஞ் சங்கொலியும்
வாதுகள் பேசிடு மாந்தர் குரலு
மதலை யழுங்குரலும்
ஏதெது கொண்டு வருகுது காற்றிவை

எண்ணரி லகப்படுமோ ?
சீதக் கதிர்மதி மேற்சென்று பாய்ந்தங்கு
தேனுண்ணுவாய் மனமே”

(திரை விழுகிறது.)

(காட்சி முடிவு.)

---

## இரண்டாம் காட்சி.

---

இடம் :—மீவாரத்தினோரம்: மஹபத்கான் கூடாரம்.

காலம் :—அதிகாலை.

[சேனாபதி மஹபத்கான், ஷாஜாதா பர்வேஜ், மஹாராஜா கஜ சிம்மன், மூவரும் நின்று பேசிக்கொண் டிருக்கின்றனர்.]

மஹ :—காலதாமதம் வேண்டாம் ஷாஜாதா சாஹிப்! இந்த ஒரு லட்சம் சைன்யத்தை யெடுத்துக்கொண்டு போய்ச் சித்தூர்க் கோட்டையை முற்றுகை யிடுங்கள் !

பர் :—நல்லது; அப்படியே செய்கிறேன்.

[ஷாஜாதா பர்வேஜ் போகிறான்.]

மஹ :—அப்புறம் நீங்கள் மஹராஜ்! நீங்கள் போய் மீவார முழுதும் நெருப்புவையுங்கள்! ஒன்றுவிடாமல் எல்லாக் கிராமங்களையுஞ் சுட்டுச் சாம்பலாக்குங் கள்! இந்த வேலையில் நீங்கள் ரொம்ப உஷாரா யிருப்பீர்களென்று எனக்கு தெரியும். ஆனால் ஒன்று மாத்திரம் நன்றாய் ஞாபகத்திலிருக்க வேண்டும். அதாவது:ஸ்திரீகளுக்கு நம்மால் எத்

தகைய துன்பமும் ஏற்படக்கூடாது. தெரியுமா மஹாராஜ்? ஜாக்கிரதை!

கஜ:—நல்லது ஜனாப்! மீவாரத்தில் ஒரு ரஜபுத்திரன்கூட இல்லாமல், எல்லோரையுங் கொன்று குவித்து விடுகிறேன்.

மஹ:—ஆம் மஹாராஜ்! அப்படியே செய்யுங்கள்! மொகலாயர்கள், ரஜபுத்திரர்களின் ஜென்ம விரோதிகளாயிருப்பதைவிட, ரஜபுத்திரர்களே ஒருவருக்கொருவர் அதிகப் பகைமை பாராட்டுகிறார்களென்பது எனக்குத் தெரியும். ஹிந்துஸ்தானத்தின் பழைய சரித்திரங்களில் ஹிந்துக்கள், தங்கள் சகோதர ஹிந்துக்களுக்குத் தீமை செய்வதிலும், ஹிந்துக்களை வதஞ் செய்வதிலும் சிரத்தை காட்டுவது போல், வேறெதிலுங் காட்டுகிறதில்லையென்று படித்திருக்கிறேன். மேலும் ரஜபுத்திரர்களைச் சர்வ நாசஞ் செய்வதில், உங்களை யொருவராலும் மிஞ்ச முடியாதென்பதையும் நானறிவேன். நல்லது ராஜா சாஹிப்! நீங்கள் போகலாம்.

கஜ:—போய்வருகிறேன் சேனாபதி சாஹிப்!

[கஜ சிம்மன் போகிறான்.]

மஹ:—ஹிந்துவே! ரஜபுத்திரனே! மீவாரமே! உஷார்! உங்கள் ஓட்டம் ஓய்ந்துவிட்டது! இதுதான் முடிவான யுத்தம்!

(திரை விழுகிறது.)

(காட்சி முடிவு.)

## மூன்றுங் காட்சி.

இடம் :—உதயபுரி அரண்மனை.
காலம் :—இரவு.

[ராணு அமர சிம்மனும் சத்தியவதியும்.]

ராணு :—இம்முறை ஸ்வயம் மஹாபத்கானே சண்டைக்கு வந்திருக்கிறனுமே?

சத்ய :—ஆம் மஹாராஜ்! மஹாபத்கான் வந்திருக்கிறன்; அவனேடு ஒரு லட்சம் சைன்யமும் வந்திருக்கிறது.

ராணு :—(பெரு மூச்சுவிட்டுக்கொண்டு) சத்தியவதி! நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன்—

சத்ய :—என்ன சொல்லிவிட்டீர்கள் மஹாராஜ்?

ராணு :—இனி யெதுவும் மிஞ்சப்போவதில்லை—எல்லாம் சர்வநாச மாகிவிடுமென்று. அகில ராஜபுதானமும் அழிந்துவிட்டபின், மீவாரம் மாத்திரம் ஏகாந்தமாய் எப்படித் தலை தூக்கி நிற்க முடியும்? இந்த நஷ்டத்தைப் பிரமதேவனுல் எப்படிக் கண்கொண்டு பார்க்க முடியும்? இம்முறை மீவாரமும் போய்விடும்! நீயேன் தலை குனிந்துகொண்டனை சத்தியவதி? இதுவென்ன சந்தோஷச் செய்தியில்லையா?

சத்ய :—என்ன மஹாராஜ்? இதுவா சந்தோஷச் செய்தி?

ராணு :—ஆநந்த சமாச்சாரமல்லவோ இது? படுக்கையிலே கிடந்து கிடந்து, எவ்வளவு காலந்தான், இந்த மீவாரம் மரணவஸ்தைப்பட முடியும்?

இம்முறை நிச்சயமாய் மரணம் சம்பவித்தே தீரும்!

சத்ய :—அப்படியானால் மஹாராஜா யுத்தஞ் செய்யப் போவதில்லையா ?

ராணு :—யுத்தஞ் செய்யாமல் வேறென்ன செய்வது? இதுவரை மீவாரம் முயல் வேட்டையாடிற்று; இனி மேலேதான் சிங்க வேட்டையாடப் போகிறது. மீவாரம் சந்தோஷத்தின் சிகரத்திலேறப்போகிறது; மஹா விபுல (பிரகாசம்) மடையப்போகிறது. சகோதரனுக்கும் சகோதரனுக்கும் நடக்கிற இந்த யுத்தத்தை, அகில பாரதமும் வேடிக்கை பார்க்கப் போகிறது.

சத்ய :—மஹாபத்கானோடு, ஜோதிபுரி மஹாராஜா கஜ சிம்மரும் வந்திருக்கிறாராம்.

ராணு :—ஓ! வாஸ்தவம். அவர் என் அழைப்பை மறுக்கவில்லை. நான் நினைத்தேன்: நம்மீதிருக்கிற குரோதத்தால், என் அழைப்பையும் அவர் அங்கிகரிக்கமாட்டரோ என்று.

சத்ய :—ஹா ரஜபுத்திர குலத்துரோஹி—

ராணு :—என்ன சொன்னாய் சத்தியவதி?—இனி யொருதரம் அப்படிச் சொல்லாதே! அவன் பரம பக்தன்! பரம வைஷ்ணவன்! நான்தான் மீவார வம்சத் துரோஹி. ஏனெனில், நான் அந்த ஈஸ்வரனை—(தில்லி பாதுஷாவை) வணங்கவில்லையல்லவா? "தில்லீஸ்வரோவா ஜகதீஸ்வரோவா" என்று கஜ சிம்மன் அநு தினமும் ஜெபிப்பது

போல், நான் ஜெபிக்கவில்லையல்லவா? கஜ சிம்மன்! வாஹ்ரேவாஹ்! (அழகே அழகு) எவ்வளவு நல்ல பேர்! ஒரே வார்த்தையில் கஜமும் (யானையும்) சிம்மமும்! துதிக்கையையும் ஆட்டுகிறது, கேசரி (பிடரி மயிர்)யையும் அசைக்கிறது. இல்லையா சத்தியவதி!

சத்ய:—ஆம். அவர் ரஜபுத்திரர்களோடு சண்டைக்கு வந்திருக்கிறார்.

ராணு:—இல்லையானால் மீவார நாசம் எவ்வாறு சம்பூரணமடையும்? மகா தேவனோடு நந்தி பிருங்கியும் வருவதில்லையா? சாஸ்திரம் பொய்க்காது சத்தியவதி! பொய்க்காது ஒருக்காலும்!

சத்ய:—ஹா! அதிர்ஷ்டஹீனமே! மீவாரத்தின் ஹதபாக்கியமே! (கண்ணீர் வருகிறது; அதை வழித்தெறிகிறாள்.)

ராணு:—இந்தப் பாக்கிய ஹீனமான பாரத தேசத்தை, பிரமதேவன் சிருஷ்டிக்கும் போதே, "பாரத தேசம் பாரத புத்திரர்களாலேயே சர்வ நாசமடையும்" என்று அதன் தலையில் எழுதிவிட்டான்! தக்ஷசிலத்தின் சரித்திரத்தைப்பார்! ஜய சந்திரனின் ஜாதித் துரோஹத்தைப்படி! சக்த சிம்மனின் மாத்ரு ஹத்தியையும் நினை! அவற்ளோடு இந்த மஹபத்கானையும், கஜ சிம்மனையும் நோக்கு! எல்லாம் ஒன்றுக்கொன்று பொருத்தமா யிருக்கிறதல்லவா? அட்சர அட்சரமாய் ஏதாவது பிசகிருக்கிறதா இதில்? பிரம

விதி பொய்க்காது சத்தியவதி! எல்லாம் விதிப் படி நடக்கும்! நீபோ! நான் சேனை தயார் செய்யவேண்டும்!

[சத்தியவதி போகிறாள்.]

ராணு:—ஜாதிகள் நஷ்டமடைவதெல்லாம், அததன் தோஷத்தினாலேதான். ஜாதிகள் ஜீவனற்றுப் போகிற போது, வியாதிகள் மிகைத்து விடுகின்றன. வீடுகள் தோறும் விபீஷணர்களும் பிறக்கிறார்கள்.

[கோவிந்த சிம்மன் வருகிறான்.]

ராணு:—கோவிந்த சிம்மரே! சொல்லுங்கள் என்ன சமாச்சாரம்?

கோவி:—மஹாபத்கான், நிரபராதிகளான கிராமவாசிகளின் வீடுகளைக் கொளுத்துகிறானாம்.

ராணு:—கொளுத்துகிறானா? ரொம்பச்சரி; நன்மைதான் செய்கிறான் அவன்.

கோவி:—நன்மை செய்கிறானா? நல்லது நான் அதற்குச் சரியாய்ப் பழிவாங்குகிறேன்.

ராணு:—அவஸ்யம் அப்படித்தான் செய்யவேண்டும். இல்லையானால் மீவாரத்தின் சர்வ நாசம் எவ்வாறு முழுமையடையும்?

கோவி:—மஹாராஜா அவஸ்யம் யுத்தம் செய்வீர்களல்லவா?

ராணு:—யுத்தஞ் செய்யவில்லையானால் வேறென்னதான் செய்வது? ரஜபுத்ர சைன்யம் எவ்வளவிருக்கும் கோவிந்த சிம்மஜீ? ஐயாயிரமிருக்கலாமல்லவா? போதும்; அவ்வளவே போதும். சாவுக்கு

அதைவிட அதிகச் சைன்யத்துக்கு அவஸ்யமே யில்லை. மஹாபத்கானிடம் ஒரு லட்சம் சேனை யிருக்கிறது; இருக்கட்டும். எவ்வளவிருந்தா லென்ன ? தலைக்கு மேலே வெள்ளம் போகிறது. சாண் போகிறது, முழம்போகிறது என்று கணக் குப் பார்த்துக்கொண்டிருக்க முடியும் ?

கோவி :—ராணாஜீ ? (என்று சொல்லிக்கொண்டே தலை யைத் தொங்கப்போட்டுக்கொள்ளுகிறார்.)

ராணா —என்ன கோவிந்த சிம்மஜீ ? தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டீர்கள் ? எழுந்திருங்கள் ! இன் றைக்குப் பெருநாள். பெரிய திருநாள். வீட்டுக்கு வீடு மங்கள வாத்தியம் முழங்கட்டும் ! நகரமெங் கும் ரத்த துவஜம் (ரத்தக் கொடி) பறக்கட்டும் ! உதயபுரிக் கோட்டையின் உச்சியில், ஒருதரம் மீவாரத்தின் செம்மணிக் கொடியை உயர்த்துங் கள் ! ஏனெனில், இரண்டு தினங்களுக்குப் பின், அதை நாம் பார்க்கப்போகிறோமா ? அல்லது அக்கொடிதான் உயிரோடிருக்கப்போகிறதா ?

கோவி :— நாங்கள் யுத்தஞ் செய்கிறோம்; யுத்தஞ் செய்து சாகிறோம் மஹாராஜ்! அதற்காக நாங்கள் கவலைப் படவில்லை; நாங்கள் துக்கப்படுவதெல்லாம், மீவார·மாதாவை எங்களால் ரக்ஷிக்க முடியவில் லையே யென்பதற்காகத்தான்.

ராணா :—ஏன் ? எதற்காகத் துக்கம் ? துக்கப்படக்கூடிய சமாச்சாரமா இது ?. எல்லோருடைய மாதாக் களும் மரிக்கத்தானே மரிக்கிறார்கள்? சாகாமல்,

சிரஞ்சீவியா யிருக்கக்கூடிய தாய், ஒருத்தியா வது உலகத்திலுண்டா ?

**கோவி** :—நல்லது மஹாராஜ்! உத்தரவுப்படி செய்கிறோம்.

**ராணா** :—ஆம் சேனுபதி! அப்படியே செய்யுங்கள் ! இறப் பதற்கு முன்னால், ஒரு தரம் ஆலிங்கனஞ் செய் துகொள்ளுவோம்! (இருவரும் ஒருவரை யொரு வர் தழுவிக்கொள்ளுகின்றனர்) நல்லது செல்லுங் கள்! சாவதற்குத் தயாராகுங்கள் !

[கோவிந்த சிம்மன் போகிருன்; ராணி வரு கிருள்.]

**ராணா** :—ராணி! உற்சவங் கொண்டாடு! ஆநந்தமடை!

**ராணி** :—மானஸிக்கு விவாஹம் நிச்சயமாகிவிட்டதா?

**ராணா** :—ஆம்! விவாஹம் நிச்சயமாகிவிட்டது; ஆனல் மானஸிக்கல்ல; மீவாரத்துக்கு!

**ராணி** :—என்ன மீவாரத்துக்கா? மீவாரத்துக்கா விவா ஹம்?

**ராணா** :—ஆம். மீவாரத்துக்குத்தான். அதன் சர்வ நாச த்தோடு!

**ராணி** :—அதன் அர்த்தமென்ன மஹாராஜ்?

**ராணா** :—அர்த்தமா? அர்த்தம் நிறைய இருக்கிறது. சகோ தரனுக்கும் சகோதரனுக்கும் சண்டை நடக் கிறது. ஆநந்தமடை! விவாஹம் நடக்கிறது— மீவார விவாஹம்! —விநாசத்தோடு—தும்ஸத்து டன்.

[ராணு போகிருர்.]

**ராணி** :—அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது; பூராப்

பூராப் பைத்தியம்! வீடு முழுதும் ஒரே பைத்தியம்! ஐயோ! நான் என்ன செய்வேன்?

[மானவதி வருகிறாள்.]

மான:—அம்மா! அப்பாவுக்கு என்னாகிவிட்டது? பைத்தியம் பிடித்தவரைப்போல் திரிகிறாரே ஏன்? அவருக்கு என்ன நேர்ந்தது?

ராணி:—பைத்தியம் பிடித்துவிட்டது. போகிறேன்; போய்ப்பார்க்கிறேன்.

[ராணி போகிறாள்.]

மான:—மஹாபத்தானும் ரஜபுத்திரன்—கஜ சிம்மனும் ரஜபுத்திரன். அவர்களுக்கேன் இவ்வளவு ஈரிஷ! இவ்வளவு துவேஷம்! அதம ஜாதி! அதற்கு அழிவுண்டாகாவிட்டால் அப்புறம் எதற்கு அழிவுண்டாகும்? அண்ணனுக்கும் தம்பிக்கும் நடக்கிற இந்தச் சண்டையில் என்னதான் மிஞ்சப்போகிறது?

(திரை விழுகிறது.)

(காட்சி முடிவு.)

---

## நாலாங் காட்சி.

இடம்:—மீவாரத்தில் ஒரு கிராமத்தையடுத்த பாதை.

காலம்:—மாலை.

[சத்தியவதியும், அருணா சிம்மனும் வருகின்றனர்.]

சத்திய:—அருணா!

அருண :—ஏனம்மா ?

சத்திய :—நடக்கக் கஷ்டமாயிருக்கிறதோ ?

அருண :—இல்லையம்மா !

சத்திய :— இன்றைக்கு நாம் இந்தக் கிராமத்தில் தங்குவோம் !

அருண :—ஏன் ? இந்தக் கிராமத்தில் என்ன வேலை ?

சத்திய :—கிராமவாசிகளைப் போகச் சொல்லுவோம்.

அருண :—எங்கே ?

சத்திய :—யுத்தகளத்துக்கு ! மீவாரத்தின் வீர குலம் அழிந்துவிட்டது ! புதிய வீர குலம் சிருஷ்டிக்கப்படவேண்டும். பூஜைக்குப் புதிய சாமக்கிரியைகள் சேகரிக்கவேண்டும். வா போவோம் ! இருட்டுகிறது.

[இருவரும் போகின்றனர்; சில கிராமவாசிகள் வருகிறார்கள்.]

1-ம் கிராமவாசி :—எப்பேர்ப்பட்ட தேசம், எப்படியாகிவிட்டது பார்த்தாயா ?

2-ம் கி. வா :—சுயம் மஹாபத்கானே சண்டைக்கு வந்திருக்கிறானாமே ? இனி முடியாது; எல்லாம் நாசமாக வேண்டியதுதான்.

3-ம் கி. வா :—மஹாபத்கானுக்கென்ன அவ்வளவு சண்டை போடத் தெரியுமா ?

4-ம் கி. வா :—ஓ ! அதையேன் கேட்கிறாய் ? அவன் மஹா கில்லாடி !

2-ம் கி. வா :—அவன் எப்போது சண்டை போடப் பழகினான் ? நேற்றையப் பயல் ! அவன் பிறந்ததைக் கூட நான் பார்த்தேன்.

3-ம் கி. வா :—அதனாலென்ன? அப்படித்தான் ஒருவர் பிறப்பதை ஒருவர் பார்க்கிறோம். அதனால் அவனுக்குச் சண்டை போடத் தெரியாதென்று அர்த்தமா?

1-ம் கி. வா :—ஆமாம்; நீ பெரிய நியாய சாஸ்திரி!

4-ம் கி. வா :—அதோ அதென்ன? அந்தக் கிராமத்தில் நெருப்புப் பிடித்துக்கொண்டதா?

எல்லோரும் :—எங்கே? எங்கே?

4-ம் கி. வா :—அதோ! அதோ! புகை கிளம்புகிறது.

1-ம் கி. வா :—அதா? அது மேகம்!

2-ம் கி. வா :—மேகமா? மேகமென்ன பூமியிலிருந்தா மேலே கிளம்புகிறது? சுருள் சுருளாய்ச் சுற்றுவது தெரியவில்லையா?

3-ம் கி. வா :—அப்படியானால் கருக்குக் கிளம்புமே?

4-ம் கி. வா :—ஆம். கருக்கின் நிறம் கருப்பாய்த்தானே இருக்கும்?

1-ம் கி. வா :—அதோ கிராமவாசிகள் கத்துகிறார்களே கேட்கவில்லையா?

2-ம் கி. வா :—ஆம். கேட்கிறது.

3-ம் கி. வா :—பாடுவார்கள்; இல்லையானால் கழுதை கத்தும்!

4-ம் கி. வா :—உன் அப்பன் நாளையில், மனிதர்கள் பாடுவதும், கழுதை கத்துவதும் ஒரே மாதிரிதானிருக்குமோ? என் பாண்டேஜ்?

1-ம் கி. வா :—அதோ அவர்கள், குய்யோ முறையோ என்று கத்திக்கொண் டோடிவருகிறார்கள்!

3-ம் கி. வா :—அவர்களைத் தூக்கிக்கொண்டும், துப்பாக்கியாற் சுட்டுக்கொண்டும் சிப்பாயிகள் வருகிறார்கள்.

திரைக்குள் :—ஐயோ ! ஐயோ ! கொல்லாதீர்கள் ! கொல்லாதீர்கள் !

1-ம் கி. வா :—ஐயோ பாவம் அவர்கள்—

[கல்யாணியும் அஜய சிம்மனும் வருகின்றனர்.]

அஜய :—(கிராமவாசிகளை நோக்கி) எல்லோரும் என்ன கும்பு கூடிக்கொண்டு வேடிக்கை பார்க்கிறீர்களா ? போய்க் காப்பாற்றுங்கள் ! அவர்களைக் காப்பாற்றுங்கள் !

எல்லோரும் :—சரிதான்; எங்களால் என்ன செய்ய முடியும் ?

அஜய :—அப்படியானால், இந்த அநியாயத்தையும், அக்கிரமத்தையும் கையைக் கட்டிக்கொண்டு சும்மா பார்த்துக்கொண்டிருக்கப் போகிறீர்களா ?

4-ம் கி. வா :—அப்புறமென்ன அவர்களோடு எங்களையும் சாகச்சொல்லுகிறாயா ? ஓடுங்கள் ! ஓடுங்கள் ! இங்கேதான் வருகிறார்கள் !

கல்யா :—ஓடினால் தப்பிவிடுவீர்களா ? உங்கள் முறையும் வரப்போகிறது; உங்களையும் அவர்கள் விடமாட்டார்கள் ! உங்கள் வீடு வாசல்களையுங் கொளுத்தத்தான் போகிறார்கள் !

1-ம் கி. வா :—கொளுத்தினால் அப்போது பார்த்துக்கொள்

னுவோம். விதிவந்தால் விடுகிறதா? அதோ அவர்கள் வந்துவிட்டார்கள்! ஓடுங்கள்! ஓடுங் கள்!

[அஜய சிம்மனையும் கல்யாணியையுந் தவிர எல்லோரும் ஓடுகிறார்கள்.]

அஜய :—குய்யோ முறையோ வென்று கத்துகிறார்கள் பாவம்! என்ன கொடுமை! எவ்வளவு அநியாயம்! துப்பாக்கிகள் சப்திக்கின்றன. கல்யாணி! நீ யொருபுறமாய் ஒதுங்கி நில்! நான் அவர்களைக் காப்பாற்றுகிறேன்!

கல்யா :—ஆம் அண்ணா! உயிருள்ள வரை அந்த அபாக்கியர்களைக் காப்பாற்று!

அஜய :—என்னால் அவர்களைக் காப்பாற்ற முடியுமென்று தோன்றவில்லை கல்யாணி! என்றாலும், அவர்களுக்காக என்னால் உயிரைக் கொடுக்க முடியும். மானஸியிடம் நான் கற்றுக்கொண்டிருக்கிற மஹா மந்திரத்தைச் சாதனை செய்கிறேன்.

[அஜய சிம்மன் வாளையுருவிக்கொண்டு போகிறான்; கல்யாணி கொஞ்சம் தூர விலகி நிற்கிறாள்.]

[உயிருக்குப் பயந்து கிராமவாசிகள் ஓடி வருகின்றனர். அவர்களைத் துரத்திக்கொண்டு அநேக மொகல் சிப்பாயிகள் வருகின்றனர்.]

"காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!" (அஜய சிம்மன் காலில் விழுகிறார்கள்.)

அஜய :—(சிப்பாயிகளை நோக்கி) பதனம்.

முதல் சிப்பாயி :—யாரிவன்? (வாளை யோங்குகிறான்.)

[அஜய சிம்மன், அவனை வெட்டி வீழ்த்து கிறான். அநேக சிப்பாயிகள் வந்து அஜய சிம்மனைச் சூழ்ந்துகொள்ளுகின்றனர். ஒவ்வொருவராய் எல்லாச் சிப்பாயிகளையும் அஜயன் வெட்டி வீழ்த்துகிறான். அவ்வளவில் வேறு சில சிப்பாயிகள் கூட்டங் கூட்டமாய் அங்கு வந்து சேருகின்றனர். அவர்களையும் துவம்ஸம் செய்துகொண்டிருக்கிறான்.]

அஜய :—இனிமேல் என்றால் இவர்களைக் காக்க முடியாது கல்யாணி! நீயோடிப்போ! ஓடிப்போ!

கல்யா :—அண்ணா! நீயிங்கே இறப்பது, நான் ஓடுவதா?

[கல்யாணி கொஞ்சம் முன்னால் வருகிறாள். அவ்வளவில் அஜய சிம்மன் மீது துப்பாக்கிக் குண்டு பாய்கின்றது. சுழன்று கீழே விழுகிறான்.]

கல்யா :—(ஓடிவந்து) ஆ அண்ணா! அண்ணா! என் செய்வேன்! என் செய்வேன்!

2-ம் சிப்பாயி :—இது யார்? இவளைப்பிடி!

3-ம் சிப்பாயி :—வேண்டாம். ஸ்திரீகளை யொன்றும் செய்யக்கூடாதென்று சேனாபதி உத்திரவிட்டிருக்கிறார். ஜாக்கிரதை.

அஜய :—கல்யாணி! நான் பிழைக்கமாட்டேன்; பரமாத்மாதான் உன்னை ரக்ஷிக்கவேண்டும்!

[அஜய சிம்மன் காலையும் கையையும் உதறிக்கொண்டு சாகிறான்.]

கல்யா :- (அழுதுகொண்டு, அண்ணா! அண்ணா! எங்கு போய்விட்டாய்! எங்கு போய்விட்டாய்!

[அஜய சிம்மன் பிரேதத்தின் மீது விழுந்து கல்யாணி பிரலாபிக்கிறாள்.]

4-ம் சிப்பாயி :—எங்கே போவான்? எல்லோரும் ஒரு நாளைக்கு எங்கே போவார்களோ அங்கே!

கல்யா :—(கண்ணைத் துடைத்துக்கொண்டு) இல்லை. நான் அழவில்லை. சுத்த வீர! சோரத்தாலல்ல, வீரத்தால் நீ வீழ்ந்தாய்! தீனர்களை ரக்ஷிப்பதற்காகவும், நிரபராதிகளைக் காப்பதற்காகவும் நீ உயிரைக் கொடுத்தாய்! இவர்களோ—இந்தச் சைத்தானின் தூதர்களோ, ரத்த வெறி பிடித்துக், குற்றமற்றவர்களைக் கொன்று தொலைத்தார்கள்! நிரபராதிகளின் வீடு வாசல்களைக் கொளுத்தினார்கள்! நர பிசாசுகளுக்கு நரகத்திலேகூட இடங் கிடைக்கப்போகிறதா?

முதல் சிப்பாயி :— நாங்கள் என்ன செய்வோமம்மா? சேனாதிபதியின் உத்தரவுக்குக் கீழ்ப்படியவேண்டியவர்கள்தானே நாங்கள்?

கல்யா :—உங்கள் சேனாதிபதி யார்?

2-ம் சிப்பாயி :—எங்கள் சேனாதிபதியைத் தெரியாதா உனக்கு? அவர்தான் ஜனாப் மஹாபத்கான் சாஹிப்!

கல்யா :—என்ன? அவருடைய உத்தரவா இது? இராது! ஒருக்காலும் இராது!

3-ம் சிப்பாயி —வாருங்கள் போகலாம்! நேரமாகிறது!

**கல்யா :**—நில்லுங்கள் நானும் வருகிறேன்.

**1-ம் சிப்பாயி :**—நீ யெங்கே வருகிறாய்?

**2-ம் சிப்பாயி :**—வேண்டாமம்மா! வேண்டாம். உன்னை யெங்களால் கூட்டிப் போக முடியாது.

**கல்யா :**—நானாக வருகிறேன்; நீங்களென்ன என்னைக் கூட்டிக்கொண்டு போவது?

[எல்லோரும் போகின்றனர்.]

(திரை விழுகிறது.)

(காட்சி முடிவு.)

---

## ஐந்தாங் காட்சி.

---

**இடம் :**—உதயபுரி ராஜசபை.

**காலம் :**—காலை.

[அமர சிம்மனும், கோவிந்த சிம்மனும், மற்றும் சாமந்தர்களும்]

**ரகுவீர் :**—எங்களால் இயன்றவரை போராடினோம்; இனியும் போராட எங்களால் முடியாது மஹாராஜ்!

**ராணு :**—இல்லை ரகுவீர்! இனியும் போர் புரிந்துதான் தீர வேண்டும். எந்தவிதமான தாவாவும் வேண்டாம்; எந்த விதமான பேச்சும் வேண்டாம்—எதையும் நான் காது கொடுத்துக் கேட்கப்போவதில்லை. சேனை தயாராயிருக்கிறதல்லவா?

**கேசவன் :**—எங்கிருக்கிறது மஹாராஜ் சேனை? மீவார முழுவதிலும் வலைபோட்டரித்தாலும் ஐயாயிரம் சைனிகர்கள் அகப்படுவார்களோ என்னவோ? இவ்வளவு சின்னஞ் சிறிய சைன்யத்தையா ஒரு

லட்சம் சைன்யத்துக்கு முன்னால் நிறுத்துவதா? நிறுத்தி ஜெயிக்க முடியுமா?

ராணா :—முடியாதென்பது எதுவுமே யில்லை கேசவ! நமது ஐயாயிரம் சிப்பாயிகளும் சரி, மொகலாயர் ஐந்து லட்சம் பேர்களும் சரி.

ரகுவீர் :—இல்லை மஹாராஜ்! இம்முறை, மொகலாயர்களோடு சமாதானஞ் செய்துகொள்ளுவது உசிதம்!

ராணா :—இல்லை. அது ஒருக்காலும் ஆகக்கூடிய காரியமில்லை. நான் சமாதானஞ் செய்துகொள்ளவேண்டுமென்று சொன்னபோது நீங்கள் யாரும் அதை விரும்பவில்லை. அப்போது சுயம் மொகலாயர்களே சமாதானத்துக்கு வந்தார்கள்; இப்போது அந்தச் சந்தர்ப்பம் போய்விட்டது. நாமாகப் போய் மொகலாயர்களைப் பிரார்த்தித்து அவர்களோடு சமாதானஞ் செய்வது, மீவார மாதாவுக்கு மாறுத வசையாகும். ரஜபுத்திர பராக்கிரமத்துக்கு லட்சணமுமல்ல.

கேசவன் :—ஆனால்—

ராணா :—சமாதானம் தேவையில்லை; அந்தப் பேச்சை இனியெடுக்கவேண்டாம். சண்டை செய்து சாவதைத் தவிர வேறு உபாயமில்லை. இல்லையா கோவிந்த சிம்மஜீ!

கோவி :—ஆம் மஹாராஜ்! நாம் பிராணன் கொடுப்போம்; மானங்கொடோம்!

ராணா :— சரியாய்ச் சொன்னீர் கோவிந்த சிம்மஜீ! உயிரையிழந்தாலும் மீவாரம் மானத்தை யிழக்காது.

ரகுவீர் :—மஹாராஜ் !

ராணு :—இல்லை. எதையுங் கேட்க எனக்கு இஷ்டமில்லை. யுத்தம்—யுத்தந்தான் செய்யவேண்டும். சேனை தயாரியுங்கள் ! மீவாரத்தின் ரத்த துவஜத்தை உயர்த்துங்கள் ! ரண பேரி முழக்குங்கள் ! போங்கள் ! எல்லோரும் போருக்குத் தயாரா குங்கள் !

[ராணு அமர சிம்மனைத் தவிர மற்றெல்லோரும் போகின்றனர்.]

ராணு :—மீவாரமே ! சுதந்தர மீவாரமே ! மீவாரத் தாயே ! இன்றைக்கு நீ எவ்வளவு சௌந்தரியத்தோடு விளங்குகின்றனை ! இதற்கு முன் உன்னை நான் இவ்வளவு சௌந்தரியவதியாகப் பார்த்ததில்லை. வஸ்திரம் கிழிந்து கந்தையாயிருக்கிறது; கூந்தல் அவிழ்ந்து சிதைந்து கிடக்கிறது; தூய மேனி முழுமையும் தூசியும் துகளுமாயிருக்கிறது. இந்தக் கோலத்தில் உன்னைக் கொலைக்களத்துக்கு இழுத்துக்கொண்டு போகிறார்கள். இந்நிலைமையில், இவ்வளவு அழகு உனக்கு எங்கிருந்து வந்தது ? இப்பொழுதுதான் நான் உன்னை நன்றாயறிந்தேன். இவ்வளவு காலமாய் உன்னைச் சூழ்ந்திருந்த சௌபாக்கிய சூரியன் அஸ்தமித்துவிட்டான். அந்தச் சுதந்திர ஜோதி என் கண்ணைக் கப்பிக்கொண்டிருந்தது. ஆனால் அச்சுதந்திரம், கொஞ்சங் கொஞ்சமாய் என்னைவிட்டகல அகல, அதே ஆகாசத்திலிருந்து உனது அபூர்வ, அற்

புத பிரகாசம், ஒளி வீசுகிறது. ஆஹா! எவ்வளவு ஜோதி! எத்தகைய நீலிமா! எப்பேர்ப்பட்ட மகிமை!

(திரை விழுகிறது.)

(காட்சி முடிவு.)

---

## ஆறுங் காட்சி.

---

இடம் :—மஹாபத்கானின் கூடாரம்.

காலம் :—காலை.

[மஹாபத்கானும், கஜ சிம்மனும் நின்று பேசிக்கொண் டிருக்கின்றனர்,]

கஜ :—சைன்யத்தை யழைத்துக்கொண்டு, சுயம் ராணுவே வந்தாரோ சண்டைக்கு?

மஹா :—ஆம் மஹாராஜ்! ஆனல், ரணகளத்தைவிட்டு அவர் மட்டுந்தான் திரும்பினர். அவரோடு வந்த ஐயாயிரம் சிப்பாயிகளில் நாலாயிரம் பேர் மைதானச் சண்டையில் மரித்துவிட்டார்கள்.

கஜ :—கேவலம் ஐயாயிரம் பேரைக் கொண்டுவந்தா ஒரு லட்சம் சேன சமுத்திரத்துக்கு முன்னல் நிறுத்தினர்! ஆஹா எவ்வளவு தைர்யம்? என்ன பராக்கிரமம்?

மஹா :—ஆம். தைர்யந்தான். ஆனல் இன்றைக்கு எனக்கு மஹா ஆநந்தமாயிருக்கிறது. அதை நினைக்கையில் அதி அற்புதமாயிருக்கிறது,

கஜ :—ஆம் ஜனப்! ஆநந்தமடையக்கூடிய சமாச்சாரந் தானே இது!

மஹ :—எனக்கேற்பட்டிருக்கிற ஆநந்தத்தை, உங்களால் அர்த்தஞ் செய்துகொள்ளவே முடியாது ராஜா சாஹிப்!

கஜ :—அப்படியென்ன ஆநந்தம் அது?

மஹ :—முஸல்மானுகிவிட்டாலும், நானும் அதே ரஜபுத்திரன்தானே—ராணு அமர சிம்மருடைய சகோதரன் தானே என்று நினைக்கும்போது, ஒருபக்கம் வெட்கமும், ஒரு பக்கம் கர்வமும் உண்டாகிறது. கேவலம் ஐயாயிரம் பேரை அழைத்துக் கொண்டு ஒரு லட்சம் சைன்யக் கடலுக்கு எதிரே அவர் வந்தபோது சண்டை போடுவோம், ஜெயிப்போம் என்கிற எண்ணத்தோடு வந்தாரென்று எனக்குத் தோன்றவில்லை. உயிரைப் பரவாயில்லை யென்று துரும்பாக மதித்து, மிருத்தியுவின் வாய்க்குள்ளே வந்தார்! அப்பேர்ப்பட்ட தேச பக்தியை—அவ்வளவு பலிதியாகத்தை—அத்தகைய பராக்கிரமத்தை—சிங்கத் துணிச்சலை—வீராண்மையை, ரஜபுத்திரர்களிடத்திலே தான் காண முடியும். நானும் அதே ரஜபுத்திரன்தானே.

கஜ :—சந்தேகமில்லாமல் சேனாபதி சாஹிப்! சந்தேகமில்லாமல், தாங்கள் ரஜபுத்திரர்தான்.

மஹ :—நீங்களும் ரஜபுத்திரர்தானே? உங்களுக்கும் அதே கர்வம், அதே உன்மத்தம் இருக்கத்தானே வேண்டும்? ஆனால் தாங்கள் அடிமைப் படுகுழியில் விழுந்துவிட்டீர்கள், அதனால் உமது தலை தாழ்ந்துவிட்டது. தேசத் துரோகத்திலே நின்று

அவமானமான மகுடம் பூண்டீர். என்னைத் தள்ளுங்கள்! எனக்காக வருந்துவதற்கு இடமேயில்லை. ஏனெனில் ஒரு காலத்தில் நான் ரஜபுத்திரனாயிருந்தேன்; அந்த உறவு இப்போது யாரோ எவரோ என்றாகிவிட்டது.

கஜ :—யுத்தத்தில் ராணு சாகவுமில்லை; கைதியாகவுமில்லையோ?

மஹ :—இல்லை. நான், என் சைனியத்துக்கு அவரைக் கொல்லவோ கைதி செய்யவோ கூடாதென்று கட்டளையிட்டிருந்தேன். ஏனெனில், அத்தகைய சத்துருதான், உலகத்து வீரத்துக்கே வித்தாயிருக்கிறார். அவர் கொல்லப்பட்டால் வீரம் கொல்லப்பட்டுவிடும். வீர தெய்வமாய் அவர் விளங்கட்டும்.

கஜ :—நல்லது நான் போய்வருகிறேன்.

மஹ :—போகலாம்.

[கஜ சிம்மன் போகிறான்.]

மஹ :—அதோ ஒரு கிராமம் தீப்பிடித்தெரிகிறது; கிராமவாசிகள் குய்யோ முறையோ வென்று கத்துகிற சத்தம் வருகிறது. ஹிந்துக்களே! நீங்களும் உங்கள் மமதையும் மண்ணாய்ப் போகச் செத்து மடியுங்கள்! இன்றைக்கு நான் உங்கள் ஆணி வேரை ஆட்டி அசைத்துவிட்டேன். எங்கே உங்கள் கர்வம்! இறுமாப்பு! மமதை!

[நாலு சிப்பாயிகளும் கல்யாணியும் வருகின்றனர்.]

மஹ :—இது யார்?

முதற் சிப்பாயி :—எஜமானே! யாரோ தெரியாது. நாங்கள் கூட்டி வரவில்லை; தானாகவே எங்கள் பின்னால் வந்தாள்.

மஹ :—(கல்யாணியை நோக்கி) நீ யார்?

கல்யா :—யான் யாராயிருந்தால் உங்களுக்கென்ன? என்னை யின்னாரென்று தெரிந்துகொள்ளுவதால் உங்களுக்கொன்றும் லாபமில்லை.

மஹ :—பின் எதற்காக இங்கு வந்தாய்?

கல்யா :—உங்களிடம் ஒரு நியாயம் பெறுவதற்காகவந்தேன்.

மஹ :—என்ன நியாயம்? எதற்காக?

கல்யா :—உங்கள் சிப்பாயிகள் ஒரு குற்றமுஞ் செய்யாத என் அண்ணனைக் கொன்றுவிட்டார்கள்.

மஹ :—உன் அண்ணனையா? ஏன்? எதற்காகக் கொன்றார்கள்? சிப்பாயிகளே!

முதல் சிப்பாயி :—இல்லை எஜமானே! நாங்கள் கிராமவாசிகளை வெட்டி வீழ்த்திக்கொண்டிருந்தோம். அப்போது, இவள் அண்ணன் வந்து, அவர்களுக்குச் சகாயஞ் செய்வதற்காக எங்களோடு சண்டை செய்தான். சண்டையில் இறந்தான்.

மஹ :—(கல்யாணியிடம்) அது வாஸ்தவமா?

கல்யா :—ஆம். வாஸ்தவந்தான். உங்கள் சிப்பாயிகள் நிரபராதிகளான கிராமவாசிகளைக் கொன்று குவித்தார்கள். அவர்களை ரக்ஷிக்க என் அண்ணன் போனார்; அவரையும் கொன்றுவிட்டனர்.

மஹ :—அப்படியானால் அவர் யுத்தத்திலல்லவா இறந்தார்?

கல்யா :—அப்படியே வைத்துக்கொள்ளுங்கள்! அவரை, இவர்கள் சண்டையிலேதான் கொன்றார்கள்.

மஹ :—அப்படியானால் இவர்கள்மீது என்ன குற்றமிருக்கிறது தேவி? நான்தான் இவர்களுக்குக் கிராமவாசிகளைக் கொல்லும்படி கட்டளையிட்டிருந்தேன். சிப்பாயிகளே! நீங்கள் செல்லலாம்!

[சிப்பாயிகள் செல்கின்றனர்.]

கல்யா :—நிரபராதிகளான கிராமவாசிகளை நீங்களா கொல்லும்படி உத்தரவிட்டீர்கள்?

மஹ :—ஆம்; நான்தான் உத்தரவிட்டேன்.

கல்யா :—கிராமங்களைச் சுட்டுக் கொளுத்துவதற்குமா?

மஹ :—ஆம்.

கல்யா :—என்னால் நம்ப முடியவில்லை; நீங்கள் இவ்வளவு நிஷ்டூரனாயிருக்க முடியாது.

மஹ :—என் விஷயத்தில் உனக்கு இவ்வளவு உயர்வான எண்ணம் ஏன் ஏற்பட்டது?

கல்யா :—என் நாதன், இவ்வளவு நிஷ்டூரனாயிருக்க முடியாது.

மஹ :—உன் நாதனா?

கல்யா :—ஆம்; நன்றாய்ப் பாருங்கள்! என்னை அடையாளந் தெரிகிறதா இல்லையா? நான்தான் ஹிந்து ஸ்திரி கல்யாணி!

மஹ:—கல்யாணியா? கல்யாணி! உன் அண்ணன் அஜயசிம்மனா இறந்தவன்?

கல்யா :—ஆம். என் பிராண சகோதரன் அஜய சிம்மன்

தான் அநியாயமாய்க் கொல்லப்பட்டவர். என்றைக்கு நான் என் சுவாமி என்று தியானித்துக் கொண்டு, ஒருவன்மீதிருந்த காதலை, என் வாழ்க்கையின் துருவதாரகை (நட்சத்திரம்) யாகச் செய்துகொண்டு, எனது சின்னஞ்சிறிய தோணியை, இந்த அநந்த சம்சார சாகரத்தில் மிதக்க விட்டேனே, அன்றைக்கு என் அண்ணன் அஜய சிம்மனும் ஆநந்த பூர்வமாய்ச் சுய இச்சையோடு, என்னை ரக்ஷிப்பதற்காக இந்தத் துக்கத்தில் சகயாத்திரிகனாக என்னோடு வந்தார். வழியில் உம்முடைய சில துஷ்டச் சிப்பாயிகளிடமிருந்து என்னை மீட்கிறபோது, அவர்களால் அநியாயமாய்க் காயப்படுத்தப்பட்டார். அநேக நாட்கள் அவரை ஒரு இடிந்த குடிசையிற் போட்டுச் சிகிச்சை செய்தேன்—கிராமங்களிற் பிச்சையெடுத்து ஊட்டினேன். அப்பேர்ப்பட்ட அருமை அண்ணனைக் கொன்றுவிட்டீர் நீர்! நான் மட்டும் என் உயிரோடிருக்கிறேன்?

மஹ:—இல்லை; இல்லை கல்யாணி! என்னை மன்னிக்கமாட்டாயா?

கல்யா:—இவ்வளவு கிராம ஜனங்களைக் கொல்லும்படி நீர் தானே கட்டளையிட்டீர்?

மஹ:—ஆம்! நான்தான்—நான் ரஜபுத்திர ஜாதியை நாசஞ் செய்யும்படி கட்டளையிட்டேன்.

கல்யா:—ஹா பகவானே!—இந்த காதகனைத் தியானித்துக்கொண்டுதானா நான் சன்னியாசினியா

னேன்? எனக்கொரு மரணம் வரப்படாதா? என் தலையில் இடிவிழக்கூடாதா? ஒரே நாள் ஒரே சமயத்தில் சகோதரனையும் ஸ்வாமியையும் இழந்து இப்படி உட்கார்ந்திருக்கிறேனே! என்னைப்போல் அபாக்கினி யாரிருக்கிருள்? (முகத்தைக் கையால் மூடிக்கொள்ளுகிருள்.)

மஹ:—ஆனால் நான் ஏன் அப்படிக் கட்டளையிட்டேனென்று உனக்குத் தெரியுமா?

கல்யா:—தெரியாது; தெரியவேண்டுமென்கிற அவஸ்யமுமில்லை. என் மோஹம் பங்கமடைந்துவிட்டது! இவ்வளவு காலமாய்நான் ஒரு பாவியை-உம்மைப் பூஜித்துக்கொண் டிருந்தேன். ஆனால் இன்று முதல் பரம பாதகனுய்ச்—சத்துருவாய்ப் பாவிக்கிறேன். மொகலாயர்களைவிட அதிகமான வெறுப்பு உம்மீது எனக்கு ஏற்பட்டிருக்கிறது. மொகலாயர்கள் யாரோ? நாமாரோ? அவர்கள் தர்மம், காபிர்களைக் கொல்லும்படி போதிக்கிறது. ஆனால் நீரோ இந்த தேசத்தின் சந்தானமாயிருந்தும், உம்முடைய தசை நாடிகளில் ஓடுவது ரஜபுத்திர ரத்தமாயிருந்தும், கேவலம் செல்வத்தின் லோபத்தாலும், குரோதத்தின் கோபத்தாலும் சொந்த ஜாதியைத்தானே நாசஞ் செய்யத் துணிந்துவிட்டீர்! இனி!...நான் என்ன சொல்லட்டும்! நீர் மொகலாயர்களையும் ஒருபடி மிஞ்சிவிட்டீர்! அவர்கள், கேவலம் மீவாரத்தை

ஜெயிக்க மாத்திரம் விரும்பினார்கள்—ஏழை யெளியவர்களின் வீடு வாசல்களைக் கொளுத்தவும், நிரபராதிகளைக் கொல்லவும் அவர்கள் விரும்பவில்லை. ஆனால் நீரோ அவர்கள் விட்ட குறை தொட்ட குறைகளை யெல்லாம் பூர்த்தி செய்து விட்டீர். அவர்கள் தர்மத்தில் சிந்திச் சிதறிய சில துகள்களைத்தின்று நீர் இந்தப் படுபாவிச் சைனிகர்களை—இந்த மாமிச பக்ஷணிகளான நர நாய்களைப், பாவம் கிராம ஜனங்கள் மீது ஏவினீர்! மீவாரத்தை முழு மயானமாக்கிவிட்டீர்! ஒரு குற்றத்தையுஞ் செய்யாத ஜனங்கள், குய்யோ முறையோவென்று போடுகிற கூரல், ஆகாச முழுதும் அதிர்கிறது! மொகலாயர்கூட உம்மை முந்திவிடவில்லையே? மொகலாயர்களும் இந்த நரவதத்தையும் நாசகாரியத்தையும் செய்யத் துணியவில்லையே? அட தெய்வமே! இந்தகைய தேசத் துரோஹிகளுக்கு உன்னிடம் ஒரு தண்டனையில்லாமலா போய்விட்டது? ஆகாசத்தில் இடியும் அற்றுவிட்டதா? பூமிதேவி! நீயும் இப்பாவ உருவைச் சுமக்கின்றாயா?

மஹ:—கல்யாணி! உனக்காக—உன் காரணமாகத்தானே இந்த யுத்தத்தில் நான் இறங்கினேன்!

கல்யா:—எனக்காகவா? என் காரணமாகவா? அட பாவமே! இது முழுப் பொய்! அடாத பழி!

மஹ:—அல்ல; பொய்யல்ல! உண்மையாகவே, என்றைக்கு உன் பிதா, மொகலாயர்கள்மீதிருந்த குரோதத்தால், உன்னை வீட்டை விட்டுத் துரத்

றீரோ, அன்றைக்கே—அதே சமயந்தான் மீவாரத்துக்கு விரோதமாய் நான் வாளெடுத்தேன்.

கல்யா :—சரி; அப்படியே வைத்துக்கொண்டாலும், தர்மத்தின் எந்தச் சித்தாந்தப்படி, ஒரு மனுஷன் செய்த குற்றத்திற்காக, ஒரு ஜாதி முழுமையுமே நாசஞ் செய்யத் துணிந்தீர்?

மஹ :—இது உனக்கு ஆச்சரியமாயிருக்கிறதா? ஒரு ராவணன் செய்த பாப காரணமாகத்தானே அகில இலங்கையும் அழிந்தது? மேலும் மொகல் துவேஷம், உன் தந்தையிடம் மாத்திரமா இருக்கிறது? சமஸ்த ஹிந்துக்களிடமிருந்த வெறுப்பு உன் தந்தையின் மூலமாக வெளிப்பட்டது. நான் அதற்குப் பழிவாங்கினேன்.

கல்யா :—பழிவாங்கினீரா! இந்தப் பழிவாங்கும் வேலையை, ஜாதி முஸல்மான்கள் செய்திருக்கலாம். நீர்—நீர் முஸல்மானாகிறபோது, ஹிந்துக்களின் முஸல்மான் விரோதத்தை யறிந்துதான் முஸ்லீமானீர். ஆகையால் இவ்வக்கிரமத்தை முஸ்லீம் என்கிற முறையில் நீர் செய்யவில்லை—மஹபத்கான் என்கிற முறையிலேதான் செய்தீர்.

மஹ :—(சிறிது சிந்தனை செய்துவிட்டு) ஓஹோ! அப்படியும் இருக்கலாமோ?

கல்யா :—இல்லாமலென்ன? தனிப்பட்ட துவேஷத்தின் காரணமாகத்தான் நீர்மீவாரத்தைச்சர்வ நாசஞ் செய்தீர்! இதுதானா யுத்த தர்மம்? இதுதானா

உம்முடைய சூரத்தனம்? இதுவா உமது பராக்கிரமம்? இது மனுஷத்தனமா? ஹா பகவானே! என்ன செய்துவிட்டாய்? இத்தனை தினங்களாக நான் காற்றிற் கட்டிக்கொண்டிருந்த கனவுக் கோட்டையை, இன்றைக்கு நீர் இடித்துத் தகர்த்துவிட்டீரே!

மறை:—கல்யாணி—

கல்யா:—போதும் போதும், நிறுத்துங்கள்! ஆசாபங்கமடைந்துவிட்டேன்; சர்வ நாசமாகிவிட்டது. ஜீவியத்திலும் மரணத்திலும், இகத்திலும் பரத்திலும் நீங்களே என் சுவாமி யென்றும், நானே உங்கள் ஸ்திரீ யென்றும் எண்ணிக்கொண்டு, எங்களை யாரால் பிரிக்க முடியும் என்று பக்தியின் சிகரத்திலிருந்துகொண்டு, கர்வத்தோடும் மமதையோடும் கூறினேன். ஆனால் இப்போதோ, உமக்கும் எனக்கும் இடையில் ஒரு பெரிய ஆழிய சமுத்திரம் அகன்று கிடப்பதைப் பார்க்கிறேன். உமக்கும் எனக்கும் மத்தியில் என் அருமை அண்ணாவின் மிருத்து சரீரம் கிடக்கிறது; சுதேசத்தின் ரத்த ஆறு ஓடுகிறது. நிஷ்டூர்! தேசத்துரோஹி! ரத்த வெறியா! கொலைகாரா! ஹா! பிரமாவே! இத்தகைய நீச நாசகால, நரபிசாசைச் சிருஷ்டித்து, சொந்தச் சகோதரர்களைத்தானே கொலை செய்யும்படி கற்பித்து, ஒருச்சாண் வயிற்றுக்காகப் பிறரிடம் பிச்சையெடுக்கவைத்து, அதற்கு மேலும் அட்டகாசஞ் செய்யச் சொன்ன உனது சிருஷ்டித்திறமையே திறமை! (கல்யாணி போகிறாள்.)

(காட்சி முடிவு)

நாலாவது அங்கம் முடிவுற்றது.

# ஐந்தாவது அங்கம்.

## முதற் காட்சி.

இடம் :—உதயபுரி அரண்மனை.
காலம் :—இரவு.

[மானஸி ஏகாந்தமாய்ப் பாடிக்கொண் டிருக்கிறாள்.]

"எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே—இதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே—இதை
வந்தனை கூறி மனதி லிருத்தி யென்
வாயுற வாழ்த்தேனோ!

"இன்னுயிர் தந்தெமை யீன்று வளர்த்தரு
ளீந்தது மிந்நாடே—எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்தது மிந்நாடே—அவர்
கன்னிய ராகி நிலவினி லாடிக்
களித்தது மிந்நாடே—தங்கள்
பொன்னுட லின்புற நீர்விளை யாடி இல்
போந்தது மிந்நாடே!"

[ராணா வருகிறார்.]

மான :—என் அப்பா? யுத்தகளத்திலிருந்தா வருகிறீர்கள்?

ராஜு:— ஆம் மானஸி!

மான:— ஏன்? என்னாயிற்று யுத்தம்?

ராஜு:—பேசாதே! பேசாதே மானஸி! நான் ஒரு பெரிய —பெரிய அற்புத, அதுல, (ஒப்பற்ற) ஆச்சர்யக் காட்சியைக் கண்டுகொண் டிருக்கிறேன்.

மான:—என்ன? காட்சியா? யுத்த சம்பந்தமானதா?

ராஜு:—இல்லை மானஸி! யுத்தக் காட்சியில்லை! யுத்த மெங்கே நடந்தது? ஒரே அக்கினிப் பிரளயம்! அதில் அகில சைன்யமும் அப்படியே வெந்து நீந்துவிட்டது!

மான:— எப்படி?

ராஜு:—எப்படி யென்று எனக்கே தெரியவில்லை. ஆனால் இது மாத்திரம் நிச்சயம். அதாவது, அங்கு வந்து அழித்தல் வேலையைச் செய்தது, பூலோகத்தைச் சேர்ந்த பதார்த்தமல்ல. பிரபஞ்ச முடிவினுண்டாகிற பிரளயம் போலிருந்தது. பயங்கரமான பூகம்பமுமல்ல; பீஷணமான (கொடுமையான) இடியுமல்ல. ஏதோ ஒன்று ஏற்பட்டது. க்ஷணமாத்திரம் நான் கண்களை மூடிக்கொண்டேன். சரீரத்திலிருந்து ஹிருதயத்தின் ஆழம் வரை ஒரு மின்னல் ஓடிப்பரவியது; தலை சுற்றிற்று; அந்தகாரமாயிருந்தது. கண்ணைத் திறந்தேன்; தூங்கி விழித்தது போலிருந்தது. ரணக்ஷேத்திரத்தில் நான் மட்டும் தனிமையாய் நிற்கக் கண்டேன். உயிர்ப் பிராணி ஒன்றுகூட இல்லை. நாலா பக்கங்களும் பிணக்காடாயிருந்தது. ஓ! எத்தகைய காட்சி!

மான :—பிதாஜீ! உங்களுக்கென்ன சித்த பிர்மை யேற்பட்டுவிட்டதா? உட்காருங்களப்பா! உங்கள் கவலையைப் போக்குகிறேன்.

ராணு,—அந்த மசானத்தில் நான் தன்னந் தனியாய்ச் சுற்றினேன்; ஒருவரும் என்னோடு போருக்கு வரவில்லை.

மான :—அப்படியானல் இந்த யுத்தத்தில் நீங்கள் உங்கள் தோல்வியை ஒப்புக்கொண்டுவிட்டீர்களா என்ன?

ராணு :—ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அதனலொன்றும் ஆகிவிடாது. யுத்தமென்பது தர்க்கமல்ல, ஒப்புக்கொள்ளாவிட்டாலும் ஜெயித்துவிட்டோமென்று சொல்ல—ஸ்தூலம், கடின பிரத்தியக்ஷ சத்தியம்; நிச்சயமான உண்மை. ஆனல் அவர்கள் ஏன் என்னைக் கொல்லவில்லை? நான் அந்த ருத்திராங்காரமான மயானத்திலே, ஏகாந்தமாய் நின்றுகொண்டு, 'மஹபத்கான், மஹபத்கான்' 'கஜ சிம்ம, கஜ சிம்ம' என்று கத்தினேன்; கதறினேன்; சுற்றினேன்—ஒருவரும் என்னிடம் வரவில்லை. நீயாவது சொல்ல முடியுமா மானஸி: அவர்கள் ஏன் என்னிடம் வரவில்லையென்று?

மான :—அப்புறம்?

ராணு :—அப்புறம், இன்னொரு சமாச்சாரமும் எனக்கு விளங்கவில்லை. அதாவது, மஹபத்கான் இந்த யுத்தத்தை ஜெயித்த பின்னும், உதயபுரிக் கோட்டைக்குள், அவன் ஏன் பிரவேசிக்காதிருக்கி

றான்? இங்கு வந்து அவன் அதிகாரஞ் செய்ய வேண்டியது ஒன்றுதானே பாக்கியிருக்கிறது?

மான :—பிதாஜீ! தோற்றது தோற்றுவிட்டது. துக்கப் பட்டாவதென்ன? யுத்தத்தில் ஏதாவதொரு கட்சி தோற்கத்தானே வேண்டும்!

ராணு :—வாஸ்தவம் மானஸி! ஏதாவதொரு கட்சி யுத்தத்தில் தோற்கத்தான் தோற்கிறது. பின்னர் துக்கமேன்? இல்லை மானஸி! எனக்குத் துக்கமில்லை. ஆனால் அவர்கள் ஏன் என் முன் வரவில்லை? என்னைக் கொல்லவில்லை?

[ராணி வருகிறாள்.]

ராணு :—(ராணியை நோக்கி) ஒரு பெரிய விவகாரம் ராணி! அதில் நீ யேதாவது சொல்ல முடியுமா?

ராணி :—என்ன விவகாரம்?

ராணு :—என்னையவர்கள் ஏன் கொல்லவில்லை?

[ராணி மானஸியைப் பார்க்கிறாள்.]

ராணு :—அந்த கம்பீர நிஷ்டையில்—அந்த யுத்த க்ஷேத்திரத்தில்—அந்தப் பிணக்காட்டில், நான் மட்டும் தனிமையாய் நின்றேன். அந்தக் காட்சியை, ராணி! உன்னால் கற்பனைகூட செய்ய முடியாது. உயர ஆகாசத்தில் அநந்த—நிச்சலமான தாரா கணம்; கீழே பூமியில் அகணிதமான (கணக்கற்ற) பிணக்காடு; அவையிரண்டுக்கும் மத்தியில் ஒன்றுமில்லை—சுத்த சூன்யமான கோர அந்தகாரம். எனக்கும் இந்த உலகத்துக்குமிருந்த சம்பந்தம் அற்றுவிட்டதுபோ லிருந்தது. நானும்

இறந்றுவிட்டது போலும், உயிருள்ள-நடைபிண மாயிருப்பது போலும் தோன்றிற்று. வாளையு ருவி வீசினேன்; அது, கேவலம் அந்த அர்த்த ராத்திரியின் குளிர்ந்த காற்றைத்தான் வெட் டிற்று. "மஹபத்" "மஹபத்" என்று கத்தி னேன்; அச்சப்தம், நாலா பக்கமும் ஓடி அதிர் ந்து வியர்த்தமாகத்தேடி, வெறுங் காற்றாகவே- எதிரொலியாகவே திரும்பி வந்தது. அப்புறம் (தொண்டை கம்முகிறது) ஒரு தரம் யுத்தக்ஷேத் திர முழுதும் கண்கொண்டவரை பார்வையைச் செலுத்திப்பார்த்தேன்; நக்ஷத்திரப் பிரகாசத் தில், எனது மாதுருதேசம்-எனது சுவர்ண பூமி, அபார பூகம்பத்தால் நஷ்ட பிரஷ்டமாகிக் கிடந்தது. அதன் பின், அந்த மிருத்து பூமியில் இறந்த சைனிகர்களின் வீர முக்திபெற்ற ஆத் மாக்கள், வீர சுவர்க்கத்தை நோக்கி யெழுந்து, திறந்த காற்றை பாரமுடையதாகப் பண்ணிவிட் டன. காற்றுக் கனமாயிருந்தது; மூச்சு விடுவ தும் கடினமாயிருந்தது. மஹா சிரமத்தோடு ஒரு பெரு மூச்சுவிட்டேன். அதுவும் ஆகாசத் திலே கிளம்ப முடியாமல் கீழேதானே விழுந்து விட்டது. அந்தகாரம் அவ்வளவில்லாவிட்டால் அதைத்தேடி யெடுத்துவிடலாம் போலிருந்தது!

ராணி :—ஆனது ஆகிவிட்டது; கவலைப்பட்டாவதென்ன? நான்தான் முன்னமேயே சொன்னேனே!

ராஜு :—ஆம். அது வாஸ்தவமாகவே முடிந்தது. மீவாரம்

3998

இறந்துவிட்டது; அதை நான் தோளிலே தூக்கி வந்திருக்கிறேன், பார்க்கிறாயா?

(திரை விழுகிறது.)

(காட்சி முடிவு.)

---

## இரண்டாம் காட்சி.

---

**இடம் :**—மீவார அரண்மனை: அந்தப்புரத்துக் குள்ளே ஒரு சிறு பாதை.

**காலம் :**—இரவு.

[இரண்டு வேலைக்காரிகள் சம்பாஷித்துக் கொண்டு வருகின்றனர்.]

**1-ம் வேலைக்காரி :**—பாவம், கோவிந்த சிம்மர் கிழவர்; ஒரு பிள்ளைதானிருந்தது; அதுவும் போய்விட்டது.

**2-ம் வேலைக்காரி :**—அஜய சிம்மன்தான் இறந்துவிட்டாரே, அந்தச் சரீரத்தைச், சாரணி ராணி, ஏன் கோவிந்த சிம்மரிடம் கொண்டுவந்தார்?

**1-ம் வேலைக்காரி :**—அதென்னவோ அம்மா! அவர் செய்கிற காரியங்களெல்லாம் அப்படித்தானிருக்கின்றன! அவருக்கு வேறு வேலையில்லையா என்ன? அங்கே ரொம்பப்பேர் கூடியிருக்கிறார்களோ?

**2-ம் வேலைக்காரி :**—ஆம். வீடு முழுதும் ஒரே கூட்டம். கோவிந்த சிம்மஜீ வீட்டிலில்லை. சாரணி ராணியின் மகன் கூப்பிடப் போயிருக்கிறான். பிணத்தின் பக்கத்தில் ராணி மாத்திரம் தனிமையாயி

ருக்கிறார். மற்றவர்களெல்லாம் கொஞ்சம் எட்டியிருக்கிறார்கள்.

1-ம் வேலைக்காரி :— இருட்டிலா?

2-ம் வேலைக்காரி:—இருட்டாய்த்தா னிருந்தது. தூரத்தில் ஒரு மாடத்தில் சிறு தீபம் மினுக்கு மினுக்கென் றெரிந்துகொண்டிருந்தது. அதோ அது யார்?

1-ம் வேலைக்காரி :—எது? எங்கே?

2-ம் வேலைக்காரி :— தெரியவில்லையா? அதோ!

1-ம் வேலைக்காரி :— ராஜகுமாரி! ஏனிப்படி அலங்கோலமாயிருக்கிறார்? கண்கள் நிலைக்குத்தியிருக்கின்றன; கூந்தலவிழ்ந்து பூமியில் புரள்கிறது; இரண்டு கையிலும் மண்ணை வாரி வைத்திருக்கிறார்.

2-ம் வேலைக்காரி :— இங்கேதான் வருகிறாப்போ லிருக்கிறது. வா நாம் போவோம்!

[இரண்டு வேலைக்காரிகளும் ஒருபுறமாகப் போகின்றனர்; மானஸி வேறு வழியாக வருகிறாள்.]

மான :— போய்விட்டான்; அஜயன் திரும்பி வராதவாறு போய்விட்டான். என்னைச் சந்திக்கவுமில்லை; என்னோடு ஒரு வார்த்தை பேசவுமில்லை; போய்விட்டான். ஆனால் அது வாஸ்தவமா? ஓ! தலை சுழல்கிறது! கண்ணுக்கு முன்னே நீல நிறமான பிம்பமொன்று பூமியிலிருந்து கிளம்பி ஆகாசத்திலே போய் வெளியோடு வெளியாய்க் கலந்துவிட்டது. சரீரத்திலிருந்து தாள ஜ்வாலை (முத்துப்போன்ற வியர்வை) கிளம்புகிறது. தலைக்கு

மேல் ஆகாயம் அகன்றுவிட்டது; பாதத்தின் கீழ் பூமி விலகிவிட்டது. ஆனால் நான் எங்கிருக்கிறேன்? ஹாய்! (சிறிது நேரம் சும்மா இருந்துவிட்டு) நான் பெரிய நிஷ்டூரி! வாய் திறந்து ஒரு வார்த்தை சொல்லியிருக்கப்படாதா? அன்றைக்கு என் அஜயன், கணமாத்திரக் கருணைக்காகப் பிச்சை கேட்டுக்கொண்டு, தீன நேத்திரதாரியாய் என்னை நோக்கியபோது, நான் பாவி உண்மையைச் சொல்லாதிருந்துவிட்டேன்! அதனாலேதான் அவன் கோபித்துக்கொண்டு போய்விட்டான். என் மீது அவனுக்கிருந்த அபிமானத்தைச் சூரணமாக்கிக், காலடியில் போட்டு மிதித்துவிட்டு, அஜயன் போய்விட்டான். இன்றைக்கு நான் என் ஹிருதயத்தைத் திறந்து காட்ட எவ்வளவு ஆசைப்படுகிறேன்? ஆனால் ஐயோ! அதற்கு இது சமயமல்லவே! ஆஹா அஜய! போய்விட்டாயே! இனியொருக்கால்... அடுத்த ஜீவியத்தில்...—

[மானஸி போகிறாள்.]

(திரை விழுகிறது.)

(காட்சி முடிவு.)

---

## மூன்றாங் காட்சி.

---

இடம் :— கோவிந்த சிம்மன் வீடு.

காலம் :— இரவு.

[கோவிந்த சிம்மன் வீட்டின் முன்னறையில், அஜய சிம்மனுடைய பிரேதம் கிடக்கிறது. பக்கத்தில் சத்தியவதியும், பிரேதம் தூக்குகிறவர்கள் நாலு பேரும் நிற்கிறார்கள். துக்காதிக்கனாய்க் கோவிந்த சிம்மன் பிரேதத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறான்.]

**கோவி :**—அஜய சிம்மனுடைய மிருத்து சரீரம் எங்கே கிடைத்தது சத்தியவதி?

**சத்திய :**—ரஸ்தாவின் ஓரத்தில்.

**கோவி :**—எவ்வாறிறந்தானென்று உனக்குத் தெரியுமா?

**சத்திய :**—மஹாபத்கானுடைய சிப்பாயிகள், நிரபராதிகளான கிராமவாசிகளை, வெட்டி வீழ்த்திக்கொண்டிருந்தார்களாம். அவர்களை ரக்ஷிப்பதற்காக, அஜய சிம்மன் அந்தச் சிப்பாயிகளோடு யுத்தஞ் செய்தானும். அதிலே அனேகர்களை வெட்டி வீழ்த்தினனும். தூரத்திலிருந்து குண்டு வந்து பாய்ந்து இறந்தானும். அப்புறம் கல்யாணியை அந்த துஷ்டச் சிப்பாயிகள் பிடித்துக்கொண்டு போய்விட்டார்களாம்.

**கோவி :**—அட மகனே! அஜய சிம்மா! மன்னிப்புக் கேட்கக்கூட அவகாசம் அளிக்காமற் போய்விட்டாயே! குரோதத்தால் என் கண்கள் குருடாகி விட்டிருந்தன. அதனாலேதான் நீ வீட்டைவிட்டுப் போய்விட்டாய். உன்னை நான் என்ன சொன்னேன் வீட்டைவிட்டுப் போகும்படி


சொல்லவில்லையே! ஹா! நீதான் போனாயே, உன்னை நான் பாவி கூப்பிட்டிருக்கக்கூடாதா? ஐயோ அஜயா! பிராணனைவிடப் பிரிய புத்திர! மன்னிப்புக் கேட்கவாவது அவகாசம் அளித்திருக்கக் கூடாதா? எவ்வளவு அபிமானம்! எவ்வளவு கோபம்!—நான் உனது கிழத்தந்தையல்லவோ?—அஜய! அருமை அஜய!

**சத்திய**:—ஏன் கோவிந்த சிம்மஜி? எதற்காக இந்தத் துக்கமும் துயரமும்? தீனர்களை ரக்ஷிப்பதற்காகவல்லவோ அஜய சிம்மன் இறந்தான்!

**கோவி**:—அப்படியா சத்தியவதி? தீனர்களை ரக்ஷிப்பதற்காகவா அஜய சிம்மன் ஜீவனை யிழந்தான்? சகாயமற்றவர்களுக்குச் சகாயம் செய்வதற்காகவா அவன் மாண்டான்? அப்படியானால் துக்கம் ஏன்? நல்லவிதமாய் வீர மேனியைத் தகனக் கிரியை செய்யுங்கள்! அவனது ஆத்மா வீர சுவர்க்கம் செல்க!

[தூக்குகிறவர்கள் பிரேதத்தைத் தூக்கப் போகிறார்கள்; கோவிந்த சிம்மன் முகத்தைக் கையால் மூடிக்கொள்ளுகிறான்.]

**கோவி**:—நில்லுங்கள்! இன்னொரு தரம் முகத்தைப் பார்த்துக்கொள்ளுகிறேன். ஹா! என் சர்வஸ்வ புத்திர! விருத்தாப்பியத்தின் பலமாகவும், அந்தகனின் கைத்தடியாகவும் இருக்கிற எனது பிரிய குமாரா! ஒருமுறை—இல்லை யில்லை; துக்கமேன்? அஜய சிம்மன் தீனர்களை ரக்ஷிப்பதற்காகப் பிராணனை யிழந்தான் என்று சரியாய்ச் சொன்னாய் சத்தியவதி! மீவார பூமியே! ராக்ஷ



கோவிந்த சிம்மன்:—அஜய! அஜய! எனது ஸர்வஸ்வ அஜய!
பக்கம் 197.

வியே! இத்தனை வீரர்களைத்தின்ற பின்னுமா உன் ராக்ஷஸ வயிறு நிறையவில்லை? நீயும் சாகத் தான் போகிறாய்! ஆனால் மீவாரத்தில் மனிதப் பூண்டு ஒன்றுகூட இல்லாமல் விழுங்கிவிடப்போகிறாயா? ஐயோ! நான் பிறந்த பொன்னாடு நாசமாய்ப் போகிறதே! இல்லை! இல்லை! யார் சொன்னது, என் அஜயன்—எனது பிரிய அஜயன் இறந்துவிட்டானென்று? அவன் இறக்கவில்லை—இதோ என்னை இமை கொட்டாமற் பார்க்கிறான் பார்! அஜய! அஜய!

[அஜய சிம்மனுடைய மிருத்த சரீரத்தை நோக்கிக் கோவிந்த சிம்மன் போகிறான். சத்தியவதி ஊடே போய் நிற்கிறாள்.

சத்திய:—சோகத்தால் பைத்தியம் பிடித்துவிடப் போகிறது கோவிந்த சிம்மஜீ? உங்கள் குமாரன் இப்போது இந்த உலகத்தில் இல்லை.

கோவி:—இல்லையா? என் புத்திரன் இல்லையா? நிஜமாகவே இல்லையா? அஜய! அஜய! எனது சர்வஸ்வ அஜய! (முகத்தை மூடிக்கொள்ளுகிறான்.)

சத்திய:—சுத்த வீரராயிருந்தும் கோவிந்த சிம்மஜீ! நீங்கள் இவ்வளவு சோகமடையலாமா? உங்கள் வீரத்துக்கு இது லக்ஷணமா?

கோவி:—என்ன சொன்னாய் சத்தியவதி? கொஞ்சம் இரைந்து சொல்லு! கேட்கவில்லை. சரீரத்தினுள்ள பயங்கரமான அந்தகாரம் அடித்துக் கொண்டிருக்கிறது. அந்த சப்தத்தில் நீ சொல்

ணாவது கேட்கவில்லை. ஓ! (நெஞ்சைப்பிடித்துக் கொண்டு அப்படியே யுட்கார்ந்து விடுகிறான்)

[கல்யாணி வருகிறாள்.]

**கல்யா:**—அப்பா! அப்பா!

**கோவி:**—யார் கூப்பிடுகிறது? அடி நாசகாலி! ராக்ஷஸி! என் அஜயனைத் தின்ற அடங்காப் பிடாரி! அஜயனைக் கொண்டுவா! கொண்டுவா!

**கல்யா:**—ஹா! அண்ணா! அண்ணா! (பிரேதத்தின் மீது விழுந்து பிரலாபிக்கிறாள்.)

**கோவி:**—போ தூர! என் அஜயனைத் தொடாதே! தூரப் போ! கோர பிசாசே! போ எட்ட! கொடிய சண்டாளி! சண்டாளி!

[கல்யாணியின் கையைப் பிடித்துத் தூர இழுத்துத் தள்ளுகிறான்.]

**கல்யா:**—(எழுந்து) ஆம். உண்மையிலேயே நான் நரபிசாசுதான்; என்னைக் கொன்றுவிடுங்கள்! எனக்குக் கல்யாணி யென்று யார் பேர் வைத்தது? உங்கள் வீட்டுக்கு நான் அகல்யாணியாய் வாய்த்திருக்கிறேன்; என்னைக் கொன்றுவிடுங்கள்! இந்தச் சர்வ நாசினியை உலகத்தைவிட் டகற்றிவிடுங்கள்! அப்புறம் உங்களுக்கு ஏதாவது நன்மையுண்டாகும். கொன்றுவிடுங்களப்பா! உண்மையிலேயே கொன்றுவிடுங்கள் என்னை!

[கோவிந்த சிம்மனுக்கு முன்னால் முழந்தாட்படியிட்டு உட்காருகிறாள்.)

கோவி :—என் ஹிருதயத்தில் என்ன நடக்கிறது ? நரகாக்கினிபற்றி யெரிகிறதா ? அல்லது பிசாசுகள் நடனமாடுகின்றனவா ? சகிக்க முடியவில்லையே ! ஜெகதீஸா ! சகிக்க முடியவில்லையே !

சத்திய :—கோவிந்த சிம்மஜீ ! சோகத்தால் இப்படியும் அதைரியப்படலாமா ? தகன காரியங்கள் நடக்க வேண்டாமா ?

கோவி :—ஆமாம் சத்தியவதி ! நான் துக்கப்படவில்லை. தீனர்களை ரக்ஷிப்பதற்காக அவன் ஜீவனை விட்டான் என்று நீ சொன்ன பின்னும், நான் துக்கப்படலாமா ? மகளே கல்யாணி ! நீயும் என்னை மன்னித்துவிடு ! ஆனல்—(அழுகிருன்) ஆனல் சத்தியவதி; நான் கிழவனுகிவிட்டேன்—ரொம்பக் கிழவனுகிவிட்டேன் !

கல்யா :—அப்பா !—

கோவி :—(கம்பிய குரலில்) வா கல்யாணி ! வா ! இப்படியென் மடியில் வந்துட்காரு ! பதிவிரதா தர்மத்துக்கும் பலியாய், வீட்டைவிட்டுவிரட்டப்பட்ட தாயில்லாக் குழந்தையே ! அபாக்கினியே ! பிரிய குமாரியே வா ! சதி தர்மத்தை நான் அவமதித்துவிட்டேன். அதற்குத் தண்டனையாகத்தான் ஆண்டவன் என் மகனை யெடுத்துக்கொண்டான். வேண்டுமடா கோவிந்தசிம்மா ! வேண்டும் உனக்கு இத்தண்டனை ! நல்லது; தகனக்கிரியை நடக்கட்டும்.

(பிரேதத்தைத் தூக்கப் போகிறார்கள்; அவ்வளவில் துக்காதிக்கையாய் மானஸி வருகிறாள். அவளுடைய கூந்தல் அவிழ்ந்து சிந்திக்கிடக்கிறது; ஆடை குலைந்திருக்கிறது.]

மான :—நில்லுங்கள்! நானும் கொஞ்சம் பார்த்துக்கொள்ளுகிறேன்!

சத்திய :—யார்? ராஜகுமாரியா?

மான :—அஜய! பிரியதம! என் வாழ்க்கையின் சர்வஸ்வ சுவாமி!

சத்திய :—இதென்ன ராஜகுமாரி? உன் சுவாமியா? அஜய சிம்மனா சுவாமி?

மான :—ஆம், அவர் என் ஸ்வாமி! அது யாருக்குந் தெரியாது; யாருக்குந் தெரியாத தேவ ரகசியம் அது. அஜய சிம்மனோடு எனக்கு விவாஹம் நடந்துவிட்டது. அதை நான் யாருக்கும் சொல்லவில்லை; யாருக்கும் அது தெரியாது; அஜயனுக்கும் தெரியாது; எனக்குந் தெரியாது! ஆத்மாவுக்கும் ஆத்மாவுக்கும் சம்பந்தம் நடந்தது. மனதோடு மனம் சம்மேளித்தது; ஆத்மாவோடு ஆத்மா ஒன்றியது. பிராணேஸ்வரா! பிரிய காதலா! என்னைவிட் டெங்கு போய்விட்டாய்? நான் உன்னிடம் ஓடிவந்திருக்கிறேனே தெரியவில்லையா? ஏன் என்னோடு பேசமாட்டேனென்கிறாய்? கோபமா? எதிட்டுப்பார் என்னை ஒரு முறை! நான் உன் பழைய குருவல்ல; தயாமய

ராஜகுமாரியுமல்லே!—வெறும் பிரேம பிக்ஷாரிணி யான தூர்பல ஸ்திரீ! கேவலம் பிச்சைக்காரி யைவிடக் கேவலமான பிச்சைக்காரியாய் வந்து உன்னிடம் பிரேம பிச்சை கேட்கிறேனே, வாய் திறந்து ஒரு வார்த்தை—உலர்ந்த ஒரே யொரு வார்த்தையாவது சொல்லக்கூடாதா? அஜய! எனது பிரிய அஜய! இன்றுதான் என் காதலே—இதுவரை என் அந்தரங்க அறைகளில் அவ்வ ளவு பத்திரமாய் ஒளித்து வைத்திருந்த காதலே பஹிரங்கமாய்க் கூறுகிறேன். ஆனால் இந்தக் காதலும், இந்தக் காதலின் ஆழமும் இதுவரை எனக்கே தெரியாது! மன்னிக்கமாட்டாயா அஜய? மன்னிக்கமாட்டாயா உன் மான ஸியை?

சத்திய:—ஹா! ராஜகுமாரியும் சோகத்தால் சோர்ந்து விட்டாளே? மானஸி! சாந்தமடை! அஜயன் தீனர்களை ரக்ஷிப்பதற்காக ஜீவனை விட்டான்!

மான:—அப்படியா? அதுதான் மனிதனுக்குச் சம்பவிக்க வேண்டிய மரணம்! பரம தியாகியாகவும், பரம யோகியாகவும் அவன் பரகெதியடைந்தானா? என் பிரிய சிஷ்யா! இன்றைக்கு நீ குருவின் ஸ்தானமடைந்துவிட்டாய்! நீ யடைந்திருக்கிற கௌரவம் பரலோகம்வரை வியாபித்துப் பூலோ கத்திலும் பரவியிருக்கிறது. தன்ய கோவிந்த சிம்மஜீ! இத்தகைய வீர குமாரனைப் பெற்ற தால் நீங்கள் முன்னேழு தலைமுறைக்கும் பின் னேழு தலைமுறைக்கும் கிருதக்ஞராயிருக்கிறீர்!

இத்தகைய பதிவியை யடைந்து, நானும் தன்யை யானேன்! என் கோவிந்த சிம்மஜீ? என் துக்கம்? நாமடைந்திருக்கிற கர்வம், நமது தலை யெடுப்பு யாருக்கு எட்டும்? எவருக்குக் கிட்டும்?

கோவி :—(உலர்ந்த குரலில்) ஆம் ராஜகுமாரி! அஜயன் தீன ரக்ஷணார்த்தமாய்த்தான் ஜீவனைவிட்டான். துக்கமேன்? துயரப்படக்கூடிய காரியமல்ல இது? தேசத்துக்காக அஜயன்—(அதற்கு மேலும் அவனால் பேசமுடியவில்லை. சுவற்றில் வலது கையை யூன்றிக்கொண்டு அதன் மீது தலையைச் சாய்த்துக்கொண்டு அழுகிறான்.)

மான :—வியர்த்தம்! வியர்த்தம்! வியர்த்தம்! சோக நெருப்பானது உள்ளே ஜ்வாலைவிட் டெரியும் போது சாந்தமடைய முயற்சிப்பது சாத்தியமற்றதாயிருக்கிறது. ஹா! சகிக்க முடியவில்லையே! அஜய! அஜய!—

கல்யா :—ஹா! இவைகளெல்லாம் என்ன? இங்கு என்ன நடக்கிறது? இது ஸ்வர்க்கமா, மத்திய லோகமா? இவர்களெல்லாம் தேவர்களா, மனுஷ்யர்களா? இது ஜீவனமா மிருத்யுவா? நான் தான் யார்? ஹோ! (மூர்ச்சையடைந்து கீழே விழுந்து விடுகிறாள்.)

சத்திய :—கல்யாணி! கல்யாணி!

கோவி :—மகள் மரணமடைந்துகொண்டிருக்கிறாள்—சாகட்டும். நாங்கள் எல்லோரும் போகிறோம்—புத்திரன், கன்னிகை, நான், என் மீவாரம், எல்லோ

ரும் ஒருமிக்கச் சாகிறோம். புத்திரன் போய் விட்டான்; கன்னிகை செத்துக்கொண்டிருக்கிறாள்; மீவாரம்—நான் பிறந்த பொன்னாடு—அதுவும் மூழ்கிக்கொண்டிருக்கிறது; நானும் போகிறேன். (பைத்தியப் பிடித்தவனைப்போல் ஓடுகிறான்.)

(திரை விழுகிறது.)

(காட்சி முடிவு.)

---

## நாலாங் காட்சி.

---

இடம் :—மீவாரத்தில் மஹபத்கான் கூடாரம்.
காலம் :—மாலை.

[மஹபத்கான் கூடாரத்துக்கு வெளியே நின்றுகொண்டு, தூரத்தில் மலைகளுக்குப் பின்னால் மறைந்துகொண்டிருக்கும் அந்திச் சூரியனின் செந்தூர கிரணங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறான்.]

மஹ :—சரி, அஸ்தமித்துவிட்டது—

[மஹாராஜா கஜ சிம்மன் வருகிறான்.]

கஜ :—கான் சாஹிப் !

மஹ :—வாருங்கள் மஹராஜ் !

கஜ :—மீவாரத்தைத் தாங்கள் ஜெயித்துவிட்டீர்கள்; ஆனால் உதயபுரியை ஏன் இன்னும் கைப்பற்றாமலிருக்கிறீர்கள் ?

மஹ :—உதயபுரியைக் கைப்பற்றவேண்டுமென்று தாங்கள் விரும்புகிறீர்களா ?

கஜ :—இல்லை ஜனாப்! சும்மா கேட்கிறேன். ஆமாம் இன்னொரு சமாச்சாரம் கேள்விப்பட்டீர்களா?

மஹ :—என்ன சமாச்சாரம்?

கஜ :—மீவாரத்து ஸ்திரீகள் அஸ்திர மெடுத்திருக்கிறார்களாமே?

மஹ :—ஏன்? சண்டைக்கா? ஸ்திரீகளா?

கஜ :—ஆம்; ஸ்திரீகள் ஜனாப்! அப்படியானால், ஆண்களோடு பெண்கள் எப்படிச் சண்டை செய்கிறார்களென்று பார்க்கலாம். கொஞ்சம் கோமள சுபாவம் அவஸ்யம் இருக்கத்தான் இருக்கும். நானும் அந்தச் சண்டையில் அவஸ்யம் சம்பந்தப்பட வேண்டும்!

மஹ :—மஹாராஜ்! ரஜபுத்திரராயிருந்தும், ரஜபுத்திர ஸ்திரீகளைப்பற்றித் தாங்கள் இவ்வளவு கேவலமாகப் பேசத்தான் பேசலாமா? நீங்கள் உண்மையிலேயே ரஜபுத்திரர்தானா? இல்லை—அடிமைப் பிரகிருதி. அவலட்சணகுணம்.

கஜ :—கான் சாஹிப்!—

மஹ :—போங்கள் மஹாராஜ்! போங்கள்! உங்கள் க்ஷூரத்துவத்தை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்! கேவலம் அது உங்களுக்குத் தேவையாயிருக்கும்!

[கஜ சிம்மன் போகிறான்.]

மஹ :—இந்த மஹாத்மாக்கள்தான், ஹிந்து மதத்தின் தார்மீகக் கொடியை யுயர்த்துகிறவர்கள்! ஏ! ஹிந்துக்களே! நீங்கள் உங்களுடைய தேசத்தைத்தான் இழந்துவிட்டீர்களானால் மனுஷத் தன்மையையுமா இழந்துவிட்டீர்கள்?

[சிப்பாயி யொருவன் வருகிறான்.]

மஹ :—என்ன சமாச்சாரம்?

சிப்பாயி :—ஆக்ராவிலிருந்து இளவரசர் சைன்யசகிதம் வந்திருக்கிறார்.

மஹ :—வந்துவிட்டாரா? சரி போ!

[சிப்பாயி செல்லுகிறான்.)

மஹ :—இனியும் சைன்யத்துக்கு இங்கென்ன அவஸ்யமிருக்கிறது? மீவாரம் சர்வ நாசமாகிவிட்டது. ஆனால் மொகல் சேனையைக் கூட்டிக்கொண்டு உதயபுரிக் கோட்டைகுள்ளே பிரவேசிக்க நான் விரும்பாத காரியத்தை இந்த இளவரசர்—சுயம் மொகலாயர், செய்ய விரும்புகிறாரா? அவர்கள் இனி என்னவேண்டுமானாலும் செய்துகொள்ளட்டும். என் வேலை முடிந்து விட்டது.

[கோவிந்த சிம்மன் வருகிறான்.]

மஹ :—நீங்கள் யார்?

கோ :—மீவாரத்தின் ஓர் சர்தார் நான்!

மஹ :—இங்கு ஏன் வந்தீர்கள்?

கோ :—சொல்லுகிறேன்; கொஞ்சம் மூச்சுவாங்கிக்கொண்டு சொல்லுகிறேன்.

மஹ :—சமாதானத்துக்காக அமர சிம்மர் அனுப்பிவைத்தாரா?

கோ :—அப்படி ஆவதற்கு முன்னால் என் தலையில் இடி விழுந்துவிடும்!

மஹ :—பின்னர் என்ன காரியமா யிங்கு வந்தீர்கள்?

கோ :—நான் சாக விரும்புகிறேன். ரொம்பக் கிழவனாகி விட்டேன். சாக விரும்புகிறேன். சண்டை செய்து சாகவேண்டும்-சாதாரணச் சிப்பாயி யோடு சண்டை செய்து சாகக் கூடாது. உன் கையினால் சாகவேண்டும்; உன்னோடு யுத்தம் செய்து சாகவேண்டும்.

மஹ :—உங்களுக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா?

கோ :—இல்லை மஹபத்! இல்லை; எனக்குப் பைத்தியம் பிடிக்கவில்லை. உன்னோடு தொந்த யுத்தம் செய்து உன்னைக் கொல்ல வந்திருக்கிறேனென்று பயப் படுகிறாயா? ஹா! அவ்வளவு பலம் எனக்கு இப்பொழுதிருக்குமானால்--இல்லை மஹபத்கான்! —தொந்த யுத்தத்தில் உன்னை ஜெயிக்கக்கூடிய சக்தி எனக்கில்லை. என்றாலும் பின் வாங்காமல் என்னால் சாக முடியும்; உன் கையாற்சாக விரும் புகிறேன்.

மஹ :—ஆஹா! இது மஹா அற்புதமான ஆசை!

கோ :—இதில் என்ன அற்புதமிருக்கிறது? நான் ஸ்வர்கீய ராணா பிரதாப சிம்மரோடு சேர்ந்து குறைந் தபக்ஷம் ஐம்பது யுத்தங்கள் செய்திருக்கி றேன். என் சரீரத்தில் ஏற்பட்ட காயங்களின் தழும்புகளுக்குக் கணக்கேயில்லை. கடைசிக் காயம் உன் கையால் ஏற்படவேண்டும்.

மஹ :—ஏன்? அதனால் தங்களுக்கென்ன லாபம்?

கோ :—லாபமா? அப்படி யொன்றும் விசேஷமான லாப மில்லை. என்றாலும் நீ தர்மத்தால் முஸல்மானாயி

ருந்தாலும் ஜாதியால் ஹிந்துவாகவும், ராணா பிரதாப சிம்மருடைய அண்ணன் பிள்ளையாகவுமிருக்கிறாய்; உன் கையாற் சாவதில் கொஞ்சம் கௌரவமிருக்கிறது.

மஹ :—ஹோ ! நீங்களென்ன சாலும்பர் அரசர் கோவிந்த சிம்மரா?

கோ :—ஆஹாஹா ! அடையாளந் தெரிந்துகொண்டதா மஹபத்? இப்பொழுது தெரிந்ததா நான் ஏன் உன்கையால் சாக விரும்புகிறேன் என்பது? மஹபத்கான்! நீ இன்று மீவாரத்தை ஜெயித்துவிட்டாய்—மீவாரத்தை துவம்ஸமும் செய்துவிட்டாய்! என்றாலும் நானிருக்கும் வரை உன்னால் உதயபுரிக் கோட்டைக்குட் பிரவேசிக்க முடியாது. மீவாரத்தில் இப்போது சைன்யமில்லையென்பது வாஸ்தவம். என்றாலும், நீ சண்டை செய்துதானாகவேண்டும். ஏனெனில், மீவாரத்தின் கடைசி வீரனாக நான் இதோ நிற்கிறேன். என்னை வெட்டி வீழ்த்தாமல் உதயபுரிக்குட் பிரவேசிக்கக்கூடிய மொகலாயன்—அல்லது ஆண்பிள்ளை யெவனிருக்கிறான் பார்க்கிறேன்! என் மூக்கில் மூச்சுள்ளவரை உன்னால் உதயபுரிக்குட் பிரவேசிக்க முடியாது மஹபத்! வாளெடு!

[கோவிந்த சிம்மன் வாளையுருவுகிறான்.]

மஹ :—ஆனால் வீரவரரே! நான்தான் உதயபுரிக்குள் பிரவேசிக்க விரும்பவில்லையே!

கோ:—பிரவேசிக்க விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி; அதைப்பற்றி யெனக்கு அக்கரை யில்லை. எடு வாளை!

மஹ:—கேளுங்கள்—தயவு செய்து கேளுங்கள்!

கோ:- இல்லை யில்லை, நான் எதுவுங் கேட்க விரும்பவில்லை. எனக்குள்ளே அக்கினி, ஜ்வாலைவிட் டெரிந்து கொண்டிருக்கிறது. எனது குமாரன் போய்விட்டான்; கன்னிகையும் போய்விட்டாள்; நான் மட்டும் ஏன் இருக்கவேண்டும்? எனது சுவாதீன மிவாரத்தில், மொகலாயர்கள் வந்து அதிகாரஞ் செய்வதைக் காண்பதற்கு முன்னால், நான் இறந்துவிடவேண்டும். அதுவும் எவன் என் மருமகனாயிருந்தும் என் மகனைக் கொன்றானோ, எவன் எனது தேசத்தின் புதல்வனாயிருந்தும் அந்நியர்களுக்கு அடிமையாயிருக்கிறானோ, எவன் எனது தர்மத்திற் பிறந்தவனாயிருந்து முஸல்மானாகிவிட்டிருக்கிறானோ, எவன் ராஜபுத்திரனாயிருந்தும் ஜாதித் துரோஹியாயிருக்கிறானோ, எவன் எனது ராஜாவின் சகோதரனாயிருந்தும் அவருக்குச் சத்துருவாயிருக்கிறானோ அவன் கையால் சாக விரும்புகிறேன். மஹபத்! வாளெடு!

மஹ:—(வாளையுருவிக்கொண்டு) சாந்தமடையுங்கள்! உங்களை நான் ஒருக்காலும் கொல்லமாட்டேன்!

கோ:—ஒன்றும் பேசாதே மஹபத்; சண்டை செய்; தற்காத்துக்கொள்!

மஹ:—கோவிந்த சிம்மஜீ—

கோ :—என்னை வெட்டு ! வெட்டிக்கொல்லு !

மஹ :—இல்லை; நான் வாளைக் கீழே வைத்துவிடுகிறேன்' (வாளைக் கீழே வைக்கிருன்.)

கோ :—உன்னை நான் விடப்போவதில்லை மஹபத் வாளெடு ! நான் சாக வந்திருக்கிறேன்; அவஸ்யம் சாகப்போகிறேன். வாளெடு ! விடமாட்டேன்; வாளெடு !

[மஹபத்கானோடு கோவிந்த சிம்மன் சண்டைக்குப் போகிருன். அவ்வளவில் கஜ சிம்மன் பின்னுலிருந்து கோவிந்த சிம்மனைத் துப்பாக்கியாற் சுடுகிருன்; கோவிந்த சிம்மன் குண்டு பட்டுக் கீழே விழுகிருன்.]

மஹ :—இதென்ன ? இது செய்தது யார் ? ஆஹா ! என்னசெய்துவிட்டீர் நீர் ? கஜ சிம்மரே ! பேடியினும் பேடியானீர் ! அதமனும் செய்யான் இதை! இவர் யார் தெரியுமா ?

கஜ :—யார் ? யாராவது திருடனுயிருக்கலாம்.

கோ :—திருடனு ? திருடன் நானல்ல—நீ. நீ துரோகி—பேடி—கோழை—எச்சிக்கலை நாய். பிறருடைய ராஜ்யத்தைக் கொள்ளையடிக்க நான் வரவில்லை—நீ வந்திருக்கிருய்; நீயே திருடன். மஹபத்கான் ! இனி நீ உதயபுரிக்குப் போகலாம். உன்னைத்தடுக்க அங்கே யாருமில்லை—போகலாம். போய் உன் தாயை—மீவார மாதாவைப் பிடித்து மொகலாயர்களின் தாதியாக்கு ! மகன், தாய்க்குச் செய்

யவேண்டிய கடமையை அவ்விதம் பூர்த்திசெய்! அஜய!—கல்யாணி! (காலையும் கையையும் உதறிக்கொண்டு சாகிறான்.)

(திரை விழுகிறது.)

(காட்சி முடிவு.)

---

## ஐந்தாம் காட்சி.

---

**இடம்** :—உதயபுரிக் கோட்டைக்கு முன்னே ஒரு பாதை.

**காலம்** :—இரவு.

[கோட்டைக் காவலனான சிப்பாயி ஒருவனும் சில நகரவாசிகளும் சம்பாஷித்துக் கொண்டிருக்கின்றனர்.]

**1-ம் நகரவாசி** :—ஏன் ஐயா! நமது மஹாராஜா கோட்டையைவிட்டு ஏன் போனார்? எங்கே போயிருக்கிறார்?

**சிப்பாயி** :—ஏன் போனாரோ எனக்குத் தெரியாது; ஆனால் இது மாத்திரம் தெரியும்: சேனாபதி மஹாபத்கான், மீவாரத்துக்கு விரோதமாய் வாளெடுப்பதில்லை யென்று பாதுஷாவுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறாராம். அதனாலே ஷாஜாதா குர்ரம் சண்டைக்கு வந்திருக்கிறாராம். ஷாஜாதாவிடமிருந்து மொகல் தூதன் ஒருவன் ஒரு கடிதம் கொண்டுவந்திருந்தான். அதில் சமாதானத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்ததாம். தூதன்

போனபின், அன்று மறுநாள்—இன்று காலமே, ராணுஜி குதிரையிலேறிக்கொண்டு ஷாஜாதாவின் கூடாரத்தை நோக்கிப் போனர்.

2-ம் ந. வாசி :—அப்புறம் ?

சிப்பாயி :—அப்புறம் என்னவிற்றோ எனக்குத் தெரியாது.

3-ம் ந. வாசி :—ராணுஜி இன்னும் திரும்பி வரவில்லையா ?

சிப்பாயி :—இல்லை.

4-ம் ந. வாசி :—அவரோடுகூட யார் போயிருந்தார் ?

சிப்பாயி :—யாருமில்லை; ராணுஜி மாத்திரந்தான் போனர்.

1-ம் ந. வாசி :—அதோ வருகிறது யார் ?

2-ம் ந. வாசி :—ராணுஜியில்லையா அது ?

3-ம் ந. வாசி :—இல்லை. அவர்மாதிரியில்லை.

4-ம் ந. வாசி :—உடையென்னவோ ராஜவுடையாகத்தானிருக்கிறது. (சிப்பாயியை நோக்கி) அதுயாரென்று உமக்குத் தெரியுமா ?

சிப்பாயி :—ஜோதிபுரி ராஜா கஜ சிம்மர் அவர்.

1-ம் ந. வாசி :—மஹாபத்கானோடு மீவாரத்தின்மீது படையெடுத்துவந்தாரே அவர்தானே ?

சிப்பாயி :—ஆம் அவர்தான்.

2-ம் ந. வாசி :—அவரும் ரஜபுத்திரர்தானே ?

3-ம் ந. வாசி :—ரஜபுத்திரர்தான்; ஆனல் ரஜபுத்திரர்களின் சத்துரு !

கஜ :—(சிப்பாயியை நோக்கி) கோட்டைக் கதவு சாத்தியிருக்கிறதோ ?

சிப்பாயி :—ஆம் மஹாராஜ் !

கஜ :—கதவைத்திற; இப்போது இது என் கோட்டை !

சிப் :—எங்கள் எஜமான் உத்தரவில்லாமற் கோட்டைக் கதவைத் திறக்க முடியாது.

கஜ :—எஜமான் உத்தரவா? உன் எஜமான் இப்போது ராணா அமர சிம்மனல்ல; நான்.

சிப் :—நீங்களா? நீங்களா எங்கள் எஜமான்? அது எனக்குத் தெரியாது; ராணா அமர சிம்மருடைய உத்தரவில்லாமல் கோட்டை வாசலையென்றால் திறக்க முடியாது.

கஜ :—திறக்க முடியாதா? (தன் சிப்பாயிகளை நோக்கி) சிப்பாயிகளே! இவனிடமிருக்கிற சாவியைப் பறியுங்கள்!

சிப் :—உயிரோடிருக்கிற என்னிடமிருந்து, உங்களாற் சாவியை ஒருக்காலும் பறிக்க முடியாது. (வாளையுருவுகிறான்.)

கஜ :—நல்லது; இவனை வெட்டிக் கொல்லுங்கள்!

1-ம் ந. வாசி :—(மற்ற நகரவாசிகளை நோக்கி) நின்று கொண்டு வேடிக்கை பார்க்கிறீர்களா என்ன? வெட்டுங்கள்! கொல்லுங்கள்!

[எல்லோருஞ் சேர்ந்துகொண்டு கஜ சிம்மனோடு சண்டை செய்ய ஆரம்பிக்கின்றனர்.]

கஜ :—வீரர்களே :—

[கஜ சிம்மனுடைய சைனிகர்கள், நகரவாசிகளோடு சண்டை போடுகின்றனர்; அவ்வளவில் சில மொகல் சிப்பாயிகளோடு ராணா அமர சிம்மன் வருகிறார்.]

ராணா :—சைனிகர்களே! வாளைக் கீழே வையுங்கள்!

[எல்லோரும் சண்டையை நிறுத்திவிட்டு ராணுவைப் பார்க்கிறார்கள்.]

ராணு :—கஜ சிம்மரே! உமக்கு இங்கென்ன வேலை?

கஜ :—கோட்டைக்குட் பிரவேசிப்பதற்காக வந்தேன்!

ராணு :—ராஜ அநீதி! அடிமைப் பதரே! அதமா! உனக்கு யோக்கியமான உபசாரத்தை இதோ ராணு அமர சிம்மன் தருகிறான்! ஏற்றுக்கொள் மொகலாயர்களின் நாயே! ஏற்றுக்கொள்! இதுதான் உனக்கு யோக்கியமான உபசாரம்!

[காலால் உதைத்து கஜ சிம்மனை ராணு அமர சிம்மன் கீழே வீழ்த்துகிறார்.]

ராணு :—சாகஸ சைனிகனே! கோட்டைக் கதவைத் திற! (கதவு திறக்கப்பட்டதும் மொகல் சைனிகர்களை நோக்கி) இனி நீங்கள் போகலாம்!

[மொகல் சிப்பாயிகள் திரும்பிப் போகின்றனர்; ராணு, கோட்டைக்குட் பிரவேசித்துக் கதவைச் சாத்தச் சொல்லுகிறார்.]

(திரை விழுகிறது.)

(காட்சி முடிவு.)

---

## ஆறாங் காட்சி.

---

இடம் :—மீவாரத்தில் மலைகளையடுத்த பாதை.

காலம் :—மாலை.

[சத்தியவதி, அருணா சிம்மன், மற்றும் சில சாரணிகள்.]

சாரணிகள் (பாடுகின்றனர்)

"மானத்தால் வீழ்ந்து விட்டாய்
மதிப்பிலாப் பகைவர் வேந்தன்
வானத்தாற் பெருமை கொண்ட
வலிமைதான் உடையனேனும்
ஊனத்தால் உள்ளம் அஞ்சி
ஒதுங்கிட மன மொவ்வாமல்
ஆன(த்)தைச் செய்வோ மென்றே
அவன் வழி எதிர்த்து நின்றாய்.

"துணிவினால் வீழ்ந்து விட்டாய்
தொகையிலாப் படைகளோடும்
பிணிவளர் செருக்கினோடும்
பெரும்படை யெதிர்த்த போது
பணிவது கருத மாட்டாய்
பதுங்குதல் பயனென் றென்னாய்
தணிவதை நினைக்க மாட்டாய்
நில்லெனத் தடுத்தல் செய்தாய்.

"அறத்தினால் வீழ்ந்து விட்டாய்
அன்னியன் வலிய னாகி
மறத்தினால் வந்து செய்த
வன்மையைப் பொறுத்தல் செய்யாய்
முறத்தினாற் புலியைக் காக்கும்
மொய்வரைக் குறப்பெண் போலத்
திறத்தினால் எளிமை யாகிச்
செய்கையால் உயர்ந்து நின்றாய்."

[மூன்று சிப்பாயிகளும் ஹிதாயத் அலியும் வருகின்றனர்.]

ஹிதா :—நீயார் ?

சத்திய :—நான் ஒரு சாரணி !

ஹிதா :—நகரங்களிலும், கிராமங்களிலும் இதே பாட்டைத்தானா பாடிக்கொண்டு திரிகிறாய் நீ ?

சத்திய :—ஆம். இது எங்கள் வேலை.

ஹிதா :—இனிமேல் இந்தப் பாட்டைப் பாடக்கூடாது தெரியுமா ?

சத்திய :—ஏன் ?

ஹிதா :—இது உங்கள் தேசமல்ல இனி! மொகலாயர்களுடையது.

சத்திய :—மொகலாயர்களுக்கு ஜே! எதுவரை மீவாரம் எங்கள் ஸ்வாதீனத்திலிருந்ததோ அதுவரை நாங்கள் யுத்தஞ் செய்தோம். என்றைக்கு மீவாரம் தலை குனிந்து மொகல் ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டுவிட்டதோ அன்றைக்கு முதல் எங்களுக்கு மொகலாயர்களோடு எவ்வித தாவாவுமில்லை. ஆனால் அதற்காக நாங்கள் அழவுங் கூடாதா? உலகத்தில் மாதாவை நேசிக்காத மகனில்லை; மீவார வாசிகள் தங்களுடைய பூமித்தாயை நேசிக்காமல் எப்படியிருப்பார்கள் ?

ஹிதா :—இல்லை சாரணி! இந்தப் பாட்டை நீங்கள் பாடக்கூடாது.

அருண :—நாங்கள் பாடுகிறோம்! யார் தடுக்கிறார் பார்க்கிறேன் ? பாடம்மா நீ !

ஹிதா :—பாடினால் கைது செய்வேன் தெரியுமா?

சத்திய :—நல்லது; கைது செய்யுங்கள்! இருட் சிறைக்குள் இருந்துகொண்டும் நாங்கள் இதே பாட்டைப் பாடுவோம்! பாடு மகனே! பாடு!

ஹிதா :—அப்படியா? இப்போது நீங்கள் என் கைதி!

அருண :—(வாளை யுருவி) உயிருக்குப் பிரியமானால் உஷார்! என் அம்மா மீது எவன் கை வைக்கிறான் பார்க்கிறேன்!

ஹிதா :—அட பயலே! வாளைக் கீழே வை!

அருண :—வாளைக் கீழே வைக்கவா! உன் கழுத்தில் வைக்கிறேன் வா!

ஹிதா :—சிப்பாயிகளே! இவனைக் கொல்லுங்கள்!

[வாளை யுருவிக்கொண்டு சிப்பாயிகள் அருண சிம்மனை வளைத்துக்கொள்ளுகிறார்கள்; அருண சிம்மன் அவர்களோடு சண்டை போடுகிறான்.

சத்திய :—சபாஷ் மகனே! சபாஷ்! உன் தாயைக்காத்தல் செய்!

[மொகல் சிப்பாயி யொருவன் காயம்பட்டுக் கீழே விழுகிறான்.]

சத்திய :—சபாஷ்! மகனே! சபாஷ்! உயிருள்ளவரை கீழே வாளை வைக்காதே! அப்படி வெட்டு! ஆஹா! எவ்வளவு ஆநந்தம்!

[சுயம் ஹிதாயத் அலியே அருண சிம்மன் மீது ஆக்ரமிக்கிறான். இரண்டு சிப்பாயிகளும், ஹிதாயத் அலியும் அவனைச் சூழ்ந்து

கொள்ளுகின்றனர். இனி அருணா சிம்மனை அவர்கள் வெட்டிக் கொன்றுவிடுவார்க ளென்று தெரிந்து சத்தியவதி கண்களைக் கையால் மூடிக்கொள்ளுகிருள். அவ்வள வில் சில சிப்பாயிகள் சகிதம் மஹபத்கான் அங்கு வந்து சேருகிருன்.]

மஹ :—ஹிதாயத் அலி ! நில்லு ! நில்லு !

[எல்லோரும் சண்டையை நிறுத்துகின்ற றனர்.]

மஹ :—உனக்கு வெட்கமில்லையா ஹிதாயத் அலி? ஒரு சின்னஞ் சிறு பையனேடு இரண்டு சிப்பாயிகள் சண்டை போடுகிருர்கள், நீயும் அவர்களுக்கு உதவி செய்கிருய்? இதுதானு வீரம்? சீ ! (அரு ணனை நோக்கி) சபாஷ் சிங்கக்குட்டி ! உயிரைப் பரவாயில்லை யென்று உன் அம்மானை ரக்ஷித் தாய் ! நீதான் வீரன் ! தன்ய ! உச்சர்க்கமடை வதற்கு இதுதான் வழி ! உயிரை விட்டவன் வாழ்வான் ! விடாதவன் வீழ்வான் !

[ஆநந்த பரவசத்தால் அருணா சிம்மனை புத்ர வாத்ஸல்யத்தோடு பார்த்துக்கொண் டிருக்கிருன். சத்தியவதி மஹபத்கானை ஏறிட்டுப் பார்க்கிருள்; மஹபத்கானும் சத் தியவதியை நோக்குகிருன்.]

மஹ :—சகோதரி ! உன்னை 'சகோதரி' என்றழைப்ப தற்கே எனக்கு அதிகாரமில்லாது போய்விட் டதே !—நான் என்ன சொல்லட்டும் ! என்னை

மன்னிக்கமாட்டாயா அக்கா! மன்னிக்கமாட்டாயா?

சத்ய :— ஹே! பகவானே! என்ன செய்துவிட்டனே? என் தம்பி என்னை 'அக்கா' என்றழைக்கிறான். என்றால் அவனைப் பட்சத்துடன் தழுவிக்கொள்ள முடியவில்லை! ஹா! ஈஸ்வரா!

அருண :— அம்மா!

சத்ய :— மொகல் சேனாபதி மஹபத்கான்!

மஹ :— இல்லை தம்பி! நான் உன் மாமன்.

சத்ய :— வா அருணா! வா நாம் போவோம்!

மஹ :— போவாய்? போகமாட்டாயா அக்கா? என்னை மன்னித்துவிட்டுப்போ!

சத்ய :— மஹபத்கான்! நீ யெவ்வளவு பாவஞ் செய்திருக்கிறாயென்று உனக்குத் தெரியுமா?

மஹ :— தெரியும்; என் வீட்டில் நானே நெருப்புவைத்து அதில் மேகம்போல் எழுந்த புகையைக் கண்டு பிசாசைப் போல் ஆநந்தமடைந்தேன்.

சத்ய :— அவ்வளவுதானா? கேவலம் அவ்வளவுதானா நீ செய்த பாவம்?

மஹ :— அப்புறமென்ன அக்கா? நான் முஸல்மானானேனே அது ஒரு பாபமா? அது ஒரு பாபமென்று எனக்குத் தோன்றவில்லை. யாருக்கு எந்த மதத்தில் விருப்பமிருக்கிறதோ அவனுக்கு அந்த மதத்தில் சேரச் சுதந்திரமிருக்கிறது. அப்படி அது—

சத்ய :— ரொம்பச் சரி! (அருணனை நோக்கி) வா அருணா வா போவோம்!

மஹ :—மனுஷியன், தன்னிடமிருக்கிற கோமள பிரவிர்த்தியை யிழந்துவிடுவதைவிட, நான் முஸல்மானென்பது அவ்வளவு பயங்கரமான பாபமா? அக்கா! ஸ்திரீ ஹிருதயம், புண்ணியத்தின் தபோவனமென்றும், ஆத்ம உத்சர்க்கத்தின் (மேன்மை) லீலா ஸ்தலமென்றும், பிரீதியின் நந்தவனமென்றும் நானறிவேன். ஆச்சார நியமமானது, அப்பேர்ப்பட்ட மிருது மனதைக்கூடக், கல்லைப்போற் கடினப்படுத்தக்கூடியதாயிருக்கிறதா? ஒருதரம், க்ஷணமாத்திரம், நீ மறந்து நான் முஸல்மான் என்பதையும், நீ கொடுமை செய்யப்பட்டவள் நான் கொடுமை செய்தவன் என்பதையும் மறந்து, நாமிருவரும் ஒரே மனுஷ ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்றும், நீ சகோதரி, நான் தம்பி என்றும், எண்ணிக்கொண்டு என்னை ஏறிட்டுப்பார்! அப்போது பால்ய கால நினைப்புகள் ஒவ்வொன்றாகத் தோன்றும். என்னை இடுப்பிலே தூக்கிக்கொண்டு நீ சுற்றித் திரிந்ததும், எனது சின்னஞ் சிறிய கன்னங்களில் கணக்கில்லாத முத்தங்கள் கொடுத்ததும், நெஞ்சிலே போட்டு என்னை உறங்கச் செய்ததுமாகிய சம்பவங்களெல்லாம் ஞாபகத்துக்கு வரும். அப்போது நாம் தாயில்லாத தம்பியும் தமக்கையுமாயிருந்தோம். இப்போதும் அதே சகோதரியும் தம்பியுமல்லவோ? அந்த உறவு, நம்மில் அற்றுப்போய்விட்டதா?

சத்ய :—ஏ! பகவானே!

மஹ :—அக்கா!

சத்ய :—நடக்கவேண்டுமென்றிருந்ததுவோ அது நடந்து முடிந்துவிட்டது. அட தம்பி மஹிபதி! உன் குற்றங்கள்—நீ செய்த பாவங்கள் அனைத்தையும் நான் மன்னித்துவிட்டேன். ஆண்டவனும் உன்னை மன்னிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். உன்னை நான் மொகல் சேனாபதி மஹபத்கானுகப் பாவிக்கவில்லை; என் இளைய தம்பி மஹிபதியாகவே பாவிக்கிறேன். தம்பி! நீ போகலாம்.

மஹ :—நல்லதக்கா! நான் போகிறேன். (சத்தியவதியை நமஸ்கரிக்கிறான்.)

சத்ய :—ஆயுஷ்மானுக இரு தம்பி! (அருணனை நோக்கி) வா அருணா! நாம் போவோம்!

ஹிதா :—எங்கே போவீர்கள் நீங்கள்? உங்களை நான் கைது செய்திருக்கிறேன்.

மஹ :—என் சகோதரியை—அதுவும் என் முன்னிலையில், கைது செய்யத் துணிந்தவன் எவனிருக்கிறான்? போ அக்கா நீ போ நானிருக்கிறேன்!

ஹிதா :—இல்லை கான் சாஹிப்! இப்போது நீர் சேனாதிபதியில்லை. உமது உத்தரவுக்கு நான் கீழ்ப்படியவேண்டியவனல்ல; ஷாஜாதா குர்ரம் உத்தரவிடவேண்டியவர்.

[குர்ரம் பிரவேசம்.]

குர்ரம் :—நல்லது ஹிதாயத்! நானே உத்தரவிடுகிறேன்! (சத்தியவதியை நோக்கி) போகலாம்; நீங்களெல்லாம் உங்கள் வீடுகளுக்குப் போகலாம்!

ஹிதா :—இல்லை ஷாஜாதா சாஹிப்! இவர்கள் மீவாரத்தின் சுதந்திர கீதம் பாடுகிறார்கள்.

குர்ரம் :—பாடட்டும்; நன்றாய்ப் பாடட்டும். அதை நானும் தூரத்திலிருந்து கேட்கத்தான் செய்தேன். கேட்பதற்கு அது மஹா மதுரமாயிருக்கிறது.

ஹிதா :—இருக்கலாம் ஷாஜாதா சாஹிப்! ஆனால், அதனால், மொகல் சாம்ராஜ்யத்துக்குத் தீமை யுண்டாகும்.

குர்ரம் :—இல்லை ஹிதாயத்! அதனால் மொகல் சாம்ராஜ்யத்துக்கு நன்மை யுண்டாகுமே யொழியத் தீமை யுண்டாகாது. மொகல் பாதுஷாவுக்குத் தமது நன்மையைத் தாமே தற்காத்துக்கொள்ளத் தெரியும். மேலும் தேச பக்த கீதங்களால், மீவாரத்தில் மாத்திரமல்ல, அகில ஹிந்துஸ்தானத்திலு மிருக்கிற மொகல் ஆதீனம், கோடையிடியால் தாக்கப்பட்டதுபோல், இடிந்து விழுந்துவிடுமானால் விழட்டும். மொகல் ராஜ்யம், மணலிற் கட்டப்பட்ட வீட்டைப்போல், அஸ்திவாரபலம் அற்றதாயிருக்கவில்லை. ஹிந்துஸ்தானத்தாரின், ராஜ விஸ்வாசம் என்கிற பாறையின் மீது, அவர்களின் அசகாய சூரத்துவம் என்கிற கல்லைக் கொண்டு கட்டப்பட்டிருக்கிறது. அப்பேர்ப்பட்ட வலிய கோட்டை, அதன் ஜனங்களிடத்திலிருக்கிற தேச பக்தியின் காரணத்தால், அழிந்துவிடு

யானால் அழிந்துபோகட்டும். தேச மஹா ஜனங்களிடமிருக்கிற தேச பக்திதான் அந்தத் தேசத்தின் உண்மையான அரண்! அதை யாராலும் அழிக்க முடியாது! தெரிந்ததா ஹிதாயத் அலி!

ஹிதா :—ஆம், தெரிந்தது ஷாஜாதா ஸாஹிப்!

சூர்ரம் :—(சத்தியவதியை நோக்கி) பாடு சகோதரி! பாடு அதே கீதத்தை! நீங்கள் இந்தச் சுதந்திர கீதத்தைப் பாடுகிறீர்களே யென்று எனக்கு வருத்தமில்லை? ஆனால் இதைக் கேட்பதற்கு, மீவாரத்தில் ஜனங்கள் மிஞ்சியிருக்கவில்லையே யென்று தான் விசனப்படுகிறேன். பாடு அக்கா! பாடு பயப்படாமல்! நானும் பாடுகிறேன்! நீயும் பாடு ஹிதாயத் அலி! சிப்பாயிகளே! நீங்களும் பாடுங்கள்! எல்லோரும் பாடுவோம் இனிமையான இக்கீதத்தை!

[எல்லோரும் பாடிக்கொண்டு போகிறார்கள்.]

" சொந்த நாட்டிற் பார்க்கடிமை செய்து
துஞ்சிடோம் இனியஞ்சிடோம்
எந்த நாட்டினும் இந்த அநீதிகள்
ஏற்குமோ? தெய்வம் பார்க்குமோ?

" வந்தே மாதரம் என்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம் முடி தாழ்த்துவோம்
எந்தம் ஆருயி ரன்னையைப் போற்றுதல்
ஈனமோ அவமானமோ?

" சதையைத் துண்டுதுண் டாக்கினும் உன்னெண் [ணம்
சாயுமோ ஜீவனோயுமோ?
இதயத்துள்ளே யிலங்கு மகாபக்தி
யேகுமோ நெஞ்சம் வேகுமோ? "

(காட்சி முடிவு.)

---

## ஏழாங் காட்சி.

---

இடம் :—உதய சாகரக் கரை.
காலம் :—மாலை.

[மானஸி ஏகாந்தமாயிருக்கிறாள்.]

மான :—என்னைச் சுற்றிலும் சூழ்ந்திருந்த அந்தகாரம் அகன்றுவிட்டது. முன்னைப்போல் அதே மிருதுவும், கம்பீரமும், அநாதியுமான கீதநாதம் சமுத்திரத்திலிருந்து வருகிறது—அது முன்னைவிட மதுரமாகவும் சுகுணமாகவுமிருக்கிறது. மேகம் விலகிவிட்டது. ஆகாசத்தில் நக்ஷத்திரங்களோடு, உஜ்வலமான அதே நீலிமா (நீல ஆகாயம்) தோன்றுகின்றது—அதுவும் முன்னைவிட நிர்மலமாகவும், நிச்சலமாகவுமிருக்கிறது. கடமையைச் செய்வதற்காக ஜென்மமெடுத்த, என் வாழ்க்கையின் சிறிய சுகம், பெரிய துக்கம், இரண்டும் எல்லைகடந்து எங்கோ போய்விட்டன!

[கல்யாணி வருகிறாள்.]

மான :—யார்? கல்யாணியா?

கல்யா :—ஆம் ராஜகுமாரி!

மான :—மறுபடியும் அதே ராஜகுமாரியா? இப்போது தான் உனக்கும் எனக்கும் புதிய சம்பந்தம் ஏற்பட்டுவிட்டிருக்கிறதே! ஏன் மறுபடியும் அழ ஆரம்பித்துவிட்டனை தங்காய்? சீ! அழாதே!

கல்யா :—இல்லை அக்கா! இனி நான் அழவில்லை. என்ன செய்வேன்?—சகிக்க முடியவில்லையே! அதனாலேதான் உன்னிடம் ஓடிவந்தேன்—எனக்குத் தைரியத்தைக் கொடு!

மான :—தருகிறேன்; நீ உன் துக்கங்களையெல்லாம் எனக்குக் கொடுத்துவிடு; என் சுகங்களனைத்தையும் நீ யெடுத்துக்கொள்!

கல்யா :—உன் சுகங்களையா?

மான :—ஆம்; என் சுகங்களைத்தான். துக்கமானது, ஆரம்பத்தில் என்னை அப்படியே கசக்கிப் பிழிந்துவிட வந்தது. முடியவில்லை; இனியும் முடியாது. மிலேச்ச மிருகத்தை வசமாக்குவதுபோல், துக்கத்தை நான் என் வசமாக்கிக்கொண்டிருக்கிறேன்—இனி அதனிடமிருந்து வேலையும் வாங்குவேன். துக்கம் எனக்கு ரொம்ப உபகாரஞ் செய்திருக்கிறது. இதுவரை, நான் சுக சாம்ராஜ்யத்தின் சௌகுணமான பிரஜையா யிருந்தேன். துக்க ராஜ்யம், அந்தகாரம் நிறைந்ததாகவும், குகையைப்போல் திக்குத் திசை தெரியாததாகவுமிருந்தது. என்றாலும் அதிலேதான் நான் வாசஞ் செய்ய ஆரம்பித்திருக்கிறேன். சத்துருவைச் சந்தேகமின்றி அறிந்து, அவன் அந்தரங்கங்களை

யெல்லாம் நன்ருய்த் தெரிந்துகொண்டுவிட்டோ மேயானால் அப்புறம் அவன் என்னை அசாவதா னமாய் விழுத்தமுடியுமா? இவ்வளவு காலம் அருகுறையாயிருந்த என் ஜீவியம் இப்போது தான் பூரணமடைந்திருக்கிறது.

**கல்யா** :—நீ தன்யமடைந்துவிட்டாய் அக்கா!

**மான** :—நீயும் தன்யமடைவாய் கல்யாணி!

**கல்யா** :—எப்படி என்னால் தன்யமடைய முடியும் அக்கா?

**மான** :—ஏன் முடியாது? எனக்கு நீ இந்த வேலையில் உதவி செய்! நீயும் நானும் சேர்ந்து மனித ஜாதியை உத்தாரணஞ் செய்கிற வேலையில் நம்மை நாமே அர்ப்பணித்துவிடுவோம்! அப்போதுதான் 'கல்யாணி' என்கிற பேர் உனக்குப் பொருந்தும்—சகாயஞ் செய்கிருயா தங்காய்?

**கல்யா** :—செய்கிறேன் அக்கா!

**மான** :—நல்லது கல்யாணி! அப்புறம் பார் தைர்யம் உண்டாகிறதா இல்லையா என்று? இந்த விரதம் எடுத்தவர்களைத் துக்கம் அணுகாது!

**கல்யா** :—எனது வீண் காதல்? உனது ஊழியத்தால் கிருதார்த்தமடையட்டும்!

**மான** :—அப்படியானல் நீ இன்னும் மஹபத்தானை வெறுக்கிருயா?

**கல்யா** :—அக்கா! அன்றைக்கு நான் அளவு கடந்த அபிமானத்தால் அவருக்கு முன்னே நின்று "உம்மை நான் வெறுக்கிறேன்" என்று கடுமையாய்ப் பேசிவிட்டு வந்தேன். ஆனல் அவரை வெறுத்து

அவருக்கு விரோதமாய் என்னால் ஒன்றுஞ் செய்யமுடியாதென்பது இப்போதுதான் தெரிந் தது. பால்ய காலத்திலிருந்து எவரை நான் தியா னித்துத் தியானித்து இவ்வளவு பெரியவளானேனோ, யௌவன காலத்தில் யாரை எனது வாழ்க்கையின் துருவதாரகையாக்கிக் கொண் டேனோ, இந்த துக்கம் நிறைந்த அந்தகாரத்திற் கூட, யாருடைய சிந்தனையானது எனது அந்த ரங்கத்தில் அடிக்கடி உண்டாகிக்கொண் டிருக்கி றதோ அவருக்கு விரோதமாய் என்னால் ஒன் றுஞ் செய்யமுடியாது—அது வெறும் பேச்சுமாத் திரமேயாகும்.

மான :—அவரை வெறுக்கவேண்டுமென்கிற அவசியம் என்ன இருக்கிறது கல்யாணி? நீ உனது பிரே மையை மனுஷ்யத்துவத்தின் மீது—சர்வ மனுஷ சமாஜத்தின் மீது வியாபிக்கச்செய்! அப்போது புருஷ காதலானது விஸ்வ காதலாக மாறும், சாந்தமும் உண்டாகும். அந்த விஸ்வ பிரேமை கைம்மாறு எதையும் எதிர்பார்ப்பதில்லை—கைம் மாறாக எதையும் ஏற்பதுமில்லை. பாத்திரா பாத் திரம் பார்ப்பதில்லை; இவன் யோக்கியன், அவன் அயோக்கியன் என்று தாரதம்மியப்படுத்துவது மில்லை—சேவை செய்து சுகமடைவது ஒன்றைத் தான் அது கருதுகிறது.

[சத்தியவதி வருகிறாள்.]

சத்ய :—மானவி! உன்னை உன் அப்பா அழைக்கிறார்!

மான :—அவர் திரும்பி வந்துவிட்டாரா?

சத்ய :—ஆம்.

மான :—மொகலாயர்களோடு சமாதானமாகிவிட்டதா?

சத்ய :—இல்லை. சமாதானத்துக்காக ஷாஜாதா குர்ரம் ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அதில் குறிப்பிடப்பட்டிருந்த ஷரத்துக்கள் வெறும் ஆகாசக் கோட்டைகளாகவும், ஏமாற்றமாகவுமிருந்தன.

மான :—ஏன்?

சத்ய :—(சிறிது நேரம் சிந்தனை செய்துவிட்டு) மானவி! சமாதானமென்பது சரிசமானமானவர்களுக்குள்ளேதான் சம்பவிக்க முடியும். கையோடு கை சந்திக்க முடியுமேயொழியக் காலுந் தலையும் எங்காவது சந்திக்க முடியுமா? கோட்டையை விட்டு வெளியேவந்து சக்கிரவர்த்திக்கு, ராணாஜீ ராஜவிசுவாசப் பிரமாணம் செய்துகொடுக்க வேண்டுமென்று ஷாஜாதா விரும்புகிறார். ஆனால் மானவி! ராணா பிரதாப சிம்மருடைய புத்திரர், இந்த அவமானத்தை யேற்றுக்கொள்வதைவிட இறப்பதே மேல் என்று எண்ணுகிறார்.

மான :—அப்படியானால் அப்பா என்ன செய்யப்போகிறார்?

சத்ய :—எல்லாச் சாமந்தர்களையும் அழைத்து இன்று ராணாஜீ, ராஜ்ய பாரத்தைத் தமது மகன் வசம் ஒப்படைத்து, அவரைச் சிம்மாசனத்தில் ஏற்றி வைத்துவிட்டார். இனி ராணியும் அவரும், வானப் பிரஸ்தமாக வனவாசஞ் செய்யப்போகிறார்களாம். அவ்வளவுதான் மானவி! மீவாரம் வீழ்ச்சியடைந்துவிட்டது.

மான :—மீவார வீழ்ச்சி யென்ன இன்றுதானு ஆரம்பமாயிற்று? அநேக நாட்களுக்கு முன்னதாகவே அது ஆரம்பித்துவிட்டது. ஆனால் இப்போதேற்பட்டிருக்கிற இவ்வீழ்ச்சி, அந்தப் பரம்பரையின் ஒரு சிறு சம்பவமேயாகும்.

சத்ய :—உண்மையான வீழ்ச்சி யெப்போது ஆரம்பமாயிற்று?

மான :—என்றைக்கிருந்து மீவாரம் தன் கண்களைத் தானே கட்டிக்கொண்டு, அக்ஞாநத்தின் கையைப்பற்றிக்கொண்டு, அதபாதாளத்தை நோக்கிச் செல்ல ஆரம்பித்ததோ அன்றைக்கிருந்து அது சிந்திக்கக்கூடிய சக்தியையும், அறியக்கூடிய ஆற்றலையும் இழந்துவிட்டது. தடாகத்திற்குத் தண்ணீர் வரும் வழி திறக்கப்பட்டிருக்கும் வரை தண்ணீர் சுத்தமாயிருக்கிறது—மேல் வரத்து அடைபட்டுவிட்டதானல் தடாகத்தில் பூச்சி புழுக்கள் பலுகத் தொடங்குகின்றன. மீவார ஜாதியில் மிகுதியான சுயநலமும், நீசமான குரோதப்பான்மையுங் குடிகொண்டு, சகோதர துரோஹம், ஜாதீய துவேஷம் முதலிய தோஷங்கள், பூரணைச் சந்திரனை ராகு கேதுக்கள்பிடிப்பதுபோல் பிடித்திருக்கின்றன. பூர்வ காலத்து உதார—அதி உதார ஹிந்து தர்மம், இப்பொழுது கொஞ்சங் கொஞ்சமாய்ச் செத்துக்கொண்டிருக்கிறது—அந்த ஸ்தானத்தில் ஆச்சாரங்கள் என்று சொல்லப்படுகிற சைத்தான்கள் அரசுபுரிகின்றன. தர்மம் போய்

விட்டானால் வீழ்ச்சி நிச்சயந்தானே? ஹிந்து ஜாதியின் மீது ஏறியிருக்கிற பாபம், இவ்வளவு அவ்வளவென்று கணக்கிடமுடியுமா? மீவார வீழ்ச்சிக்காக வியர்த்தமாய் அழுவதில் என்ன பயன் இருக்கிறது?

சத்ய:—அப்படியானால் இத்துக்கத்திற்கு நிவிர்த்தியில்லையா மானஸி!

மான:—இருக்கிறது. ஆனால் அது மீவார உத்தாரணத்தில்லை. வீழ்ந்த மீவாரம் வீழ்ந்தே கிடக்கட்டும். அதைப்பிடித்து நிறுத்துவதைவிடப் பெரியசம்பத்தை நான் உண்டாக்குகிறேன். நீ தியாகமாகிற சகோதரனுடைய பலத்தைக்கொண்டும், சரித்திர வல்லபத்தைக்கொண்டும், சக்திமான்களாயிருக்கிறவர்களின் துக்கத்தையும், நிராசையையும் துருவதாரகையாகக்கொண்டும் எதிரிலிருக்கிற இருட்காட்டைக் கடக்கவேண்டும். வேறு உபாயமில்லை. வெறுமனே துக்காதிக்கர்களாய்த் துயரப்பட்டுக் கொண்டிருப்பதினாலும் பயனில்லை.

சத்ய:—சகோதரர்கள் சர்வ நாசமாகிக்கொண்டிருக்கும் போது துக்கப்படாமலெப்படி யிருக்கமுடியும்?

மான:—துக்கத்துக்காகத் துக்கப்பட்டாலதென்ன? துயரந்தீர்ப்பதற்கு ஏதேனும் உபாயந் தேடவேண்டும். அதற்காக நாமெடுத்துக்கொள்ளுகிற பிரயத்தனத்தால் நமக்குக் கிருதார்த்தமேற்படவில்லையானால் அதற்கு நாம் பொறுப்பாளிகளல்ல. ஈஸ்வரனுடைய மங்களகரமான நியமம் முழுதும் நடக்

கட்டுமென்று அவன் தலையிலே சகல கவலைகளை யும் போட்டுவிட்டுச் சும்மா இருக்கவேண்டியது தான். தனி மனிதனைவிட ஜாதி யுயர்ந்ததாயிருப்பதுபோல், ஜாதியைவிட மனிதத்துவம் பெரிதாயிருக்கிறது. அப்பேர்ப்பட்ட மனுஷ்யத்துவத்துக்கு விரோதமாயிருக்கிற ஜாதி, மனுஷ்யத்துவமாகிற மஹா சமுத்திரத்துக்குள் அமிழ்ந்துவிடுவது நலம். மேலும் மனுஷத்துவத்தை இழந்திருக்கிற தேசமும், தேச சுதந்திரமும் மூழ்கிவிடுமானால் மூழ்கட்டும்! அதற்கு நிவர்த்தி மார்க்கம் அந்த ஜாதியிலும், அந்தத் தேசத்திலும் மறுபடியும் மனிதத்துவத்தை யுண்டாக்குவதுதான்.

சத்ய :—அப்படியும் ஆகமுடியுமா மன்னவி?

மான :—ஏன் ஆகமுடியாது? நாமெல்லாம் முதலில் அதனைச் சாதனை செய்து பார்ப்போம்! உச்ச சாதனை பெறுவும், எப்பொழுதும் பயனற்றதாகிவிடாது. இந்த ஜாதியை மறுபடியும் மனிதர்களாக்குவோம்!

சத்ய :—எப்பொழுது?

மான :—எப்பொழுது இந்த ஜனங்கள் தாங்களிருக்கிற சிறிய எல்லையைவிட்டு வெளியேறி, ஆச்சாரங்களாகிற குடிலப் பிரவிர்த்திகளை யுதறி யெறிந்துவிட்டு, ஸ்வயம் தாங்களாகவே சிந்திக்கவும் விசாரிக்கவுந் தொடங்குகிறார்களோ, என்றைக்கு இவர்களிடமிருக்கிற அந்தர பாவங்கள் மனுஷத்துவ மஹா சமுத்திரத்தை நோக்கிப் பிரவஹிக்க

ஆரம்பிக்கிறதோ, எப்பொழுது இவர்கள் நல்ல தெது, கெட்ட தெதுவென்று பகுத்தறிந்து, நல்லதை நிர்பயமாய்ச் செய்யவும், கெட்டதைப் பயமின்றி யெதிர்க்கவும் எண்ணுகிறார்களோ, என்றைக்குப் பிறருடைய கோபத்தையும் தன்னுடைய லாபத்தையும் பாவாயில்லையென்று பாவிக்கிறார்களோ, அன்றைக்கு இவர்கள் யுக யுகாந்தரங்களின் பழுத்த இலைகளைத் தூர எறிந்துவிட்டுப் புதிய தர்மத்தைக் கிரஹிக்கத் தொடங்குவார்கள்!

சத்ய :—அந்தப் புதிய தர்மம் யாது? எப்பேர்ப்பட்டது?

மான :—அதற்குப் பிரேமையென்று பெயர்!—பிரேமையாகிற அன்பு மார்க்கம் அது. அம்மார்க்கத்தை உபாசனை செய்கிறவர்கள் 'நான்' 'என்னது' என்கிற சுயநலச் சிந்தனைகளை விடுத்துச் சகோதரர்களோடும், ஜாதியோடும், சமுதாயத்தோடும், சர்வ மனிதர்களோடும், எல்லாவற்றிற்கும் மேலாய் மனிதத்துவத்தோடும் ஒன்றுசேர்ந்து ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி அமரர்களாய் வாழ்வார்கள்! ஆறுகாலமும் ஆண்டவனை தியானித்துவிட்டு அவனுடைய சந்தானங்களில் ஒருவனுக்கு ஒரு தீமை செய்தாலும் போதும், அந்த ஆறு தியானமும் பயனற்றதாகிவிடும். ஒரு ஜாதியின் உன்னதம், அந்த ஜாதியார் பிரவஹிக்கச் செய்கிற ரத்த ஆற்றின் அளவைப் பொறுத்ததில்லை—பிரேமபூர்வமாய்ப் பரஸ்பரம் ஒருவரையொருவர் ஆலிங்கனஞ் செய்துகொள்வதைப்

பொறுத்திருக்கிறது. இது சைதன்யதேவருடைய மார்க்கம்—இதைப் பின்பற்றித்தான் நாம் சைதன்யமடையவேண்டும். இல்லையானால் ஸ்வயம் நீசர்களாகவும், குடிலர் (வஞ்சகர்) களாகவும், சுயநலமிகளாகவுமிருந்து, ராணா பிரதாப சிம்மருடைய அழித்தல் மார்க்கத்தை அனுஷ்டித்து, ஜென்ம ஜென்மாந்திர முழுதும் அழுது கொண்டிருக்கவேண்டியதுதான்.

[எல்லோரும் போகின்றனர்.]

(காட்சி முடிவு)

---

## எட்டாங் காட்சி.

---

இடம் :—உதய சாகரக் கரை.

காலம் :– மாலை.

[இடி முழங்குகிறது; அமர சிம்மன் ஏகாந்தமா யிருக்கிறான்.]

ராணா :— மீவாரத்தின் சித்தாகாசம், குரோதத்தால் கர்ஜித்துக்கொண்டிருக்கிறது. மீவாரத்தின் மீசுர பர்வதங்கள், வெட்கத்தால் முகமிறங்கி நிற்கின்றன. மீவாரத்தின் சரோவரம் (தடாகம்) சோகத்தால் விம்மிக் கரைகளில் முட்டி மோதிக்கொண்டிருக்கிறது. மீவாரத்தின் குலதேவதைகள், ரோஷத்தால் முகத்தைத் திருப்பிக்கொண்டிருக்கின்றன. இன்றைக்கு என் கைகளால் எனது மீவாரம்—வீழ்ச்சியடைந்துவிட்டது. (அங்கும் இங்கும் உலவுகிறான்.)

[மஹபத்கான் வருகிறான்.]

ராணு :—அடியேன் நமஸ்காரம் ஜனுப் !

மஹ :—மீவார ராணுகி ஜே !

ராணு :—ஜனுப் சேனுபதி சாஹிப்! வெறும் ரத்த நதி பிரவஹிக்கச் செய்ய மாத்திரமல்ல, கேலி செய்யவும் நீர் நன்றாய்க் கற்றிருக்கிறீர்! "மீவார ராணுகி ஜே!" யா?

மஹ :—இல்லை மஹராஜ்! நான் கேலி செய்யவில்லையே!

ராணு :—நீ கேலி செய்வதாலோ, செய்யாமலிருப்பதாலோ எதுவும் ஆகிவிடாது மஹபத்கான். உன்னை நான் ஒருமுறை நேருக்கு நேராய்ச் சந்திக்க விரும்பினேன்.

மஹ :—ஏன் மஹராஜ்? உத்தரவிடுங்கள்! என்னால் என்ன ஆகவேண்டும்?

ராணு :—நீ ரொம்ப வினயசாலி! வினயமாகப் பேசுகிருய்! நான் உன்னை யழைத்தகாரியம் உன்னுலேதான் ஆகவேண்டும்—வேறு யாராலும் முடியாது.

மஹ :—உத்தரவிடுங்கள் மஹராஜ்! நீங்கள் காலாலிடுகிற கட்டளையைத் தலையாற் செய்துமுடிக்கிறேன்.

ராணு :—மஹபத்கான்! என்னை ஒருமுறை எறிட்டுப் பார்த்துச்சொல்! நான் யார்? உனக்கு நான் என்ன முறையாகவேண்டும்?

மஹ :—சகோதர முறை; நான் உங்கள் தம்பி மஹராஜ்!

ராணு :—தம்பியா? ரொம்பச்சரி. தம்பிக்கு யோக்கியமான காரியத்தைத்தான் நீ செய்திருக்கிருய். பகவான் ராமச்சந்திர மூர்த்தியிலிருந்து வாழையடி வா

றையாய் நமது முன்ஞேர்கள் வாழ்ந்த மீவார பூமியை, மொகலாயர்களின் பதகளித (காலடியில்) மாக்கிவிட்டாய்; உனது இரண்டு காங்களும் ரஜபுத்திர ரத்தத்தாற் கறைபிடித்திருக்கின்றன.

மஹ:—மஹராஜ்! நான் பாதுஷாவின் உப்பைத் தின்றேன்.

ராணு:—எவ்வளவு காலமாய்? எவ்வளவு காலமாய் இந்த ஞானம் உனக்கு வந்தது மஹபத்கான்? போகட்டும்; உன் வேலையை நீ செய்தாய் என்றே வைத்துக்கொள்வோம். அதற்காக உன்னேடு விவாதம் செய்வது வியர்த்தம். எவன் விதர்மியாகிவிட்டானே, எவன் மொகலாயர்களின் பிச்சைச் சோற்றைத் தின்று பிழைக்கிருனே அவனுக்கு இது குற்றமாகத் தோன்ருது. நீ மீவாரத்தை துவம்ஸம் செய்துவிட்டாய்; அது இன்னும் பூர்த்தியடையவில்லை-மீவார ராணுவையும் முடித்துவிட்டால்தான் மீவாரவீழ்ச்சி பரிபூரணமடையும். ஆகையால் இதோ இந்த வாளைப்பிடி! (வாளை முன்னுல் நீட்டுகிருர்.)

மஹ:—ராணுஜீ-

ராணு:—நான் சொல்வதற்கு விரோதமாய் ஒன்றும் எதிர்த்துச் சொல்லாதே! சொன்னுலும் அதை நான் கேட்கப்போவதில்லை. மீவார ராணுவைக் கொல்லுவதால் நீ செய்த குற்றம் அதிகரித்துவிடாது. மேலும் உனக்குப் பிரியமில்லாத காரியத்தைச்

செய்யும்படி நான் சொல்லவுமில்லை. என் ரத்தத்தைக் குடிக்க நீ யெவ்வளவு துடி துடிக்கிறுயென்பது எனக்குத் தெரியும். உனது வலது கரம், என் பிராணனை வாங்குவதற்காகத் துரு துருத்துக்கொண்டிருக்கிறது என்பதையும் நான் அறிவேன்!—என்னை வதஞ் செய்!

மஹ:—மஹபத்கான் அவ்வளவு மனுஷ்ய ஹீனனல்ல மஹராஜ்! இந்த வாளால், நான் மீவார வாசிகளை வதம் செய்தேனென்பதும், இந்தக் கரங்களால் மீவாரக் கிராமங்களில் நெருப்பு வைத்தேனென்பதும், மீவார பூமியை மஸானமாக்கினேனென்பதும் வாஸ்தவம். என்றாலும் நான் அதர்ம யுத்தம் செய்யவில்லை—நியாய யுத்தமே செய்தேன்.

ராணு:—நியாய யுத்தம்? நியாய யுத்தமா இது மஹபத்கான்? ஒரு சிறு ராஜ்யத்தின் கைப்பிடி சைன்யத்துக்கு முன்னால், சாம்ராஜ்யத்தின் விபுல (மஹா பெரிய) சைன்யத்தைக் கொண்டுவந்து நிறுத்தினால்! தீபத்தின் சிறு பொறியை யவிக்கச் சமுத்திரப் பிரவாஹம் வரவேண்டுமா என்ன? ஒரு சிறு குழந்தையைக்கொல்ல நரகவேதனையா வேண்டும்? இவற்றைத்தானே நியாய யுத்தமென்று நீ சொல்லுகிறுய்? போகட்டும்; ஜெயித்தகென்னவோ ஜெயித்துவிட்டாய்! அதிற் கொஞ்ச நஞ்சம் மிஞ்சியிருப்பதையும் பூர்த்தி செய்துவிடு! இந்தா! இது மஹாராணு பிரதாப

சிம்மருடைய வாள். இதையவர் இறக்கும் போது என்னிடங் கொடுத்து "இதற்கு அவமானம் வராமற்பார்த்துக்கொள்!" என்று சொன்னார். ஆனால் நான் அதற்கு அவமானம் உண்டாக்கிவிட்டேன். அந்த அவமானம் எனது ரத்தத்தாற் சுத்தமாகட்டும்!

மஹ :—மஹாராஜ்! மஹபத்கான் கொலையாளியல்ல; யுத்த வீரன்!

ராணா :—நல்லது சுத்தவீர! யுத்தஞ் செய்! பிடி வாளை!

மஹ :—மீவாரத்துக்கு விரோதமாய் வாளெடுப்பதை நான் விட்டுவிட்டேன் மஹராஜ்!

ராணா :—அது எவ்வளவு காலமாய்? வாளெடு மஹபத்! வாளெடு! மீவார மயானத்தில், மீவார மாதாவின் மிருத்து சரீரத்தைச் சுமந்துகொண்டு உன்னோடு தொந்த யுத்தஞ் செய்ய வந்திருக்கிறேன் மஹபத்! வாளெடு!

மஹ :—இல்லை மஹராஜ்! நான் சொல்வதைக் கேளுங்கள்!

ராணா :—இல்லை. நான் எதையுங் கேட்கத் தயாராயில்லை! மிலேச்சா! குலாங்காரா! யுத்தஞ் செய் பார்க்கலாம், உனது எந்த வீரம், எந்த சூரத்துவம், அகில ஆரியா வர்த்தத்தையும் நடுங்கச் செய்ததென்று. நான் உன்னைவிடப்போவதில்லை! அதமனே! நரகப்புழுவே! சைத்தானே!

மஹ :—அப்படியானால் மஹாராஜ்! யுத்தஞ் செய்வோம்! (வாளையுருவி) சாவதான்! சர்வ பாரத தேசத்திலும் மஹபத்கானோடு துவந்துவ யுத்தஞ் செய்



மானவி:-இதென்ன அப்பா! இது என்ன? (மறுபக்கானை நோக்கி) சாந்தமடையுங்கள்!

பக்கம் 237.

யக்கூடிய துணிச்சல்யாருக்காவது இருக்குமானால் அது மஹாராணா அமர சிம்மருக்குத்தான் உரியது.

[இருவரும் வாளை வீசுகிறார்கள்.]

ராணா :— இன்றைக்கு நடக்கும் இந்த யுத்தத்தைப்போல்— அண்ணனுக்கும் தம்பிக்கும் நடக்கிற இந்த அகோர யுத்தத்தைப்போல் இதுவரை இவ்வுலகத்தில் எங்கும் நடந்திருக்க முடியாது. இனிப் பிரளயம் ஏற்படவேண்டியது ஒன்றுதான் பாக்கியிருக்கிறது!

[அவ்வளவில் மானஸி அங்குவந்து இருவருக்கும் மத்தியில் நிற்கிறாள்; கூந்தல் அவிழ்ந்து கிடக்கிறது.]

மான :—இதென்ன அப்பா? இது என்ன?—(மஹாபத்கானை நோக்கி) சாந்தமடையுங்கள்!

ராணா :—விலகு மானஸி! விலகு! இதில் உன் வியவகாரம் வேண்டாம்!

மான :—சாந்தமடையுங்களப்பா! சாந்தமடையுங்கள்! எது சர்வ நாசமடையவேண்டுமோ அது சர்வ நாசமடைந்துவிட்டது. அந்தச் சர்வ நாசத்தைச் சகோதர ரத்தத்தாலா சம்பூரணஞ் செய்வது? சோகத்துக்கு மருந்து கொலையல்ல—மறுபடியும் மனுஷத்துவமடைவதன் மூலமாகவே துக்கத்தை மாற்றவும் சோகத்தை ஆற்றவும் முடியும்!

ராணா :—மனுஷத்துவமடைவதன் மூலமாகவா? அதெப்படி மானஸி?

மான:—சத்ருரு மித்ருரு என்கிற எண்ணத்தை மறந்து, துவேஷத்தை தியாகஞ் செய்து, தன்னுடைய விதியையும், தனது தேசத்தின் விதியையும், விஸ்வ-பிரேமையாகிற சாந்த ஜலத்தாற் சுத்தி செய்து, நாமெல்லாம் மறுபடியும் மனுஷர்களாவ தால்-சாரணிகளே! பாடுங்கள்! நான் உங்களுக் குக் கற்றுக்கொடுத்திருக்கிற அந்த கீதத்தைப் பாடுங்கள்!

[சாரணிகள் பாடுகின்றனர்; மானவியும் அவர்களோடு சேர்ந்து பாடுகிறாள்.]

"உடன்பிறந் தார்களைப் போல்—இவ்
வுலகில் மனித ரெல்லாரும்
இடம்பெரி துண்டு வையத்தில்-இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்?

"உடன்பிறந் தார்களைப் போல—இவ்
வுலகில் மனித ரெல்லாரும்
திடங் கொண்டவர் மெலிந்தோரை—இங்கு
தின்று பிழைத்திட லாமோ?

"தம்பி சற்றே மெலிவானால்—அண்ணன்
தானடிமை கொள்ள லாமோ?
செம்புக்கும் கொம்புக்கு மஞ்சி—மக்கள்
சிற்றடி மைப்பட லாமோ?

"பாருக் குள்ளே சமத்தன்மை—தொடர்
பற்றுஞ் சகோதரத் தன்மை

யாருக்குந் தீமை செய்யாத—புலி
எங்கும் விடுதலை செய்யும். "

ராஜ :—மஹாபத் !

மஹா :—மஹாராஜ் !

ராஜ :—உன் மீது குற்றமில்லை; குற்றம் என்னுடையது தம்பி ! என்னை மன்னிக்கமாட்டாயா !

மஹா :—அண்ணா ! என்னை மன்னியுங்கள் !

[இருவரும் ஆலிங்கனஞ் செய்துகொள்கின்றனர்.]

(காட்சி முடிவு.)

சம்பூரணம்.

# சப்த சரோஜ்.

ஏழு தடாகங்கள் போன்ற

ஏழு கதைகள்.

அற்புத கற்பனைகள்!

ஆச்சர்யக் கதைகள்!

அனுபவிக்கத்தக்க இலக்கியம்!

ஆகர்ஷிக்கக்கூடிய ரஸபாகம்!

அச்சிலிருக்கிறது,

அதி விரைவில் வரும்!